# சங்க இலக்கியத்தில் நிமித்தங்கள்



சுசீலா கோபாலகிருஷ்ணன்

பாலாஜி பதிப்பகம்

# சங்க இலக்கியத்தில் நிமித்தங்கள்

பேரா. (திருமதி) சுசீலா கோபாலகிருஷ்ணன்
எம்.ஏ.,எம்.பில்.,
தமிழ்த்துறை
யாதவர் கல்லூரி, மதுரை-14

**சங்க இலக்கியத்தில் நிமித்தங்கள்**
**(ஆய்வு நூல்)**

---

☐ ஆசிரியர்: பேரா. (திருமதி) சுசீலா கோபாலகிருஷ்ணன், எம்.ஏ., எம்.பில்., தமிழ்ப்பேராசிரியர், யாதவர் கல்லூரி மதுரை-625014
☐ உரிமை: ஆசிரியருக்கு ☐ வெளியீடு: பாலாஜி பதிப்பகம்., 5, கக்கன் தெரு, ஷெனாய் நகர், மதுரை-625 020
☐ முதற்பதிப்பு: பிப்ரவரி 1987 (23-2-87)
☐ அச்சும் அமைப்பும்: பண்ணை பிரிண்டர்ஸ், 14, பூக்கார சந்து, மேலமாசி வீதி, மதுரை-1 ☐ அட்டை: ஷாஜகான்

---

**விலை: ரூ. 12**

**இந்நூல்...**

---

என்னை ஈன்று வளர்த்து ஆளாக்கிய

என்னருமைப் பெற்றோர்

திருமிகு

## பொ. வெள்ளைச்சாமிக்கோனார்

## திருமதி சுந்தரம்பாள்

---

**நினைவாக...**

# உள்ளடக்கம்

**இயல்** **பக்கம்**


வாழ்த்துரை
மதிப்புரை
அணிந்துரை
என்னுரை
சுருக்கக் குறியீடு
1. முன்னுரை 1
2. நாள் நிமித்தம் 7
3. புள் நிமித்தம் 19
4. ஏனைய நிமித்தம் 31
5. மாந்தர் தொடர்பான நிமித்தங்கள் 47
6. தெய்வம் தொடர்பான நிமித்தங்கள் 67
7. முடிவுரை 85
துணைநூற்பட்டியல் 88

# வாழ்த்துரை...

முனைவர். முத்துச் சண்முகம் பிள்ளை
பி.எஸி , எம்.ஏ.,எம்.லிட்.,பி எச்டி.
முன்னாள் பேராசிரியர்,
தலைவர், தமிழியல்புலம்
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்

O

7/332. "மாதவி," காந்தி தெரு,
சர்வோதய நகர், மதுரை-625019

O

திருமதி சுசீலா கோபாலகிருஷ்ணன், நாட்டார் வழக்காற்றியலில் எவரும் தொடாதஒரு பகுதியாகிய 'சங்க இலக்கியத்தில் நிமித்தங்கள்' என்ற தலைப்பில் இந்நூலினை எழுதியுள்ளார். இதுவரை இதைப் பற்றி அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சிற்சில குறிப்புக்களே எழுதப்பட்டு வந்தன. முழுமையாகத் திரட்டி வகைப்படுத்தும் முயற்சி எதுவும் நடைபெறவில்லை. அம்முறையில் இதுவே முதல் நூல். மொத்தம் ஏழு பகுதிகளைக் கொண்ட இந்நூலில் முன்னுரையும் முடிவுரையும் நீங்க மற்ற ஐந்து இயல்களில் நிமித்தங்களை வகைப்படுத்தி ஆராய்கின்றார்.

இரண்டாவது இயலில் நாள் நிமித்தங்களை நாள்மீன், கோள்மீன் எனப் பிரிக்கின்றார் மூன்றாவது இயலில் 'புள்' என்ற சொல் பறவை, பொதுவாக நிமித்தம், புள் நிமித்தம் என்ற மூன்று பொருள்களில் வருவதையும் அவற்றின் இயைபினையும் கூறு

கிறார். நான்காவது இயலில் ஏனைய நிமித்தங்களைக் கூறு கிறார். இதில் விலங்குகள், மரங்கள், ஊர்வன, பூச்சி இவை நிமித்தங்களாக வருமாற்றைக் கூறுகிறார். இவ்வியலையும் இந்நான்கு பகுதிகளாகப் பிரித்து வகைப்படுத்தலாம் போலும். அய்ந்தாவது இயல் மரம் தொடர்பான நிமித்தங்களைக் கூறுகிறது. ஆறாவது இயல் தெய்வம் தொடர்பான நிமித்தங் களைக் கூறுகிறது. ஏனைய நிமித்தங்களை இறுதியில் கூறி யிருந்தால், இவை ஒழிந்த ஏனைய நிமித்தங்கள் எனக் கொள்ள வாய்ப்பாய் இருந்திருக்கும்.

சங்க இலக்கியப் பாக்களுக்கு உரை ஆசிரியர்கள் கூறும் விளக் கங்களை அடிப்படையாகக் கொள்கிறார். வேறு வழியும் இல்லை. மூலந் தோன்றிய காலத்திற்கும் உரையாசிரியர் காலத்திற்கும் இடையீடு மிகுதி. இக்கால எல்லையில் மாற்றங்கள் பல நிகழ்ந் திருக்கலாம். இக்கால நிமித்தங்களோடு இவை ஒத்தும் மாறு பட்டும் வரலாம். குறிப்பிட்ட பொருள்கள் குறிப்பிட்ட சிற்சில நிமித்தங்களுக்கே பயன்படலாம். இந்நூல் இவை போன்ற சிந்தனைகளில் மேலும் சிந்திக்கத் தூண்டுகிறது.

ஆசிரியருடைய முதல் முன்னோடி முயற்சி சிறப்பாக அமைந் திருப்பதற்கு அவரைப் பாராட்டுகிறேன். தொடர்ந்து இத்துறை யில் நூல்கள் பல எழுதி இத்துறையினை வளர்க்க வாழ்த்து கிறேன்.

—முத்துச் சண்முகன்

மதிப்புரை

# தமிழாய்வில் ஒரு நன்னிமித்தம்

முனைவர் தமிழண்ணல்
தமிழ்த்துறைத் தலைவர்
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்

திருமதி சுசீலா கோபாலகிருஷ்ணன் யாதவர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியை அவர் மதுரை காமராசர் பல்கலைக் கழகத் தமிழியல்துறையில் எம்.பில். பட்டத்திற்குப் பயின்ற போது, உருவாக்கியளித்த ஆய்வேடே இந்த நூலுருப்பெற்றுள்ளது.

நாட்டுப்புறவியலாய்வு என்பது மிகப் பரந்துபட்டது. மக்களின் பழக்கவழக்கம், நம்பிக்கைகள் யாவும் மக்கட் பண்பாட்டாய்வாக அதனுள் அடங்கும். நிமித்தம் பற்றிய ஆய்வுகள் நம்பிக்கையாய்வின் உட்கூறாவன. இவை மாந்தனின் தொன்மை வரலாற்றைத்தொடும் மானுடவியலோடும், மக்கள் நாகரிகம் பண்பாட்டை அளந்தறியும் சமூகப் பண்பாட்டியலோடும் தொடர்புடையவை. இவ்வகையில், தமக்கு முன் தோன்றிய இத்துறை சார்ந்த பொது ஆய்வுகளைக்கற்று, இச்சிறு சிறப்பாய்வை நிகழ்த்தி எதிர்காலத்தில், நுட்பமான எல்லைகளைத் தேடும் ஆர்வத்தையும் தூண்டுமாறு இவ்வாய்வேட்டைத் திருமதி சுசீலா படைத்துள்ளார்,

இவ்வகையாய்வுகளால் ஒருண்மை புலனாகிறது. தீநிமித்தம் நன்னிமித்தம் பார்க்கின்ற மரபுகளும் நாள்கோள்களால்

சாதகம்' கணிக்கும் மரபுகளும் மக்களின் குருதியில் ஊறி, நெடு நாட் பழக்கத்தால் நிலைத்து, அவரவர் தம் சொந்த மரபுகளாகவே தோன்றி வளர்வன. மேற்கத்தியர் 'பதின்மூன்று' என்ற எண்ணை வெறுப்பதும் சப்பானியர் 'நான்கு' என்ற எண்ணை அவலக் குறியாகக் கருதுவதும் அவரவர் தம் இயல்பால் தோன்றி, பழக்கமாகிப் போனவை, இத்தகையவற்றை வெளியிலிருந்து பிறர் புகுத்துவதென்பது மிகவும் அரிது. எனவே மூடநம்பிக்கைகள் பலவற்றை, திராவிடர்மீது ஆரியர் புகுத்தியது என விவாதிப்பது தவறு. அவை திராவிடர்களுடையனவே என்பதால், ஏற்றுக் கோடற்பாலன என்ற கருத்தும் ஏலாது. ஆயினும் அவை ஆய்விற்குப் பயன்படுவனவே.

மானுடவியலோடும் நன்கு சார்த்தி ஆராய்வோமாயின் இந் நம்பிக்கைகள் பல முதலில் காரணத்தோடு கூடிய, பகுத்தறிவு வழிப்பட்ட நம்பிக்கைகளே; பின்னர் தான் இவை காரணமின்றியும் கைக்கொள்ளப்பட்டு மூட நம்பிக்கைகளாயின. வீட்டில் பூசை செய்யும் பொழுது, செம்பிலிருந்த பாலை வீட்டுப் பூனை கொட்டிவிட்டதால் அதைக் கட்டிவைத்துவிட்டே பூசையைத் தொடங்குவது ஒருவர்க்கு வழக்கமாயிற்று. பின்னர் அவர் இறந்து போன காலத்தில், மகன் பூசைசெய்யத் தொடங்குங்கால் சில நாட்களில்பூனையும் இறந்துபோயிற்று. அம்மகனோ, 'பூனையைக் கட்டிவைத்து விட்டல்லவா பூசை செய்ய வேண்டும்' என்று அடுத்த வீட்டுப் பூனையைக் கடன் வாங்கி வந்து, கட்டிவைத்துவிட்டுப் பூசை செய்தானாம். அதுதான் மூடநம்பிக்கை. தந்தையிடம் பகுத்தறிவோடு கூடிய செயலாக இருந்ததே மகனிடம் மூடநம்பிக்கையாக உருப்பெற்றது. மண் குடிசையிலிருந்த பொழுது, வீட்டைச் சாணியால் மெழுகிச் சுத்தம் செய்து, விளக்கேற்றுவது முறையே; அப்போதுதான் மண் இறுகித் தரை உறுதிப்படும். நல்ல சிமித்தி அல்லது பளிங்குத் தரையிலும் சாணியால் மெழுகுவது, மூடநம்பிக்கையாகும். நல்ல நம்பிக்கைகளே காலப்போக்கில் மூட நம்பிக்கைகளாகின்றன. மாந்தனின் மனப் பழக்கமே இதற்கு அடிப்படையாகும். உளவியலாய்வுக்குக் களமாகும். இது மேன்மேலும் ஆராயப்படுவதன் மூலம், மாந்தனின் மனநல வாழ்வுக்கு வழிகாட்டும் பல உண்மைகளைத் தரக்கூடும். எனவே சிலர் கருதுவதுபோல இவ்வகை ஆய்வுகள் கொள்ளத் தக்கனவேயன்றித் தள்ளத் தக்கனவல்ல.

**சங்கத் தமிழரின் நம்பிக்கைகள்**

சங்க கால மக்களின் நம்பிக்கைகள் சில, திருமதி சுசீலா அவர்கள் காட்டியுள்ளவற்றுள், மிக இயல்பானவையாயுள்ளன,

மற்றும் சில காரணம் காட்டக் கூடியன போல் தோற்றுகின்றன. இவ்வகையில், பிறமொழி பிறநாட்டு ஆய்வாளர்கட்கும் சான்றாகக் கூடிய ஆய்வு மூலங்கள் பல இதிலுள்ளன. மாந்தர் தொடர்பான நிமித்தங்களில் 'கைவளை செறிதலும்' ஒரு நிமித்தமாகும். தலைவன் உறுதியாக வந்துவிடுவான் என்பதை அவை முன்னுரைகின்றன. உறுப்புக்களின் செயல் அணிச்சைச் செயலாகும். வருவான் என்ற நம்பிக்கை வந்ததுமே 'தம்ழிலும் முன்னம் வளை' செறியுமாறு கை பொலிந்து, பூரித்து விடுகிறது. உளம் பற்றிய நிலையே இதற்குக் காரணமாகும் (ப. 54). ஒருவர் புறப்படும்போது அழுவது தீ நிமித்தம் என்பது சொல்லாமலே பெறப்படும். 'சுடர் நுதல் சிறத்தல்' பெண்களுக்கு நன்னிமித்த மாதலும் அறியலாம் (ப. 56). இவையெல்லாம் மிக இயல்பானவை.

'புதுப்புள் வருதலும் பழம்புள் போதலும்' எங்ஙனம் தீநிமித்தமாயின? தொன்மைக் காலத்தில் அவை பருவமாறுதலை வருமுன் அறிவிப்பன. அதனால் விளை பொருளையே நம்பி இருந்த வேளாண் யுகத்தில், அவை நன்மை தீமைகளின் அறிகுறியாகக் கருதப்பட்டமை இயல்பேயாம். விளை பொருள் பற்றியதல்லாத பிறவிடத்தும் பிற காலத்தும் அப்பழக்கம் மனத்தை விட்டுப் போகாதது மனத்தின் குற்றமா? மனிதனின் குற்றமா? (ப.22) காக்கை கரைவது புதிய காக்கைகளைக் கொணர்வதால், புதிய விருந்தினரையும் கொணரும் என அதைக் கேட்ட மனிதன் நம்புதல், ஏதோ ஒப்புமையாக்கம் போல் உள்ளது. ஒரு காக்கை கத்தியதும், முகட்டுமேல் எத்தனை காக்கைகளைப் பார்க்கிறோம். அது விருந்து வருமென அறிவிப்பதாகக் கருதுவது, ஒரு நினைவோட்டமாகவே கருதத்தக்கது. ஆனால் 'கழுதை கத்துவது' நல்ல சகுனம் என்றால் நமக்கு விளங்கவில்லை. அதற்கும் ஒரு காரணம் இல்லாமலா தோன்றியிருக்கும்? குடியில் பலகாற் கூவல் நன்னிமித்தமாதலும் ஆந்தை அலறல் தீநிமித்தமாதலும், இயல்பானவையே. ஆனால் 'நாரை உயரப் பறந்தால் நன்னிமித்தம்' என்னும் போது காரணம் விளங்கவில்லை. நமக்குத் தெரியாததற்காக அதுகாரணமின்றித் தோன்றியதெனல்சாலாது.(ப. 28).ஏதோ ஒரு காரணத்தால் இவை தோன்றி வழக்கமாயின. மனிதனுக்கு மன ஆறுதல், தேறுதல் தேவைப்படும் பொழுதும் தளர்ச்சி பெற விழையும் பொழுதும் இந் நிமித்தங்கள் உதவி செய்துள்ளன.

மனவுறுதி மிக்கார்க்கு இவை தேவைப்படா. சங்க காலத்தும், 'புள் இடை தட்பதைப் பற்றிக் கவலைப் படாதவர்கள்' இருந்துள்ளார்கள்.

தமிழர் தம் வானியல்அறிவும்சோதிடவியலறிவும் பற்றிஅறிய இவ்வகை ஆய்வுகள் மிகவும் பயன்படுவன. சூரியனை வைத்து ஆண்டும் மதியை வைத்து மாதமும் நாள்மீனை வைத்து நாளும் குறிக்கப்பட்ட மரபைச் சங்க நூல்கள் பறை சாற்றுகின்றன. வடமொழியில் இக் கலைகள் நன்கு காக்கவும் வளர்க்கவும்பட்டுள் ளன. பல்லவர் காலம் முதல் வடமொழி இத்தகைய தொழில் நுட்ப மொழியாக, கலை நுட்பமொழியாகத் தமிழராலும் பயன்படுத்தப்பட்டுவிட்டது. அதனால் தொன்றுதொட்டு அவை வடமொழிப் பெயருடன், வண்ணத்துடன் காட்சி தருகின்றன. உண்மையில் பல்லவர் காலத்திற்கு முன்பிருந்த தமிழரின் அறிவியல்,கலையியல் வளர்ச்சிநிலைகளை ஒருவர் முற்றவும்கணித் தறிதல் வேண்டும். அஃது அவ்வத் துறைகட்குத் தமிழ் நன் கொடையாக நல்கியவை எவை என்பதைத் துல்லியமாகக் காட்ட உதவும். அதற்குப் பல்லவர்க்கு முற்பட்ட காலத் தமிழ் இலக்கியம் கல்வெட்டு முதலியன பற்றிய அடிப்படைகளும் சமஸ்கிருதத்தில் இன்று வரை ஏற்பட்டுள்ள வளர்ச்சி நிலைகளும், ஆதியோடந்த மாக, ஆழமாகத் தெரியவேண்டும். இன்றைய நிலையில் தமிழ் வல்லார்க்குச் சமஸ்கிருதத்தில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி நிலைகள் தெரியா; அவை தெரிந்தார்க்கோ தமிழ் அறவே தெரியாது. இந்நிலையில் குருடும் குருடும் சேர்ந்து குருட்டாட்டம் ஆடும் குழப்பநிலையே எஞ்சியுள்ளது.

தமிழர்களுக்கேயுரிய, தமிழகத்திலே மட்டுமே காணப் படுகிற கோபுரச் சிற்பக் கலைகளையும் பரத நாட்டிய ஆடற் கலைகளையும் நாதசுர இசைக் கலைகளையும் வடநாட்டுக் குரியன, வடமொழிக்குரியன என மூடத்தனமாக விசாரிப்பதற்கு முற்குறிப்பிட்ட குருட்டாட்டமே காரணமாகும்.

'முருகாற்றுப்படை' என்ற தொடரே ஆற்றுப் படைகளுள் முற்பட்டதென்பதை இவ்வாய்வாளர் நன்கு விளக்கியுள்ளார். முன்பு வெறியாடும் வேலன் முருகன் எனவே கருதிப் போற்றப் பட்டான். மலையாள நாட்டில் வேலன் வெறியாட்டம் தொடர்ந்து நிகழ்ந்து வருவதை பி எல். சாமி விளக்குவதை இந் நூல் வழியாகவும் அறிகிறோம். முருகனை வழிபடுவதை முருகன் எனவே போற்றும் சங்ககால மரபுபோலவே,ஐயப்பனை வழிபடு பவர்கள் ஐயப்பன் எனவே போற்றப்படுகின்றனர். ஐயப்ப வழிபாட்டில் 'குருசாமி' ஒருவரைத் தேர்ந்து கொள்ளும் மரபு, வேலன் மரபை ஒத்துள்ளது. காவடி தூக்கலும் இருமுடி சுமத்தலும் ஒப்பிட்டுச் சிந்திக்கற்பாலன. இன்றும் நிலவிவரும்

ஆற்றுப்படை மரபே ஐய்யப்ப மரபு எனச் சுட்டலாம் போல் தோன்றுகிறது (ப க 78-80).

அளவால் சிறியதாயினும் இவ்வாய்வு நூல் சிந்தனையைக் கிளறிவிடும் பெரும் சிறப்புடையதாகும். திருமதி சுசீலா கோபால கிருஷ்ணன் அமைதியாக—நல்ல ஆற்றல் விளங்க இவ்வாய் வேட்டைப் பணித்துள்ளார்எனலாம். அவரது மொழி நடையும் கருத்துத் தெளிவும் போற்றத் தக்க வகையில் அமைந்துள்ளன. இதன் வழி மேலும் பல ஆய்வுகள்—அவர் வழியாகவும் இந் நூலைக் கண்ணுற்றுப் படிப்பார் வழியாகவும் கிளைக்கும் என எதிர்பாக்க வாய்ப்புள்ளது.

மதுரை-20
14-1-87

— **தமிழண்ணல்**

# அணிந்துரை

**முனைவர் மு. தமிழ்க்குடிமகன்**
*முதல்வர், யாதவர் கல்லூரி, மதுரை*

o

எமது கல்லூரிப் பேராசிரியை சுசீலா கோபாலகிருஷ்ணன் அவர்கள் கல்லூரியில் துணைப் பேராசிரியையாக வந்த காலத்தை நினைத்துப் பார்க்கிறேன். இப்போது அவர் எவ்வளவு வளர்ந்திருக்கிறார். தமிழ்த்துறை மேலோங்கி நிற்பதற்கும் சிறந்த ஆய்வு மைய மாக விளங்குவதற்கும் நாம் எடுத்துக் கொள்ளும் முயற்சிக்குப்பெரிதும் உறுதுணை யாக நிற்பவர் இவர். அந்த வகையில் நிறையப் படிப்பவராகவும் வளர்ந்துள்ளார். எம். பில். பட்டத்திற்காக அவர் படைத்த ஆய்வேடு அவரது இந்த ஆர்வத்தை வெளிப் படுத்துகிறது.

மேலும் எம் தமிழ்த் துறையினர் நிறைய நூல்களைப் படைத்து வெளியிட வேண்டும் என்று விரும்புபவன் நான். தங்கை சுசீலா இந்நூல் வெளியிட்டால் தமிழ்த்துறைக்கும் யாதவர் கல்லூரிக்கும் பெருமை சேர்த்துள் ளார்.

'சங்க இலக்கியத்தில் நிமித்தங்கள்' என்பது தலைப்பு. இதைக் கொண்டுவந்து என்னிடம் தந்து அணிந்துரை வழங்க வேண்டும் என்று கேட்ட போது வியப்பு ஏற்பட்டது. ஏனெனில் நிமித்தங்கள் பற்றிய எந்த நம்பிக் கையும் இல்லாமல் நினைத்த எதனையும் அடுத்த நொடியில் செயல்படுத்த வேண்டும் என்று கருதுபவன் நான்.

'சூழ்ச்சி முடிவு துணிவெய்தல் அச்சூழ்ச்சி
தாழ்ச்சியுள் தங்குதல் தீது'

எனவே நேரங்காலம் பார்க்காமல் உழைப்பும் செயற்பாடும் கருதி விரைந்து நடக்கும் என்னிடம் இந்த நூலைக் கொடுத்திருக்கக் கூடாது என்றே நினைத்தேன்.

ஆனால் நூலைப் படித்த பிறகுதான் இதற்கு அணிந்துரை எழுதுவது மகிழ்ச்சியானது என்று கருத முடிந்தது. இஃது ஓர் ஆய்வு. சங்க கால மக்கள் நிமித்தங்கள் பார்ப்பதில் எவ்வளவு ஈடுபாடு கொண்டிருந்தனர் என்பதை நன்கு ஆய்ந்துள்ளார். எனவே இந்த ஆய்வை மதிப்பீடு செய்வதில் இரட்டிப்பு மகிழ்ச்சி.

சில நிமித்தங்கள் அறிவியல் பார்வையுடையனவாகவும் தோன்றுகின்றன. எனினும் பல நிமித்தங்கள் மூட நம்பிக்கை யுடையனவே. ஆனால் இப்போதுள்ள தமிழ்மக்கள் பார்க்கின்ற புதுப்புது வகையான நிமித்தங்களையும் அவற்றின் எண்ணிக்கைக் கணக்கையும் பார்க்கும் போது சங்ககாலம் மிகச் சில மூட நம்பிக் கைகளையே கொண்டிருந்தது எனலாம். அதற்கும் கூடக்காரணம் கடவுட் கோட்பாட்டில் ஈடுபாடு கொண்டிருந்த தமிழ்மக்கள் வீண் ஆரவாரங்களிலும், வெற்றுச் சடங்குகளிலும் தங்களை வீணாக்கிக் கொள்ளவில்லை என்ற உண்மையும் ஆகும்.

உண்மையில் இந்த ஆய்வு சிறப்பாக உள்ளது. ''இன்றைய உலகம் தேவையற்ற கருத்துக்களையும் பழக்க வழக்கங்களையும் விட்டொழித்து முன்னேறும் விரைவுலகம்'' என்ற கருத்தை முன்னுரையில் தெளிவு படுத்தி விடுவதால் அவரது ஆய்விலும் ஒரு தெளிவு இருக்கிறது.

'அறிவியல் வளர்ச்சி ஒரு புறம் இருப்பினும் அன்றுபோல் இன்றும் மக்களிடம் நிமித்தம் பார்க்கும் வழக்கம் இருப்பதைக் காண்கிறோம்' எனும் வரிகள் உண்மை நிலையை உணர்த்து கின்றன.

அறிவியல் கருவிகளின் பெருக்கம் வாழ்க்கையில் நமக்குப் பல ஏந்துகளைத் (வசதிகளை) தந்துள்ளது. அன்றாட வாழ்வில் விரைவும் ஏற்றமும் பெறும் நம்மிடம் அறிவியல் அணுகுமுறை வளர்வதற்கு மாறாக மூட நம்பிக்கைகள் மேலும் பெருகியிருக் கின்றன.

என்றாலும் ஆய்வாளர் நிமித்தங்கள் பார்ப்பதில் தமிழர்க் குள்ள ஆர்வத்தைத் தான் தொகுத்தளிக்க முடியுமே தவிர, சமுதாயச் சீர்திருத்த நோக்கில் அவற்றைத் திறனாய முடியாது.

அந்த வகையில் ஆய்வாளர் தன் ஆய்வினை அழகுபடத் தந்துள்ளார்.

'புள்நிமித்தம்' எனும் பகுதியில் 'புள்' எனும் சொல்லின் விளக்கமும் அதற்கான சான்றுகளும் சிறப்பாக அமைக்கப் பட்டுள்ளன.

கட்டுப் பார்த்தல், கழங்கு பார்த்தல் போன்ற பலவற்றையும் தொகுத்துச் சுட்டும் ஆய்வாளர் இக்காலத்தில் 'பூனை குறுக்கே போதல்' வீட்டில் உள்ள நிலைப்படியோ தாழ்வாரமோ தலையில் தட்டுதல்' போன்ற புதிய நிமித்தங்கள் வளர்ந்திருப்பதையும் மேலும் ஆராய வேண்டும்.பண்டைத் தமிழர்கள் பருவங்கள், ஒரு நாளின் பல வேளைகள்(பொழுதுகள்)ஆகியவற்றைக் கணிப்பதில் தெளிவான அறிவியல் பார்வையுடையவர்களாகவே இருந்தனர். அந்தக் கணிப்பு இன்றும் மாறவில்லை. நாள்மீன், கோள்மீன் பார்த்து அவற்றின் நிலையறிந்து கணிக்கும் நிமித்தங்கள் குறித்து ஆய்வாளர் விரிவாகவே பேசுகின்றார்.

''வெள்ளி என்னும் கோள்மீன் வடதிசைக்கண் இருப்பின் மழை பெய்யும் என நாட்டு மக்கள் நம்பினர் என்பது பெறப் படும். மழை பெய்தலாகிய நன்னிமித்தத்தை உணர்த்தும் அக் கோள்மீனைச் 'சீர்சால் வெள்ளி' எனச் சிறப்பித்தலும் பொருத்த முடையதே'' என்று ஆய்வாளர் தெளிவாகக் கூறியுள்ளார்.

பண்டையத் தமிழர்களிடத்தில் 'பல்லி' எவ்வளவு பெரிய மதிப்பைப் பெற்றுள்ளது என்பதனை இவ்வாய்வின் வாயிலாகத் தெளிவாக உணர முடிகின்றது. தன் பசியுணர்வால் பல்லி இயற்கையாக எழுப்பும் ஒலியைக்கூட நிமித்தமாக்கித் தமிழர்கள் மகிழ்ந்தும், வருந்தியும் இருக்கிறார்கள் என்பது வியப்பான செய்தியாகும். இதுபற்றிய செய்திகளையும் ஆய்வாளர் நன்கு திரட்டி அளித்துள்ளார். மொத்தத்தில் சங்க இலக்கியங்களை நன்கு படித்து அவற்றில் நிற்கும் நிமித்தங்களைக் கண்டறிந்து அவற்றை வகை, தொகைப்படுத்தி நிரல்பட வழங்கியுள்ள ஆய்வாளர் பாராட்டுக்குரியவர்.

இவர் உண்மையில் முயற்சியும், ஆய்வில் ஆர்வமும் உடைய வர். விரைவில் 'அறிஞர்' என்ற பட்டமும் பெற்றுச் சிறக்க வாழ்த்துகிறேன்.

— **மு. தமிழ்க்குடிமகன்**

# என்னுரை

நம் நாட்டு மக்களிடையே நிலவி வரும் நம்பிக்கைகள் மீது எனக்கு ஒரு நம்பிக்கை உண்டு. அவை எல்லாமே ஒரு காலத்தில் காரண காரியங்களோடு ஏற்பட்டவை தான். அந்தக் காரணங்கள் மறைந்து போயினமையால் அவை மூட நம்பிக்கைகளாய் மாறிப்போயின.

இப்படி மக்களிடையே எத்தனை நம்பிக்கைகள் உலவுகின்றன என்று அலசிப் பார்க்க எனக்கு ஆசை. முன்னோடி ஆய்வாக (Pilot Survey) செய்தபோது, நூற்றுக்கணக்கான நம்பிக்கைகள் கிடைத்தன தற்கால மக்களிடையே இத்தனை உள்ளதோ என்று வியந்த நான் பண்டைத் தமிழர்களிடையே உள்ள நம்பிக்கைகளைக் காண, சங்க இலக்கியங்களைப் படித்தேன். அதுவும் கால எல்லைக்குவிஞ்சியதால் நம்பிக்கைகளின் ஒரு பிரிவில் அடங்கக் கூடிய நிமித்தங்களை மட்டும் எடுக்கஎண்ணி, 'சங்க இலக்கியத்தில் நிமித்தங்கள்' என்று தலைப்பிட்டு அறுதியிட்டேன்.

'நிமித்தம்' என்பது பின்னர் வருவதை முன்னர் அறிவிக்கும் குறி. சகுன சாத்திரம்— அறுபத்து நான்கு கலைகளுள் ஒன்றாக உள்ளது. அது அறிவியல் சார்ந்ததே என மெய்ப்பிக்கப் பட்டு வருகிறது.

ஆறறிவு படைத்த மனிதனைக்காட்டிலும் ஐயறிவு படைத்த விலங்கினங்களும் பறவையினங்களும்மற்றும் பூச்சியினங்களும் பின்னர் விளையப் போவதை முன்னறியும் சக்தி

வாய்ந்தனவாக உள்ளன. 'எறும்பு முட்டை கொண்டு திட்டை ஏறின், தப்பாது மழை பெய்யும்' என்பது உண்மை. சிலந்திகள் ஒன்றிற்கொன்று சண்டையிட்டுக் கொண்டால் புயல் வரும். தட்டான் பூச்சிகள் தாழ்வாகப் பறந்தால் மழை வரும்.

பறவைகள் ஓரிடத்தில் அதிகமாக வந்து அடைந்தால், அவ்வாண்டு பழங்கள் அதிகம் பழுக்கும் என நம்பப்படுகிறது. அது உண்மையாகவே இருக்கிறது. இது போலவே, பறவைகள் தாம் வழக்கமாகத் தங்குமிடத்தில் ஒரு விபத்து நிகழப் போவதை முன்னரே அறிந்து சில காலத்திற்கு முன்கூட்டியே அகன்று போகும் பாம்புகள் கூட்டமாக ஓரிடத்தைக் கடந்து போனால் அந்த இடத்தில் சில நாட்களில் பூகம்பம் நிகழும்என்று கண்டறிந்துள்ளனர். நாய்களுக்கும் இத்தகைய நுட்பமான புலன் உண்டு. ஆகாய விமானத்தளத்தில் வரப்போகும் ஆபத்தை முன்னரே நாய்கள் குரைத்துத் தெரிவித்தன என்று கூறப்படுகிறது.

எனவே, பறவைகள், விலங்குகளின் இயக்கங்களை நிமித்தமாகக் கொள்வது அறிவியலுக்குப் புறம்பான செயல் என்று முற்றிலும் தள்ள முடியாது என்பது என் தாழ்மையான கருத்து. இத்தகைய நிமித்தங்களை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டதில் எனக்குத் தளர்ச்சி இல்லை. நாட்பெற்ற நம்பிக்கைகளையே என் 'பிஎச், டி' ஆய்வுக்குத் தலைப்பாகக்கொண்டு செய்து வருகிறேன்.

**மக்களுக்கு 'நம்பிக்கை மூன்றுவது கை' என்று கூறப்படுகிறது.** நிமித்தம் அல்லது சகுனம் பார்த்தல் என்பது, இன்றும் பாமர மக்களிடம்மட்டுமல்லாது,படித்த மக்களிடமும் காணப்படுகிறது. மேலும் பெண்மக்கள் அதிக நம்பிக்கைகள் கொண்டவர்களாகவும் உள்ளனர்.

பண்டையத் தமிழ் மக்களிடம் காணப்பட்ட பெரும்பாலான நிமித்த வகைகள் இன்றைய மக்களிடமும் விரிந்து காணப்படுவதைக் காணலாம், மருத்துவத்துறையில், நம்பிக்கைகள் மிகவும் நம்பகத்திற்குரியனவாய் உள்ளன. இதனை மூடநம்பிக்கைகள் என்றாலும், அத்தகைய நம்பிக்கை மக்களுக்குத்தேவைப்படுகிறது.

நல்ல காரியங்களுக்கு, நேரம்பார்த்தல்,குறிப்பாக, திருமணங்களை, வளர்பிறையில், நல்லநாளில், நல்லநேரத்தில் முடிக்க வேண்டும் என்பது, இன்றைய மக்களிடமும் காணப்படுகின்றது. சுபகாரியங்களுக்குச் செல்லும் போதும், பயணங்களை மேற்கொள்ளும் போதும், நல்லநேரம் பார்ப்பது அனைவரும் அறிந்த ஒன்றே. அதே வண்ணம், புறப்படும்போது சகுனம் பார்ப்பதும்

காணப்படுகின்றது. எடுத்துக்காட்டாக மணமக்கள் புறப்படும் பொழுது, எதிரில், சுமங்கலிப் பெண் நிறைகுடத்துடன் சென்றால் நல்லது என்பதால், வீட்டுப் பெண்களே, அத்தகைய சூழலை உருவாக்கி, மணக்களை அனுப்பி வைக்கின்றனர்.

மணமக்களுக்கு ஜாதகம் பார்த்தல் என்பது, இன்றும் நடைமுறையில் இருந்து வருகிறது. சிறப்பாக, குழந்தையின் பிறப்பு நேரத்தை வைத்துச் சாதகம் கணிக்கப்படுகிறது. பிறப்பு நேரம் நல்லதாக இருப்பின் அவன் வாழ்க்கை எப்படி இருக்கும் என்று கணிக்கிறார்கள். கரிகாற் பெருவளத்தான், நல்ல முகூர்த்தம் வருமளவும் தன் தாயினுடைய வயிற்றிலே இருந்து பிறந்தான் என்பது நமக்கு, அறிவியலுக்குப் புறம்பானதாகத் தெரிகிறது. ஆனால், இன்றைய நாளிலும், நல்ல நட்சத்திரத்தில் குழந்தை பிறப்பின் நன்று என்ற நோக்கோடு, அறுவை சிகிச்சை மூலம் குழந்தை பிறக்க வேண்டிய சூழலில் உள்ள தாய்மார்கள், நேரத்தையும் முன்கூட்டியே குறிப்பதும், தற்காலத்தில் காணப் படுகிறது.

மனிதனின் உடலுறுப்புக்களில் கண்கள், தோள்கள் துடிப்பது வரப்போகும் நன்மை தீமை என்று நம்புகின்றனர். காளிதாசர் இயற்றிய சாகுந்தலம் என்ற நாடகத்தில், துஷ்யந்தனுக்கு வலக்கண்ணும், வலப்பாகத் தோளும் துடித்தன. சாகுந்தலையைக் கண்டு காந்தருவ முறைப்படி மணந்தான். பொதுவாக ஆண் களுடைய வலப்புற உறுப்புக்கள் துடித்தல் நன்மைக்கு அறிகுறி என எண்ணப்பட்டது.

உள்ளங்கை அரித்தால் பணவரவு என்றும்; உள்ளங்கால் அரித்தால் பயணம் ஏற்படும் என்றும் இன்றைய மாந்தர்களும் நம்புகின்றனர்.

பண்டைய நாளில் 'விரிச்சி' அல்லது நற்சொல் கேட்டல் என்ற பழக்கம் உண்டு. இன்றும், இருவர் உரையாடிக் கொண்டி ருக்கும்போது, மணி அடித்தால், நற்சகுனம் என நம்புகின்றனர். பல்லி ஒலி எழுப்பினால், மூன்று முறை தரையில் விரலால் தொட்டு, தங்களுடைய காரியங்களுக்குப் பதில் கிடைத்ததாக நம்புகின்றனர். ஒரு காரியம் பற்றிப்பேசும் போது கழுதை கத்தினால் நற்சகுனம் என நம்புகின்றனர். இவையெல்லாம் உளவி யல் அடிப்படையில் நோக்கும் போது. மக்களுக்கு ஒரு வகையில் மனநிறைவு ஏற்படுத்தும் செயல்களாகவே உள்ளன.

o o

'சங்க இலக்கியத்தில் நிமித்தங்கள்' என்ற தலைப்பில் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் ஓராண்டுக் காலம், 1979-80 ஆம் ஆண்டு, கல்லூரி வளர்ச்சித் திட்டத்தின் கீழ், 'எம்.பில்' பட்ட ஆய்வினை மேற்கொள்ள வாய்ப்புக் கிட்டியது. அந்த அரிய வாய்ப்பினை நல்கிய பல்கலைக்கழகத்தின் முன்னாள் 'டீன்' (Dean) பேராசிரியர் தி.அ. சொக்கலிங்கனார், எம்.ஏ., எம்.லிட், அவர்களுக்கு முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எம்.பில். பட்ட ஆய்விற்கு, முழுநேர ஆய்வாளராக மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் அனுமதியளித்த, மதுரை, யாதவர் கல்லூரி ஆட்சிக் குழுவினர் அனைவருக்கும் என் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆய்வினைமேற்கொள்ள ஆக்கமும், ஊக்கமும் அளித்த, மதிப்பிற்குரிய கல்லூரி முதல்வர், முனைவர் மு. தமிழ்குடிமகனார், எம் ஏ.பிஎச்.டி., அவர்களுக்கும், அன்புடன் அறிவுரை வழங்கிய, தமிழ்த்துறைப் பேராசிரியர்' முனைவர் இராமலிங்கம் அய்யா எம ஏ.பிஎச்.டி., அவர்களுக்கும் என் நெஞ்சு நிறைந்த நன்றி உரித்தாகுக.

''சங்க இலக்கியத்தில் நிமித்தங்கள்'' என்ற தலைப்பில் ஆய்வு செய்யும்படி பணித்து, அரிய கருத்துக்களை வழங்கி, ஊக்குவித்த மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைப் பேராசிரியர் வணக்கத்திற்குரிய, முனைவர் முத்துச்சண்முகனார், எம்.ஏ., பிஎச்.டி , அவர்களுக்கு என் பணிவான வணக்கங்கள் உரித்தாகுக.

என் ஆய்வேட்டினை அளிக்கும் போது, எனக்கு ஆதரவு அளித்த, மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைப் பேராசிரியர் வணக்கத்திற்குரிய, முனைவர் தமிழண்ணல் எம்.ஏ.பிஎச்.டி., அவர்களுக்கு என் நெஞ்சு நிறைந்த நன்றி உரித்தாகுக.

பேராசிரியர் முனைவர் முத்துச்சண்முகனார் அவர்களும் பேராசிரியர் முனைவர் தமிழண்ணல் அவர்களும், மனமுவந்து முறையே அணிந்துரையும் 'தமிழாய்வில் ஒரு நன்னிமித்தம்' என்ற திறனாய்வுரையும் தந்துள்ளமையை எண்ணி, நான் பெருமிதமும் மகிழ்ச்சியும் அடைகிறேன். அவர்களுக்கு என் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். மதிப்பிற்குரிய பகுத்தறிவாளராகிய என் கல்லூரி முதல்வர் சகுனசாத்திரம் பற்றி அணிந்துரை அளித்தமைக்கு, என் அன்புகலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆய்வு மேற்பார்வையாளராக இருந்து என்னை நெறிப் படுத்திய முனைவர். நா. ஜெயராமன், எம்.ஏ.,பிஎச்.டி., அவர் களுக்கும், முனைவர், மு. இராமசாமி, எம்.ஏ.,பிஎச்.டி., அவர் களுக்கும், என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆய்வுக்குரிய தரவுகளைத் திரட்டிக் கொடுத்து, பல்லாற்றானும் என்னை வழி நடத்திய, அன்புச் சகோதரர், யாதவர் கல்லூரியில் பணிபுரியும் முனைவர். இ.கி. இராமசாமி எம்.ஏ;பிஎச்.டி. அவர் களுக்கும், அவரது துணைவியார் திருமதி.எம்.கஸ்தூரி இராமசாமி எம்.எசி,எம்பில். அவர்களுக்கும் நான் நெஞ்சார்ந்த என் நன்றி யைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாட்டுப்புறவியலில் ஆய்வினை மேற்கொள்ள விரும்பிய எனக்கு 'நம்பிக்கைகள்' என்ற தலைப்பினைத் தேர்ந்தெடுத்துக் கொடுத்த முனைவர் தொ. பரமசிவம் (தமிழ்ப்பேராசிரியர், டாக்டர் சாகிர் உசேன் கல்லூரி இளையான்குடி) அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றி உரித்தாகுக.

இறுதியாக, இவ் ஆய்வேட்டினை நூலாக்கும் முயற்சியில் எனக்குப் பல்லாற்றானும், உதவி புரிந்த என் உடன் பிறவாச் சகோதரர், யாதவர் கல்லூரியில் தமிழ்த்துறையில் பணி புரியும் பேராசிரியர் திரு. ஷாஜகான்கனி எம். ஏ, அவர்களுக்கு நான் எங்ஙனம் என் நன்றியைப் புலப்படுத்துவேன். தன் பிஎச்.டி. ஆய்வுக்கு இடையே கல்லூரியில் பல்வேறு கலைத்துறைகளிலும் மாணவர்களை ஈடுபடச்செய்யும் அவர்களுடைய பணி சிறக்கவும், அவர் மென்மேலும் புகழ் பெறவும் இறைவனிடம் மனமார வேண்டிக்கொள்கிறேன், இறுதியாக, அவ்வப்போது என் நூல் வெளியிடத் துணைபுரியும், அன்புச் சகோதரர் பேராசிரியர், திரு. ஜெயபாண்டியன் எம். ஏ. அவர்களுக்கும் என் நன்றி உரித்தாகுக.

—சுசீலா கோபாலகிருஷ்ணன்

# சுருக்கக் குறியீட்டு விளக்கம்

| | |
|---|---|
| அகம். | — அகநானூறு |
| இ.ப.த.ம. | — இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றம் |
| இளம். | — இளம்பூரணம் |
| உ.ஆ. | — உரையாசிரியர் |
| ஐங்குறு. | — ஐங்குறுநூறு |
| கலித். | — கலித்தொகை |
| சிலப். | — சிலப்பதிகாரம் |
| தொல். | — தொல்காப்பியம் |
| நச். | — நச்சினார்க்கினியம் |
| நற். | — நற்றிணை |
| பட்டினப். | — பட்டினப்பாலை |
| பதி.ஆ. | — பதிப்பாசிரியர் |
| பதிற். | — பதிற்றுப்பத்து |
| பரி. | — பரிபாடல் |
| புறம். | — புறநானூறு |
| பேரா. | — பேராசிரியம் |
| பொருந. | — பொருநராற்றுப்படை |
| பொருள். | — பொருளதிகாரம் |
| மதுரைக். | — மதுரைக்காஞ்சி |
| மணி. | — மணிமேகலை |
| மலைபடு. | — மலைபடுகடாம் |
| மொ.பெ.ஆ. | — மொழிபெயர்ப்பாசிரியர் |
| வி.உ. | — விற்பனை உரிமை |

# 1

## முன்னுரை

நம் பழந்தமிழ் இலக்கியங்கள் பண்டை மக்களுடைய பழக்க வழக்கங்களையும் நம்பிக்கைகளையும் பண்பாட்டையும் காட்டும் பான்மையனவாய் விளங்குகின்றன. பழந்தமிழரது நம்பிக்கைகள் மிகவும் பரந்துபட்டவை. அவற்றுள் ஒன்று 'சகுனம் அல்லது நிமித்தம்' பார்த்தலாகும். இன்றைய உலகம் தேவையற்ற கருத்துக்களையும் பழக்கவழக்கங்களையும் விட்டொழித்து முன்னேறும் விரைவுலகம். திங்களையும் செங்கதிரையும் இன்னபிற கோள்களையும் ஆராய்கின்ற அறிவுலகம். அறிவியல் வளர்ச்சி ஒருபுறம் இருப்பினும் அன்றுபோல் இன்றும் மக்களி

டம் நிமித்தம் பார்க்கும் வழக்கம் இருப்பதைக் காண்கின்றோம். நிமித்தம் என்பது பின்னர் நிகழும் நன்மை தீமைகளை முன்னரே அறிவிக்கும் குறி என்கின்றனர். அரசனுக்கு வருவதுகூறவல்ல குறி சொல்பவரை 'நிமித்திகர்' என்று இலக்கியங்கள் சுட்டுகின்றன. நன்மை தீமைகளுக்கு ஏதுவாகிய காரணத்தை 'நிமித்த காரணம்' என்று குறித்துள்ளனர். இவ்வாறு, நிமித்தம் பற்றிய பல்வேறு வகையான செய்திகளைச் சங்கநூல்களில் காண்கின்றோம், அவை இவ் ஆய்வுரையில் தொகுத்து வகுத்து விளக்கிக்காட்டப் படுகின்றன.

**நிமித்தங்கள் — முன் ஆய்வுகள்**

கே.கே.பிள்ளை 'தமிழக வரலாறு—மக்களும் பண்பாடும்' என்னும் ஆய்வு நூலில் 'பண்டைத் தமிழரின் வாழ்க்கை நெறி' யினைக் கூறுமிடத்து, நல்லநாள் பார்த்து மணமுடித்தல், சோதிடக்கலை பற்றிய கல்வி, கோள்கள், மீன்கள் ஆகியவற்றின் நிலைகளைக் கொண்டு வருங்கால நிகழ்ச்சிகளைக் கணித்தறிதல் ஆகிய செய்திகளைச் சுட்டிச் செல்கின்றார். சு.வித்தியானந்தன் 'தமிழர் சால்பு' என்னும் ஆய்வுநூலில் கண்ணூறு, நிமித்தம், குறிபார்த்தல், காக்கையது பலி ஆகியன பற்றிய செய்திகளைத் தக்க எடுத்துக்காட்டுக்களுடன் விளக்கியுள்ளார். கே.ஏ.நீலகண்ட சாஸ்த்திரி 'சங்க கால மக்களின் பண்பாடும் வழிபாட்டுமுறைகளும்'(The Sangam age—its cults and cultures) என்னும் ஆங்கில நூலில் வேலன் வெறியாட்டினை நிமித்த வகைகளுள் ஒன்றாக நிறுவியுள்ளார். க.கைலாசபதி 'பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும்' என்னும் நூலில் வேலன் வெறியாட்டினை முருக வழிபாட்டு முறையாகக் குறிப்பிட்டு அவ் வெறியாட்டு 'மிகப் புராதமானது' என்று முடிவு செய்துள்ளார். 'மலையாள நாட்டில் வேலன் ஆட்டம்' என்னும் ஆய்வுக் கட்டுரையில் பி.எல்.சாமி இக்காலத்தில் மலையாள நாட்டில் வேலன்மார் என்ற இனத்தினர் செய்யும் தெய்வ ஆட்டங்களிலும் தெய்வத்தைச் சாந்தி செய்யும் சடங்குகளிலும் சங்க காலத் தமிழகத்தில் நடந்த வேலன் வெறியாட்டத்தின் வழிபாட்டு முறைகள், மரபுகள் காணப்படுகின்றன என்னும் உண்மையை எடுத்துக் காட்டியுள்ளார். இ.சுந்தரமூர்த்தி 'பழந்தமிழிலக்கியத்தில் நிமித்தங்கள்' என்னும் ஆய்வுக் கட்டுரையிலும் தாயம்மாள் அறவாணன் 'மூட நம்பிக்கைகள்' என்னும் விளக்கக் கட்டுரையிலும் நாள் நிமித்தம் பார்த்தல், புள் நிமித்தம் பார்த்தல் ஆகியன பற்றிய செய்திகளைவிரிவாகப் பேசுகின்றனர். இ. சுந்தரமூர்த்தி

'கூடலிழைத்தலை'யும் நிமித்தமாகக் கொள்கின்றார். இன்னும், கா. சுப்பிரமணியபிள்ளை 'பழந்தமிழர் நாகரிகம்' என்ற நூலிலும், நா. வானமாமலை 'தமிழர் பண்பாடும் தத்துவமும்' என்னும் நூலிலும், சாமி. சிதம்பரனார் 'பழந்தமிர் வாழ்வும் வளர்ச்சியும்' என்னும் நூலிலும், அ. தட்சிணாமூர்த்தி 'தமிழர் நாகரிகமும் பண்பாடும்' என்னும் நூலிலும் நிமித்தங்களைப் பற்றிய சுருக்கமான செய்திகளைத்தரக் காண்கின்றோம். ச. வே. சுப்பிரமணியன், 'காப்பியக் கனவுகள்', 'காப்பியப் புனை திறன்' ஆகிய இரு நூல்களிலும் நிமித்தங்களைப் பற்றிய செய்திகளை விரிவாக ஆய்ந்துள்ளார். 'பழந்தமிழ் காட்டும் கனாத் திறன்' பற்றி இர. குழந்தைவேலும் 'வெறியாட்டு' பற்றி சி. பாலசுப்பிரமணியனும் ஆய்வுக் கட்டுரைகள் எழுதியுள்ளனர்.

**ஆய்வின் நோக்கம்**

மேலே எடுத்துக் காட்டிய ஆய்வு நூல்களும் ஆய்வுக்கட்டுரைகளும் பிறவும் குறிப்பிட்ட சில நிமித்தங்களை எடுத்துக் கொண்டு விளக்குவதாக மட்டுமே அமைந்துள்ளன. ஆகையினால் சங்க இலக்கியப் பரப்பில் காணப்படுகின்ற நிமித்தங்களையெல்லாம் எடுத்துத் தொகுத்து விளக்கிக் காட்டும் முயற்சி இவண் மேற் கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வின் அடிப்படைகள்**

தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகிய சங்க நூல்களோடு விரிவும் விளக்கமும் வேண்டுமிடத்து அவற்றுக்குப் பின் வந்த தமிழ்க்காப்பியங்கள், பக்திப்பாடல்கள் ஆகியனவும் இவ் ஆய்வுக்கு அடிப்படையாக எடுத்துக் கொள்ளப்பட்டன.

**ஆய்வின் எல்லை**

'சங்க இலக்கியத்தில் நிமித்தங்கள்' என்னும் பெயரிய இவ் ஆய்வுரையில் நாள் நிமித்தம், புள் நிமித்தம், பிறவற்றினிமித்தம் ஆகியவை மட்டுமே எடுத்து ஆராயப்பட்டுள்ளன.

**அணுகு முறை**

இது, பண்டைத் தமிழரின் நிமித்தங்கள் பற்றிய செய்திகளைத் தொகுத்தளித்தலோடு விளக்கமுறை (Descriptive) ஆய்வாகவும் ஒப்பீட்டுமுறை (Comparative) ஆய்வாகவும் அமைந்துள்ளது.

## ஆய்வுப் பகுப்புக்கள்

இவ் ஆய்வுரை பொருள் அடிப்படையில் அமைத்த ஐந்து இயல்களைக் கொண்டுள்ளது. அவை வருமாறு:

1. நாள் நிமித்தம்
2. புள் நிமித்தம்
3. ஏனைய நிமித்தங்கள்
4. மாந்தர் தொடர்பான நிமித்தங்கள்
5. தெய்வம் தொடர்பான நிமித்தங்கள்

## இயல் விளக்கங்கள்

### 1. நாள் நிமித்தம்

நிமித்த வகைகளில் முதற்கண் சுட்டப்படுவது நாள் நிமித்த மாகும். நாள் நிமித்தம் பற்றித் தொல்காப்பியர் குறிப்பதும் அதற்கு இளம்பூரணர், நச்சினார்க்கினியர் எழுதுகின்ற விளக்கங் களும், இங்கு எடுத்துக்காட்டப்படுகின்றன. நாள்மீன், கோள் மீன் பாகுபாடு; வெள்ளி மழைக் கோளாகக் கொள்ளப் பெறுதல்; சனி மீன் புகைதலும் ஞாயிறு வேறுதிசைகளில் தோன்றுதலும் எரிகொள்ளி விழுதலும் தீயநிமித்தங்களென நம்புதல்; திங்களோடு உரோகிணி கூடிய நாளை நன்னாளாகக் கருதிக் கடமை புரிதல் ஆகியவை விளக்கப்படுகின்றன.

### 2. புள் நிமித்தம்

'புள்' என்னும் சொல் பறவைகளையும் நிமித்தங்களையும் குறிக்கின்ற பொதுச் சொல்லாக ஆட்சி பெற்றுள்ளது. நிமித்தங்களைக் குறிக்கின்றவிடத்து, பொதுவாக எல்லாவகை யான நிமித்தங்களையும் குறிப்பதாயும், பறவைகளைப் பற்றி வந்த நிமித்தங்களை மட்டுமே குறிப்பதாயும் அமைந்துள்ளது. இவ்விருவகைப் பொருள் முடிவுகளுக்கும் எடுத்துக்காட்டுக்கள் தரப்பட்டுள்ளன. முதலில் பறவைகளால் நிமித்தம் பார்க்கும் வழக்கம் உண்டானமையின் அப்பறவைகளைக் குறிக்கும்புள்ளென் னும் பெயரால் அது வழங்கப் பெற்றது; காலப் போக்கில் வேறு பல வகை நிமித்தங்களுக்கும் அதுவே பெயராய் அமைந் தது என்பது ஈண்டு நிறுவப்பட்டுள்ளது. மேலும் காக்கை கரைதல், குயில் பயிற்றல், நாரை உயரப்பறத்தல், கூகை அலறல் முதலிய நிமித்தங்களும் இவ்வியலில் விளக்கப்பட்டுள் ளன.

### 3. ஏனைய நிமித்தங்கள்

இவ் இயலில் பல்லி ஒலித்தல், ஓந்தியைக் காணுதல், ஆமா புல் மேய்தல், யானை துதிக்கையை நிலத்தில் வைத்துத் துஞ்சுதல், குதிரைகள் கதியின்றிக் கிடத்தல், நண்பகற்பொழுதில் நரி ஊளையிடுதல், நண்பகல் வேளையில் தும்பி ஒலித்தல் ஆகிய விலங்கு பற்றிய நிமித்தங்களும், மரம் வற்றித் தீப்பிடித்தல், உன்ன மரத்தின் தோற்றம், வேங்கை பூத்தல் ஆகிய மரம், மலர் பற்றிய நிமித்தங்களும் விளக்கப்படுகின்றன. முரசு கிழிதல், வெண்கொற்றக்குடை காம்பொடிந்து வீழ்தல், யாழில் விளரிப் பண் தோன்றுதல் ஆகிய தீ நிமித்தங்களும் எடுத்துக் காட்டப்படுகின்றன.

### 4. மாந்தர் தொடர்பான நிமித்தங்கள்

விரிச்சி கேட்டல், மாந்தர் எதிர்ப்படுதல், வளை செறிதல், கண் துடித்தல் ஆகியன மாந்தர் தொடர்பான நிமித்தங்களாகக் கொண்டு இங்கு ஆராயப்படுகின்றன. 'விரிச்சி' என்னும் சொல் 'நற்சொல் கேட்டல்', 'நிமித்தம்' ஆகிய இரு பொருள் நிலைகளில் ஆட்சி பெற்று வந்துள்ளது என இவண் நிறுவப்படுகின்றது. விரிச்சி கேட்கின்ற முறையும் சூழ்நிலைகளும் பயனும் ஆராயப்படுகின்றன. கனவு காண்டலுக்குரிய காரணங்களும் கனவின் விளைவுகளும் கனவு காண்போர் பற்றிய செய்திகளும் இங்குப் பேசப்படுகின்றன.

### 5. தெய்வம் தொடர்பான நிமித்தங்கள்

கட்டுப்பார்த்தல், கழங்கு பார்த்தல், கூடலிழைத்தல் ஆகியனவும் நிமித்தங்களுடன் தொடர்புடையனவாகக் கொள்ளப்படுகின்றன. வேலன் வெறியாடிக் கழங்கு பார்த்து உரைப்பனவும் கட்டுவிச்சி கட்டுப் பார்த்துக் கூறுவனவும் தெய்வத்தால் நிகழ்வன. தமிழ் இலக்கியங்கள் காட்டும் வேலன் வெறியாட்டினைக் கேரள நாட்டில் நிகழும் வேலன் ஆட்டத்தினோடு ஒப்புமைப்படுத்தியும் பேசப்பட்டுள்ளது. வேலன் வெறியாட்டு தலைவியின் காதல் நோயினை அறிந்து கொள்ள மேற்கொள்ளப் பட்ட ஓர் உத்தியாகும் என்பதும் இவ் இயலில் ஆராயப் பட்டுள்ளது.

இந்த ஆய்வில் கண்ட இன்றியமையாத முடிவுகள் 'முடிவுரை' என்னும் தனித்தலைப்பில் இறுதியாகக் கொடுக்கப் பட்டுள்ளன.

# 2

# நாள் நிமித்தம்

நிமித்தம் என்ற சொல்லையும் நிமித்த வகைகளையும் பற்றிய செய்திகளை முந்து தமிழ் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்துள் காண்கிறோம். தொல்காப்பியர் நிமித்தங்களை நாள் பற்றி வந்த நிமித்தம், புள் பற்றி வந்த நிமித்தம், பிறவற்றின் நிமித்தம் என மூவகைப்படுத்துகின்றார் என்பதைப் பின்வரும் சூத்திரப்பகுதியால் அறியலாம்,

"..............................................
அச்சமும் உவகையும் எச்சம் இன்றி
நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தமும்
காலங் கண்ணிய ஓம்படை உளப்பட

ஞாலத்து வரூஉம் நடக்கையது குறிப்பின்
காலம் மூன்றொடு கண்ணிய வருமே''[1]

இந்நூற்பாவிற்கு, 'அச்சமும் உவகையும் ஒழிவு இன்றி நாளானும் புள்ளானும் பிற நிமித்தத்தானும் காலத்தைக் குறித்த ஓம்படையும், இவை உளப்படத் தோன்றும் வழக்கினது கருத்தினானே காலம் மூன்றனொடும் பொருந்தக் கருதுமாற்றான் வரும்' என இளம்பூரணர் உரை எழுதுகிறார். அவரே, 'அச்சமாவது, தீமை வரும் என்று அஞ்சுதல், உவகையாவது நன்மை வரும் என்று மகிழ்தல், நாளாவது, நன்னாள் தீநாள், புள்ளாவன ஆந்தை முதலியன, பிற நிமித்தமாவன, அலகு முதலாயின, காலங் கண்ணுதலாவது, வருங்காலங் குறித்தல்' என்று விளக்குகின்றார்.

நச்சினார்க்கினியர் மேற்காட்டிய சூத்திரப் பகுதிக்கு, ''நாளும் புள்ளும் பிறவற்று நிமித்தமும் அச்சமும் உவகையும் எச்சமின்றிக் காலங்கண்ணிய ஓம்படை உளப்பட நாணிமித்தத்தானும் புண்ணிமித்தத்தானும் பிறவற்றினிமித்தத்தானும் பாடாண்டலைவர்க்குத் தோன்றிய தீங்கு கண்டு அஞ்சிய அச்சமும் அது பிறத்தற்குக் காரணமாகிய அன்பும் ஒழிவின்றிப் பரிசிலர்க்கு நிகழ்த்தலின் அவர் தலைவர் உயிர் வாழும் காலத்தைக் கருதிய பாதுகாவன் முற்கூறியவற்றோடே கூட'' என உரை எழுதுகின்றார். அவரே, ''ஒருவன் பிறந்த நாள்வயின் ஏனை நாள் பற்றிப் பொருந்தாமை பிறத்தலும், அவன் பிறந்த நாண்மீனிடைக் கோண் மீன் கூடிய வழி அவன் நாண்மீனிடைத் தீது பிறத்தலும், வீழ்மீன் தீண்டிய வழி அதன் கண் ஒரு வேறு பாடு பிறத்தலும் போல்வன நாளின் கண் தோன்றிய நிமித்தம்; புதுப் புள் வருதலும் பழம்புட் போதலும், பொழுதன்றிக் கூகை குழறலும் போல்வன புள்ளின் கண் தோன்றிய நிமித்தம்; ஓர்த்து நின்றுழிக் கேட்ட வாய்ப்புள்ளும் ஓரிக் குரலுள்ளிட்டனவுங் கழுதுடன் குழீஇய குரல் பற்றலும் வெஞ்சுடர் மண்டிலத்துக் கவந்தம் வீழ்தலும் அதன்கண் துளை தோன்றுதலும் தண்சுடர் மண்டிலம் பகல் நிலவெறித்தலும் போல்வன பிறவற்றுக்கண் தோன்றிய நிமித்தம்'' என நிமித்த வகைகளுக்கு எடுத்துக்காட்டும் தருகின்றார்.

நிமித்த வகைகளை இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் ஒரே மாதிரி விளக்கியிருக்கின்றார்கள். எனினும், நச்சினார்க்கினி

1. தொல். பொருள். நச்., 90: 16-20.

யர் இந்த நிமித்தங்கள் பாடாண் தலைவனுக்குரியதாகக் கருதியிருக்கிறார்.

மூவகை நிமித்தங்களுள்ளும் தொல்காப்பியர் நாள் நிமித்தத்தை முதற்கண் வைத்துப் பேசுகின்றார். இதனால் நாள் நிமித்தத்தின் சிறப்பு, ஒருவாறு புலப்படும். பண்டைத் தமிழ் மக்கள் நாள்களில் சிலவற்றை நல்ல நாள்களென்றும் சிலவற்றைக் கெட்ட நாள்களென்றும் கொண்டிருந்தனர். விண்மீன்களும் கோள்களும் நிற்கும் நிலை கொண்டே இதனைக் கணித்தனர். ஆவூர் மூலங்கிழார், ஐயூர் மூலங்கிழார், மாமூலனார், மூலங்கீரனார் ஆகிய சங்கப் புலவர்கள் நாளாற் பெயர் பெற்றவராவர் என்பதும் ஈண்டுக் குறிப்பிடத் தக்கது.

**விண்மீன்கள்**

இயற்கையாகவே ஒளியுடையவை நாள் மீன்கள் (Stars); ஞாயிற்றினிடமிருந்து ஒளியைக் கொள்ளும் இயல்புடையவை கோள் மீன்கள் (Planets) என விண்மீன்களை இருவகைகளாகப் பகுத்தனர்.

> ''நீனிற விசும்பின் வலனேர்பு திரிதரு
> நாண்மீன் விராய கோண்மீன்.......''[2]

என்ற பாடற்பகுதிக்கு, 'நீலநிறத்தை உடைய ஆகாயத்தே வலமாக எழுந்து திரியும் நாள்களாகிய மீன்களோடே கலந்த கோள்களாகிய மீன்கள்' என நச்சினார்க்கினியர் உரை செய்துள்ளார்.

**நாள் மீன்**

ஒருவர் பிறந்த நாளில் திங்களை அடுத்து எந்த மீன் நிற்கின்றதோ அதுவே அவரது நாண்மீன் எனப்படும். அதற்கு ஏற்பவே அவர்களது வாழ்வில் நல்லவை கெட்டவை விளையும் என்பது சோதிட நூல் கொள்கை.

'மதிசேர் நாண்மீன் போல........'[3] என்ற பாடற்பகுதிக்கு

2. பட்டினப்., 67-68.
3. புறம்., 160:8.

ஔவை. சு.துரைசாமிப்பிள்ளை, 'திங்களைச் சேர்ந்த நாளாகிய மீனை ஒப்ப' என்று பொருள் கூறுகிறார்.

பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியனை வாழ்த்துமிடத்து மாங்குடி கிழார்,

"நின்று நிலைஇயர் நின் னாண்மீ னில்லாது
படாஅச் செலீஇயர்நின் பகைவர் மீனே"[4]

என அவனுடைய நாண்மீனைக் குறிப்பிடுகின்றார்.

**வெள்ளி**

வெண்மை நிறமுடைய கோள் வெள்ளியாகும். இது மாலை யில் அல்லது காலையில் தான் காணப்படும். வெள்ளி மழைக் கோளாகும். அது வடதிசைக் கண் நில்லாது தென்புலத்திற்குச் செல்லுமாயின் மழை தவறும் என்பதை அறிந்திருந்தனர். வெள்ளி தென் திசைக்குச் சென்றால் அதனை வறகடத்திற்கு அறிகுறியாகக் கொண்டனர் என்பதற்குச் சங்க இலக்கியத்தில் பல சான்றுகள் உள்ளன.

'வறிதுவடக் கிறைஞ்சிய சீர்சால் வெள்ளி
பயங்கெழு பொழுதோ டாநியம் நிற்ப'[5]

இதனால், வெள்ளி என்னும் கோள் மீன் வடதிசைக் கண் இருப் பின் மழை பெய்யும் என நாட்டு மக்கள் நம்பினர் என்பது பெறப்படும். மழை பெய்தலாகிய நன்னிமித்தத்தை உணர்த்து நெ அக்கோள்மீனைச் 'சீர்சால் வெள்ளி' எனச் சிறப்பித்தலும் பொருத்தமுடையதே.

'நிலம்பயம் பொழியச் சுடர்சினந் தணியப்
பயங்கெழு வெள்ளி யாநியம் நிற்ப'[6]

என்றமையால், பூமகள் வளம் கொழிக்கவும் கதிரவன் வெம்மை தணியவும் மழை பெய்யும் என்பதை அறிவிக்கின்ற விண் மீனைப் 'பயங்கெழு வெள்ளி' எனக் கபிலர் பாராட்டுகின்றார்.

4. புறம்., 24:24-25.
5. பதிற்., 24: 24-25.
6. மேலது., 69: 13-14.

பொதுவாகவே விண்மீன்கள் தத்தம் நிலையில் இருக்குமாயின் காலந் தப்பாது மழை பொழியும் என்பதை,

'மீன் வயினிற்ப வானம் வாய்ப்ப'[7]

எனவும்,

'வியனுண் மீனெறி யொழுக'[8]

எனவும்,

'விரிகதிர் மதியமொடு வியல் விசும்பு புணர்ப்ப'[9]

எனவும் வரும் பாடற் பகுதிகளால் அறியலாம்.

கோள்கள் தம் நிலை மயங்கின் மழை பெய்யாது; நாடு வற்கடத்தால் வருந்தும். இதனைக் 'கோள் நிலை திரியின் மாரி வறங்கூரும்'[10] என்பர் சீத்தலைச் சாத்தனார். 'வெள்ளி' தன்னிலை பெயர்ந்து தெற்குத் திசைக்கண் செல்லுமாயின் மழை பெய்யாது; அது நாட்டுக்கு வரும் தீமையை உணர்த்தும் தீநிமித்தங்களில் ஒன்று என மக்கள் நம்பினர் என்பதற்கும் பல சான்றுகள் உள்ளன. அவை வருமாறு:

''வெள்ளி தென்புலத் துறைய விளைவயற்
பள்ளம் வாடிய பயனில் காலை''[11]

''தென்றிசை மருங்கின் வெள்ளி யோடினும்''[12]

''இலங்குகதிர் வெள்ளி தென்புலம் படரினும்
அந்தண் காவிரி வந்துகவர் பூட்ட''[13]

''வசையில் புகழ் வயங்குவெண்மீன்
திசை திரிந்து தெற்கேகினும்''[14]

''விரிகதிர் வெள்ளி தென்புலம் படரினும்''[15]

7. மேலது., 90:1.
8. மதுரைக்., 8.
9. பரி., 11: 1
10. மணி., துயிலெழுப்பிய காதை: 9.
11. புறம்., 388: 1-2.
12. புறம்., 117: 2.
13. புறம்., 35: 7-8
14. பட்டினப்., 1-6.
15. சிலப்., 10:103.

**சனிமீன்**

சங்க காலத்தில் சனி மீன் 'மைம்மீன்' 'கரியவன்' எனும் பெயர்களால் சுட்டப்பட்டது. வெள்ளை ஒளி நிறைந்த கோளை 'வெள்ளி' என்றழைத்த பழந்தமிழர், கருமைபடர்ந்து ஒளிமங்கிய காரணம் பற்றிச் சனிமீனை 'மைம்மீன்' என்றனர் போலும்.

வெள்ளி தன்நிலை பெயர்தல் எவ்வாறு தீநிமித்தமாகக் கருதப் பட்டதோ அதே போன்று வால் நட்சத்திரம் தோன்றுவதும் சனிமீன் புகைவதும் தீய குறிகளாகக்கொள்ளப்பட்டன. இதற்குப் புறநானூற்றிலும் சிலப்பதிகாரத்திலும் சான்றுகள் உள்ளன.[16]

'கரியவன் புகையினும்' எனும் தொடருக்கு உரையெழுதும் அடியார்க்கு நல்லார், 'கோள்களில் சனிக்கோள் இடபம், சிங்கம், மீனம் என்னும் இவற்றிேனாடு மாறுபடினும்' தீயகுறியாகக் கருதப் பட்டது என்கிறார்.

**கதிரவன், எரிகொள்ளி**

கதிரவன் வேறு திசைகளில் தோன்றுதலும் எரிகொள்ளி வீழ்தலும் தீநிமித்தங்களாகக் கொள்ளப்பட்டன. விளங்கிய சுடரையுடைய ஞாயிறு நான்கு திக்கினும் தோன்றுதலும் விளங்கிய கதிரையுடைய வெள்ளி மீன் தென்திசைக்கண் செல்லு தலும் நாட்டுக்கு வரும் தீமையை உணர்த்தும் தீநிமித்தங் களாகும் என்பர் வெள்ளைக்குடி நாகனார்.[17]

'எட்டுத்திசையும் எரிகொள்ளி எரிந்து வீழவும், ..........வெய்ய சுடரையுடைய ஞாயிறு பலவிடத்தும் செறிந்து தோன்றவும்'[18] எனவும் 'வெதுப்புகின்ற கதிரை-

16. ''மைம்மீன் புகையினுந் தூமந் தோன்றினும்
தென்திசை மருங்கின் வெள்ளி யோடினும்''
—புறம்., 117:1-2.
''கரியவன் புகையினும் புகைக்கொடி தோன்றினும்
விரிகதிர் வெள்ளி தென்புலம் படரினும்''
—சிலப். 10: 102-103
17. ''அலங்குகதிர்க் கனலி நால்வயிற் றோன்றினும்
இலங்குகதிர் வெள்ளி தென்புலம் படரினும்''
—புறம்., 35: 6-7
18. ''திசையிரு நான்கு முற்க முற்கவும்
பெருமரத் திலையி னெடுங்கோடு வற்றல் பற்றவும்
வெங்கதிர்க் கனலி துற்றவும்'' —புறம்., 41: 4-6.

யுடைய ஞாயிறு கீழ்த்திசை மாறித் தென் திசையிலே தோன்றுங் காலம் வரினும் யாங்கள் இதற்குச் செய்வது என்னோ வென்று அஞ்சுவே மல்லேம்'[19] எனவும், 'அகன்ற நிலவுலகம் மழையின்றி மிக்க வெம்மையுற்று வாடினும், வானகத்தே எரிமீன் மிகுதியாகத் தோன்றிடினும், குளமீனும் நாள் மீனுமாகிய விண்மீன்கள் புகைந்து தோன்றினும்'[20] எனவும் வரும் புறநானூற்றுப் பகுதிகளும் தீநிமித்தங்களையே சுட்டுகின்றன.

பங்குனி மாதம் முதற் பதினைந்தில், கார்த்திகை நாளில், நிறைந்த இருட்டில் உத்தரம் உச்சியிலிருந்து சாய, மூலம் எழ மிருகசீரிடம் மறைய, ஒருமீன் வடக்கும் கிழக்கும் போகாமல் இடை நடுவே தீப்பரக்க விழுந்தது. இதனைக் கண்ணுற்ற கூடலூர் கிழார் என்னும் புலவர், யானைக்கட் சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை அதன் ஏழாம் நாள் இறப்பான் என எண்ணினர். அவர் எண்ணியவாறே அவ்வரசன் இறந்தான். இச்செய்தியை,

"ஆடிய லழற்குட்டத்
தாரிரு ளரையிரவின்
முடப்பனையத்து வேர்முதலாக்
கடைக்குளத்துக் கயங்காயப்
பங்குனியுய ரழுவத்துத்
தலை நாண்மீ னிலைதிரிய
நிலைநாண்மீ னதனெதி ரேர்தரத்
தொன்னாண்மீன் றுறைபடியப்
பாசிச்செல்லா தூசி முன்னு
தளக்கர்த்திணை விளக்காகக்
கனையெரி பரப்பக் காலெதிர்பு பொங்கி
ஒருமீன் வீழ்ந்தன்றால் விசும்பினானே
அதுகண், டியாமும் பிறரும் பல்வே றிரவலர்
..........................................................

19. "தெறுகதிர்க் கனலி தென்றிசைத் தோன்றினும்
என்னென் றஞ்சலம் யாமே" —புறம்., 397 : 24-25.

20. "அகன்ஞாலம் பெரிதுவெதும்பினும்
மிகவானு ளெரி தோன்றினும்
குளமீனொடுந் தாட்புகையினும்" —புறம்., 39:33-35

அஞ்சின மெழுநாள் வந்தன் றின்றே
..........................................
மேலோ ருலக மெய்தின ளுகலின்''[21]

என்னும் புறநானூற்றுப் பாட்டால் அறியலாம். ஆக, நாள் மீனையும் கோள்மீனையும் கொண்டு நம் பண்டைத் தமிழர் ஒருவருடைய வாழ்நாளைக் கணித்தனர் என்பதும் இதனுல் பெறப் படும்.

மக்கள் தம் அகவாழ்வில் நடைபெறும் இன்றியமையாத நிகழ்ச்சிகளுக்கு நாளும் கோளும் பார்த்தனர். கற்பு மணம் புரிந்து கொண்டவர்கள் கெட்ட ராசியிலும் கெட்ட நாளிலும் கூடிக்களிக்கமாட்டார்கள். களவு மணத்தில் ஈடுபட்டிருக்கும் தலைவன் இந்த வழக்கத்தைப் பின்பற்ற மாட்டான்.

''மறைந்த ஒழுக்கத்து ஓரையும் நாளும்
துறந்த ஒழுக்கம் கிழவோர்க்கு இல்லை''[22]

என்பது தொல்காப்பியக் களவியல் சூத்திரம். ''களவு மணம் நிகழுங் காலத்தில் கெட்ட ராசியிலும் கெட்ட நாளிலும் காதலியுடன் சேராமல் இருக்கும் வழக்கம் தலைமகனிடம் இல்லை''என்பது இதன் பொருள்.

திருமணம் ஆடவர் மகளிர் வாழ்வில் பெருவிழாவாகும். தலைவன்தலைவியின் இல்லற வாழ்வு சிறக்க அவர்தம் பெற்றோர் நல்ல நேரம் பார்த்து அவர்க்கு மணம் முடித்து வைத்தனர் என்னும் செய்தியை,

''நன்னாள் வதுவை கூடி''[23]

எனவும்,

''அங்கண் இருவிசும்பு விளங்கத் திங்கள்
சகட மண்டிய துகள்தீர் கூட்டத்துக்
கடிநகர் புனைந்து கடவுட் பேணிப்

21. புறம்., 229: 1-22
22. தொல். பொருள். நச். 135.
23. நற். 125:7.

படுமண முழவொடு பரூஉப் பணை இமிழ
வதுவை மண்ணிய மகளிர்.........''[24]

எனவும் வரும் அகப்பாடல்களால் அறியலாம். திங்களை உரோகிணி கூடிய குற்றமற்ற நன்னாளில் திருமணம் நிகழ்ந்தது என்பது இதனால் பெறப்படும்.

தீயகோள்களின் தொடர்பு நீங்கப் பெற்ற வளைந்த வெள்ளிய திங்களைக் குற்றமற்ற சிறந்த புகழினையுடைய உரோகிணி எனும் நாள் மீன் அமைந்த காலத்தில் மன்றல் நிகழ்ந்தது என்பதைக்,

''கனையிருள் அகன்ற கவின்பெறு காலை
கோள்கால் நீங்கிய கொடுவெண் திங்கள்
கேடில் விழுப்புகழ் நாள்தலை வந்தென
.................................
.................................
வதுவை நன்மணம் கழிந்த பின்றை''[25]

எனவரும் பாடற் பகுதியாலும் அறியலாம்.

நன்னாளில் மணமுடிக்கப் பெற்ற தலைவனும் தலைவியும் எக் காரணத்தைமுன்னிட்டும் பிரிந்து விடாதபடி நாள்மீன் தடுத்து வைக்கும் என்னும் குறிப்பொன்று கலித்தொகையில் காணப் படுகிறது.[26]

---

24. அகம். 136: 4-8.
25. அகம்., 86: 5-7, 17.
26. ''பாஅ லஞ்செவிப் பணைத்தாள் மாநிரை
மாஅல் யானையொடு மறவர் மயங்கித்
தூறதர் பட்ட வாறுமயங் கருஞ்சுரம்
இறந்துநீர் செய்யும் பொருளினும் யாமுமக்குச்
சிறந்தன மாத லறிந்தனி ராயின்
நீளிரு முந்நீர் வளிகலன் வெளவலின்
ஆள்வினைக் கழிந்தோர் போற லல்லதைக்
கேள்பெருந் தகையோ டெவன்பல மொழிகுவம்
நாளுங் கோண்மீன் தகைத்தலுந் தகைமே''
கலித்தொகை, 5: 1-9.

வதுவைக் காலத்தே மகளிர் தாம் மணக்கும் கணவனைப் பிரியாமல் கற்புவழி யொழுகும் பொற்பு மேம்படுதற்கு அருந்ததியைக் காண்டல் மரபாகும். தம் வாழ்நாளின் எல்லையை அறிந்து கொள்ளவும் அவ்வருந்ததி மீனைக் காண்பதும் உண்டு. இதனை,

''வதுவை மகளிர் நோக்கினர், பெயர்ந்து
வாழ்நா ளறியும் வயங்குசுடர்''[27]

எனக் கூறுவர் பெருங்குன்றூர்கிழார்.

நல்ல நேரத்தில் பிறந்தவன் வெற்றிவேந்தனாய் விளங்கிப் பல்லாண்டு வாழ்வான் என்னும் குறிப்பினைப் பொருநராற்றுப் படையில் காண்கின்றோம்.

''உருவப் பஃறே ரிளையோன் சிறுவன்
முருகற் சீற்றத் துருகெழு குருசில்
தாய்வயிற் றிருந்து தாய மெய்தி
எய்யாத் தெவ்வ ரேவல் கேட்பச்
செய்யார் தேஎந் தெருமரல் கலிப்பப்
பவ்வ மீமிசைப் பகற்கதிர் பரப்பி
வெவ்வெஞ் செல்வன் விசும்புபடர்ந் தாங்குப்
பிறந்து தவழ் கற்றதற் றொட்டுச் சிறந்தநன்
னாடுசெகிற் கொண்டு நாடொறும் வளர்ப்ப''[28]

எனச் சோழன் கரிகாற் பெருவளத்தானின் பிறந்த நாள் குறித்து முடத்தாமக் கண்ணியார் பாடுகின்றார். 'தாய்வயிற்று இருந்து தாயம் எய்திப் பிறந்து, என்பதற்குத் 'தாயினுடைய வயிற்றிலே யிருந்து அரசுரிமையைப் பெற்றுப் பிறந்து' எனவும், 'தான் பிறக்கின்ற காலத்துப் பிறவாதே நல்ல முகூர்த்தம் வருமளவும் தாயுடைய வயிற்றிலேயிருந்து பிறக்கையினாலே அரசுரிமையைப் பெற்றுப் பிறந்தென்றார்' எனவும் உரையாசிரியர் விளக்கம் எழுதுகின்றார்.

போருக்குப் புறப்படும் முன்னர் தமிழ் வேந்தரும் சோதிட முறைப்படி நாள்கோள் பார்ப்பதுண்டு. குறித்த நாளில் ஏதேனும்

27. பதிற்., 89: 17-18.
28. பொருந., 130-138.

இடையூறு ஏற்படுமாயின் தம் வெண்கொற்றக் குடையையும் வாளையும் அத்திசை நோக்கி அனுப்பி வைப்பர்[29]

மீனவர்கள் உவா நாளைச் சிறந்த நாளாகக் கருதி மீன் பிடிக்கச் செல்வர் என்பதைப்,

"புன்றலை யிரும்பரதவர்
பைந்தழைமா மகளிரொடு
பாயிரும் பனிக்கடல் வேட்டஞ் செல்லா
துவவுமடிந் துண்டாடியும்"[30]

எனக் கடியலூர் உருத்திரங் கண்ணனார் குறிப்பிடுகின்றார். பரிசில் பெறச் செல்கின்ற புலவர்களும் நல்ல நாளும், பொழுதும் பார்த்தே செல்வர் என்னுங் குறிப்பு புறம் 124, 204 ஆகிய பாடல் களில் காணப்படுகின்றது. இதனால் மணம் புரிதல், வினைமேற் செல்லல் ஆகிய காரியங்கள் அனைத்திற்கும் நன்னாள் பார்க்கின்ற வழக்கம்பண்டைத்தமிழரிடையேஇருந்ததுஎன்பது புலனாகின்றது.

நாளையும் கோளையும் கொண்டு நன்மை தீமைகளைக் கணிக் கின்ற தமிழ் மரபொடு பருவங்களைக் கொண்டு ஜெர்மானியக் கவிஞர்கள் நன்மை தீமைகளைக் கணித்த முறையினையும் ஈண்டு தொடர்புபடுத்திக் காணலாம். பருவங்களோடு மனித வாழ்க் கையைத்தொடர்புபடுத்திப்பார்க்கின்ற ஜெர்மானியக் கவிஞர்கள் இலையுதிர் காலத்தையும், குளிர் காலத்தையும்பலகாலம் வருணிக்க விருப்பமின்றியே விட்டுவிட்டனர் என்றும், அதற்குக் காரணம் முறைகேட்டிற்கும் மரணத்திற்கும் குறியீடுகளாக அவர்கள் இப் பருவங்களைக் கருதியதேயாகும் என்றும் கூறுகின்றனர்.[31]

இவ்வாறு, வானியல் கலை பற்றிய முழுமையான அறிவா ராய்ச்சியில் தேர்ந்திருந்த நம் பண்டைத் தமிழ் மக்கள் நாள் மீன் கோள்மீன் ஆகியவற்றின் நிலைகளைக் கொண்டு நன்னிமித்தங்களை யும் தீநிமித்தங்களையும் கணித்துத் தம் இன்ப வாழ்விற்கு அரண் செய்து கொண்டனர் என்பது இக்கட்டுரையின் மூலம் தெளிவா கின்றது.

---

29. தொல். பொருள்., நச்., 68: 1.
30. பட்டினப்., 90-94.
31. இரா. தண்டாயுதம், சங்க இலக்கியம் எட்டுத் தொகை ப:148

# 3

# புள் நிமித்தம்

புள் நிமித்தத்தைத் தொல்காப்பியர் நிமித்த வகைகளில் ஒன்ருகக் கொண்டார் என்பதை முன்னரே குறிப்பிட்டோம். அவர் ஐயறிவுடைய உயிர்களில் ஒரு வகையின தாகிய பறவைகளைப் 'புள்' என்று சுட்டியுள் ளார். இதனை,

"மாவும் புள்ளும் ஐயறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே"[1]

என்னும் நூற்பாவால் அறியலாம்.

---

1. தொல். பொருள். இளம்., 576.

இளம்பூரணர்,[2] நச்சினார்க்கினியர்[3] ஆகிய இருவரும் புள் என்பதற்குப் பறவை என்றே பொருள் கொண்டனர், 'புள் நிமித்தம்' என்பதற்குப் பறவை பற்றி வந்த நிமித்தம் என்று உரை செய்துள்ளனர்.

**புள் — சொல்லும் பொருளும்**

சங்க இலக்கியத்தில் 'புள்' என்பது பறவைகளைக் குறிக்கின்ற சொல்லாயும், நிமித்தங்களைக் குறிக்கின்ற சொல்லாயும் ஆட்சி பெற்றுள்ளது. நிமித்தங்களைக் குறிக்கின்றவிடத்துப் பொதுவாக நிமித்தங்களைக் குறிப்பதாயும் பறவைகளால் உண்டாகும் நிமித்தங்களை மட்டும் குறிப்பதாயும் அமைந்துள்ளது. இதனைப் பின்வரும் வரைபடம் (chart) மூலம் விளக்கிக்காட்டலாம்.




**இருவகைப் பொருள்நிலை**

"........................ ஓதி முது போத்து
ஆறுசென் மாக்கள் புட்கொளப் பொருந்தும்"[4]

2. தொல். பொருள். இளம்., பக். 153-154.
3. தொல். பொருள். நச்., பக். 293-296.
4. குறுந்., 140: 1-2.

எனவரும் குறுந்தொகைப் பாடற்பகுதிக்கு 'முதிய ஆண் ஓந்தி, வழிச்செல்லும் மனிதர்கள் நன்னிமித்தமாகக் கொள்ளும்படி' என்று பொருளுரைக்கப்படுகின்றது.

"புள்ளுமோராம் விரிச்சியு நில்லாம்"[5]

எனவரும்குறுந்தொகைப்பாடற்பகுதிக்கு, "நிமித்தமும்ஆராயேம், வாய்ப்புள் கேட்டதற்கும் எதிர்பார்த்து நிற்றலைச் செய்யேம்" என்று பொருளுரைக்கப்படுகின்றது.

"அணங்குடை மூந்நீர் பரந்த செறுவின்
உணங்குதிறம் பெயர்ந்த வெண்கல் அமிழ்தம்
குடபுல மருங்கின் உய்ம்மார் புள்ளோர்த்துப்
படையமைத் தெழுந்த பெருஞ்செய் ஆடவர்"[6]

எனவரும் அகநானூற்றுப் பாடற் பகுதியின் மூலம் உப்பினை எடுத்துச் செல்லுவோர் நன்னிமித்தம் பார்க்கின்ற வழக்கத்தினை உடையவராய் இருந்தனர் என அறியலாம். இச்செய்யுளில் வரும் 'புள்' என்ற சொல்லுக்கு நிமித்தம் என்று பொருள் உரைக்கப் பட்டுள்ளது.

'புள்ளுத் தொழு துறைவி'[7]

எனவரும் மற்றொருபாடற்பகுதிக்கு 'நிமித்தத்தைப்பரவியிருக்கும் தலைவி' என்று பொருளுரைக்கப்பட்டுள்ளது.

"நன்னன்சேய் நன்னற் படர்ந்த கொள்கையொடு
உள்ளினிர் சேறி ராயிற் பொழுதெதிர்ந்த
புள்ளினர் மன்ற வெற்றுக் குறுதலின்"[8]

எனவரும்அடிகட்கு நச்சினார்க்கினியர், நன்னன்மகனாகிய நன்னனை நினைத்த கோட்பாட்டுடனே, அவன் தரும் பரிசில்கள் இவை யென்று அப்பரிசில்களை உள்ளினிராய் நீயிரும் செல்வராயின், என்னை எதிர்ப்படுகையினாலே நீயிர் புறப்படுகின்ற பொழுது

5. குறுந்., 218: 3.
6. அகம்., 207: 1-4.
7. அகம்., 351: 17.
8. மலைபடு., 64-66.

நுமக்கு வரும் ஆக்கத்தை எதிர்கொண்டு நின்ற நன்முகூர்த்த தோடே நன்னிமித்தத்தையும் உடையிராயிருந்தீர்' என உரை யெழுதியுள்ளார். ஈண்டுப் 'புள்' என்பதற்கு நிமித்தம் என்றே பொருள் கூறப்பட்டுள்ளமையைக் காணலாம்.

முல்லைப்பாட்டில், 'நல்லோர் வாய்ப்புள்'[9] என வரும் தொடர்க்குப் 'பெண்டிருடைய நற்சொல்லாகிய நிமித்தம்' எனப் பொருளுரைக்கப்பட்டுள்ளது.

இதுகாறும் எடுத்துக்காட்டியவற்றால் 'புள்' என்ற சொல் 'நிமித்தம்' என்ற பொதுப்பொருளில் ஆளப்பட்டுள்ள உண்மையைத் தெளியலாம்.

பறவை பற்றி வந்த நிமித்தங்களையும் புள் என்றே வழங்குவர் ஒரு நாட்டுக்குப் புதுப்புள் வருவதும், பழம்புள் போவதும் அந் நாட்டுக்கு வரவிருக்கும் தீமையை உணர்த்தும் நிமித்தமாகக் கொள்ளப்பட்டது. இச் செய்தியினைப்,

> ''புதுப்புள் வரினும் பழம்புட் போகினும்
> விதுப்புற வறியா வேமக் காப்பினை''[10]

எனவரும் பாடற்பகுதியால் அறியலாம். குறுங்கோழியூர் கிழார், சேரமான் யானைக் கண்சேய் மாந்தரஞ்சேரலிரும் பொறையின் வெற்றிச் சிறப்பையும், பண்பினையும் கூறுமிடத்து அவன், 'புதுப்புள் வரினும் பழையபுள் அவ்விடத்தை விட்டுப் போகினும் அவற்றால் நடுக்கமுறுதல் அறியாத சேமமாகிய கவலை உடையவன்' என்று குறிப்பிடுகின்றார்.

குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனைக் கோவூர்கிழார் பாடிய பாட்டில், 'அஞ்சுவரத் தகுந புள்ளுக்குர லியம்பவும்'[11] எனப் பறவை பற்றி வந்த தீநிமித்தம் சுட்டப்படுகின்றது.

சோழன் நலங்கிள்ளியினுடைய வீரர்கள் பகை வந்தபோது புள் நிமித்தம் தீயவாயினும் 'சாவேம் யாம்' என வீறுகொண்டு எழுவர் என்பதை,

---

9. முல்லைப்., 18.
10. புறம்., 20: 18-19.
11. புறம்., 41:7.

> "உட்பகையொரு திறம் பட்டெனப் புட்பகைக்
> கேவானகலிற் சாவேம் யாமென"[12]

எனவரும் பாடற் பகுதியால் அறியலாம். இதனால் போருக்குப் புறப்படும் முன்னர் 'புள்நிமித்தம்' பார்க்கின்ற வழக்கத்தைப் பண்டைத்தமிழர்கள் மேற்கொண்டிருந்தனர் எனத் தெரியவருகின்றது. இங்குப் 'புட்பகை' என்ற சொல்லுக்குப் 'புள்ளின் தீயநிமித்தம், அது மயில் வலமாதல் காகம் இடமாதல் முதலியன'[13] என உ.வே. சாமிநாதையர் விளக்கம் எழுதுகின்றார்.

மலையமான் திருமுடிக்காரியினிடத்தில் நாள் நிமித்தம் பார்க்காமலும் புள்நிமித்தம் பார்க்காமலும் சென்று அவனைப்புகழ்ந்து பாடாவிடினும் இரவலர்கள் பொருளொடு தான் திரும்புவர். இதனைக் கபிலர்,

> "நாளன்று போகிப் புள்ளிடை தட்பப்
> பதனன்று புக்குத் திறனன்று மொழியினும்
> வறிது பெயர்குந ரல்லர் நெறிகொளப்
> பாடான் றிரங்கு மருவிப்
> பீடுகெழு மலையற் பாடி யோரே"[14]

என்று பாடுகின்றார்.

வல்வில் ஓரியின் முன், தான் கருதிய பரிசில் இது எனக் கூறும் கழைதின் யானையார் பரிசிலர் பண்பினைப் பின்வரும் பகுதியால் உணர்த்துகின்றார்.

> "புள்ளும் பொழுதும் பழித்த லல்லதை
> உள்ளிச் சென்றோர்ப் பழியல ரதனாற்
> புலவேன் வாழிய ரோரி விசும்பிற்
> கருவி வானம் போல
> வரையாது சுரக்கும் வள்ளியோய் நின்னே"[15]

---

12. புறம்., 68: 11-12.
13. உ.வே.சா. (பதி.ஆ.), புறநானூறு, பக். 163.
14. புறம்., 124: 1-5.
15. புறம்., 204: 10-14.

இதனல், பரிசிலர் தங்கட்குப் பரிசில் கிடைக்காத போது, தாம் நாடிவந்தவரைப் பழியாது, தாம் புறப்பட்டு வந்த வழியிடத்து ஏற்பட்ட புள் நிமித்தத்தையும் புறப்பட்ட நேரத்தையும் பழிப்பர் என்னும் உண்மை விளங்கும். எனவே, இரவலர் புர வலரை நாடிச் செல்லும் போது புள்நிமித்தம் பார்க்கின்ற வழக்கத்தினை மேற்கொண்டிருந்தனர் எனத் தெரியவருகின்றது.

புள்நிமித்தம் பார்த்து மணவிழா எடுக்கின்ற வழக்கம் இருந் தது என்று அகநானூறு கூறுகின்றது.

"மைப்புறப் புழுக்கின் நெய்க்கனி வெண்சோறு
வரையா வண்மையொடு புரையோர்ப் பேணிப்
புள்ளுப்புணர்ந் தினிய வாகத் தெள்ளொளி
அங்கண் இருவிசும்பு விளங்கத் திங்கள்
சகட மண்டிய துகள்தீர் கூட்டத்துக்
கடிநகர் புனைந்து கடவுட் பேணிப்
படுமண முழவொடு பரூஉப்பணை இமிழ
வதுவை மண்ணிய மகளிர்........."[16]

ஈண்டும் உரைகாரர் 'புள்' என்பதற்குப் புள்நிமித்தம் என்றே பொருள் எழுதிச் செல்கின்றார்.

"புனைவினை நல்இல் புள்ளும் பாங்கின"[17]

என்ற மற்ெருரு பாடற் பகுதியில், தலைமகள் புள்நிமித்தங்கள் நல்லனவாயின; ஆதலால் தலைவன் விரைந்து வருவான் எனத் தோழிக்குக் கூறுகின்றாள். இவ்விடத்தும் 'புள்' என்பது பறவை நிமித்தம் என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளதைக் காணலாம்.

நற்றிணையில் வினைமுற்றி மீளும் தலைமகன், 'இனிய மொழியை உடைய நம் காதலிக்குப் புள்ளினங்கள் கரைந்து நம் வரவை அறி யும்படி செய்தனவோ?' எனத் தேர்ப்பாகனிடம் கூறுகின்றான். இச்செய்தியை,

"......ஈண்டுநம் வரவினைப்
புள்ளறி வுறீஇயின கொல்லோ தெள்ளிதின்

16. அகம்., 136: 1 8.

17. அகம்., 141:3.

காதல் கெழுமிய நலத்தள் ஏதில்
புதல்வற் காட்டிப் பொய்க்குந்
திதலை யல்குல் தேமொழி யாட்கே''[18]

எனவரும் பாடற் பகுதியால் அறியலாம். இங்கும் 'புள்' என்னும் சொல் பறவை என்னும் பொருளிலேயே ஆளப்பட்டிருக்கின்றது.

ஆகவே இவ்வெடுத்துக் காட்டுக்களிலிருந்து புள் நிமித்தம் என்பதற்குப் பறவைகளினுல் அறியப்படும் நிமித்தம் என்று பொருள் கொள்கின்ருேம்.

மலைபடுகடாத்துள்,

''புலரி விடியல் புள்ளோர்த்துக் கழிமின்''[19]

எனவரும் அடிக்கு இருவகையாகப் பொருளுரைக்கப்படுகிறது அவை:

1. 'இராக்காலம் நீங்குதலையுடைய விடியற் காலத்தே நிமித்தம் பார்த்துப் போவீர்'
2. 'புட்களின் குரல் கேட்டுப் போவீர்'[20]

என்பன.

இதனுல் புள் என்பதற்கு **நிமித்தம்** என்ற பொதுப் பொருளும், **பறவை நிமித்தம்** என்ற சிறப்புப் பொருளும் உண்டு என்பது தெளிவாகும். இவ்விரு வகைப் பொருள் முடிவுகளையும் உளங்கொண்ட உ.வே.சாமிநாதையர்,

> ''நிமித்தம் புள்ளெனக் கூறப்படுகின்றது. முதலில் பறவைகளால் நிமித்தம் பார்க்கும் வழக்கம் உண்டானமையின் அப்பறவைகளைக் குறிக்கும் புள்ளென்னும் பெயரால் அது வழங்கப்பெற்று, அப்பால் வேறு பலவகை நிமித்தங்களுக்கும் அதுவே பெயராக வழங்கலாயிற்று என்று தோன்றுகின்றது''[21]

என முடிவு செய்கின்ருர்.

18. நற்., 161: 8-12.
19. மலைபடு., 448.
20. உ.வே.சா. (பதி.ஆ.), பத்துப்பாட்டு மூலமும் நச்சினுர்க்கினியருரையும், ப:651.
21. உ. வே. சா. (பதி.ஆ.), குறுந்., ப.83.

**காக்கை கரைதல்**

காக்கை கரைதல், குயில் பயிற்றல், நாரை உயரப்பறத்தல், கூகை அலறல் முதலாயின நிமித்தங்களாகக் கருதப்பட்டன என்பதை அகப்பாடல்களிலும் புறப்பாடல்களிலும் காணலாம்.

காக்கை கரைந்தால் விருந்தினர் வருவர் என்ற கருத்தில் அமைந்த பாடலொன்றைக் குறுந்தொகையில் காண்கின்றோம். அப்பாடலைப் பாடியவர் காக்கைப்பாடினியார் நச்செள்ளையார் என்றே பெயர் பெறுகிறார்.

''திண்டேர் நள்ளி கானத் தண்டர்
பல்லா பயந்த நெய்யிற் றொண்டி
முழுதுடன் விளைந்த வெண்ணெல் வெஞ்சோ
றெழுகலத் தேந்தினுஞ் சிறிதென் றோழி
பெருந்தோ ணெகிழ்த்த செல்லற்கு
விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே''[22]

'நும் வருகையைக் காக்கை கரைந்த நன்னிமித்தத்தாலே உணர்ந்து தலைவி ஆற்றியிருந்தனள், என்னுடைய அன்பு மொழிகளாலே அவள் ஆற்றியிருக்கவில்லை' என்று தோழி தலைவனுக்கு எடுத்துக் கூறினாள் என்பது பாட்டின் பொருள். இப்பாட்டின் மூலம் நன்னிமித்தமாகக் கரைந்த காக்கைக்குப் பலிச்சோறு படைக்கின்ற பழக்கம் பெண்களிடம் இருந்தது என அறிகிறோம்.

உடன் போக்கினை அறிந்து வருந்தும் நற்றாய் தலைவனும் தலைவியும் திரும்பி வந்ததும் மணம் முடித்துப் பார்க்க வேண்டும் என்று விழைகின்றாள். காக்கையை நன்னிமித்தமாய்க்கரையும்படி வேண்டுகின்றாள். அவ்வாறு கரையின் பலிக்கடன் ஈந்துமகிழ்விப்பதாகவும் கூறுகின்றாள். இக்கருத்தடங்கிய பாடலொன்றை ஐங்குறுநூற்றில் காண்கின்றேம்.

''மறுவில் தூவிச் சிறுகருங் காக்கை
யன்புடை மரபினின் கிளையோ டாரப்
பச்சூன் பெய்த பைந்நிண வல்சி
பொலம்புனை கலத்திற் றருகுவென் மாதோ
வெஞ்சின விறல்வேற் காளையொ
டஞ்சி லோதியை வரக்கரைந் தீமே''[23]

---

22. குறுந்., 210.
23. ஐங்குறு., 391

நன்னிமித்தமாகக் காக்கை கரையும்படி வேண்டுதலும் அவ்வாறு கரையின் அதற்குப் பலிச்சோறிடுதலும் உண்டு என்பதை இப் பாட்டின் மூலம் அறியலாம்.

**பலியுணவு**

இப்பலி இருவகையானதாகத் தோன்றுகிறது.

1. நெய்கலந்த வெண்ணெல் வெஞ்சோறு. இது புலவின்றி ஆக்கப்பெறும் சைவ உணவு என்பது போதரும்.
2. பச்சிறைச்சியிடப்பட்ட நிணத்தால் சமைத்த நல்லுணவு. இது புலவு கலந்த அசைவ உணவு என்பது போதரும்.

ஊனுண்ணாமை, ஊனுண்ணல் ஆகிய இருவகைக் கோட்பாடுகள் பண்டைக்காலத்தில் இருந்தன என்னும் குறிப்பு இதனால் பெறப்படும்.

இங்கு எடுத்துக்காட்டிய பாடல்கள் இரண்டிலும் நன்னிமித்தமாகக் கரையும் காக்கைக்கே பலியுணவு படைப்பதாகிய நிலையினைக் காண்கின்றோம்.

''உயர்ந்தோ னேந்திய வரும்பெறற் பிண்டம்
கருங்கட் பேய்மகள் கைபுடையூஉ நடுங்க
நெய்த்தோர் தூஉய நிறைமகி ழிரும்பலி
எறும்பு மூசா விறும்பூது மரபிற்
கருங்கட் காக்கையொடு பருந்திருந் தார''[24]

இங்கு முரசறை கடவுளுக்கு வழிபடும் நோக்கில் மன்னன் படைக்கின்ற பலியுணவு 'அரும்பெறல் பிண்டம்' எனக் குறிக்கப்பட்டுள்ளது. அவ்வுணவினைப் பெரிய சண்களையுடைய பேய்மகளும்தீண்டுதற்கு அஞ்சிக்கைகளைப் புடைத்துக் கொண்டு நடுங்குவாள். அது குருதி தூவிய நிறைந்த கள்ளொடு கூடிய பெரிய பலியுணவாகும். அதனை எறும்பும் மொய்க்காது. அதனைக் கரிய கண்களை உடைய காக்கையுடனே பருந்துகள் இருந்து உண்ணும். இதிலிருந்து நன்னிமித்தம் வேண்டிப் பலியிடுகின்ற முறையும் இருந்திருக்கின்றது என்று தெரிகின்றது.

24. பதிற்றுப்,, 30: 35-39

**குயில் பயிற்றல்**

நற்றிணையில் காப்பியஞ்சேந்தனர், தோழி கூற்றாய் அமைத்துப் பாடிய பாட்டொன்றில் 'குயில் பயிற்றல்' நன்னிமித்தமாகக் கூறப்பட்டுள்ளது. பொருள்வயின் பிரிந்த தலைவன் குறித்த பருவத்திலே வந்துவிடுவான் என்பதைக் குறிக்கும் பல நன்னிமித்தங்களைக் காட்டுகின்ற தோழி,

''மனைமர நொச்சி மீமிசை மாச்சினை
வினைமாண் இருங்குயில் பயிற்றலும் பயிற்றும்'' [25]

என்கிறாள். இதனால் குயிலின் பாடலையும் நம் முன்னோர் நிமித்தமாகக் கொண்டனர் என்னும் உண்மை தெரிய வருகின்றது.

**நாரைகள் உயரப்பறத்தல்**

பிரிவின்கண் ஆற்றாளாகிய தலைவிக்குத் தலைவன் வருதற்குரிய நன்னிமித்தங்கள் வாய்க்கப் பெற்றனவாய்க் கூறுகின்ற தோழி, நாரைகள் வானத்தில் உயரப்பறந்த காட்சியினைக் குறிப்பிடுகின்றாள்.

''குருகும் இரு விசும் பிவரும்'' [26]

என்பதற்கு நாரைகள் உயரப் பறத்தல் நன்னிமித்தமாகும் என்னும் பொருள் தோன்றும்படி உரையாசிரியர் விளக்கம் எழுதுகின்றார். [27]

**ஆந்தை அலறல்**

போரில் புண்பட்ட வீரனொருவனை அவன் மனைவி வீட்டில் வைத்துக் காப்பாற்ற முயல்கின்றாள். அவன் இறந்து விடுவான் என்பதற்கு அறிகுறிகளாகப் பல தீயநிமித்தங்கள் தோன்றுகின்றன. அத்தீய நிமித்தங்களில் ஆந்தைஅலறலும் ஒன்றாகக் காட்டப்படுகின்றது.

இதனை,

''அஞ்சுவரு கூகைஆற் குரலுந் தூற்றும்'' [28]

என்பதால் அறியலாம்.

---

25. நற்., 246: 3-4.
26. குறுந்., 260: 1.
27. பொ. வே. சோமசுந்தரனார் (உ-ஆ-), குறுந்., ப. 385
28 புறம்., 280:5.

பிதுங்கியன போன்ற கண்களை உடைய கூகை குழறுதல் நாட்டிற்கு வரும் அழிவை உணர்த்தும் தீநிமித்தமாகச் சுட்டப் படுகின்றது.

தீநிமித்தமாக அமைகின்ற கூகையின் குரலைக்,

''கழல்கட் கூகைக் குழறுகுரற் பாணி
......... . .. ...............................
பெரும்பா ழாகுமன் னளிய தாமே''[29]

எனப் பாலைக் கௌதமனர் குறிப்பிடுகின்ருர்.

ஆந்தையின் குரல் வழிச்செல்லுவோருக்குக் காரியத்தை உணர்த்தும் நிமித்தமாகும் என்பதைப்,

''.............. பருந்திருந்து
உயாவிளி பயிற்றும் யாவுயர் நனந்தலை
உருள்துடி மகுளியின் பொருள்தெரிந் திசைக்குங்
கடுங்குரற் குடிஞைய..............''[30]

என வரும் அகநானூற்றுப் பாடற் பகுதியாலும் அறியலாம்.

இதுகாறும் கூறியவற்ருல் பண்டைத் தமிழர்கள் பறவைகளுடைய குரல், செலவு முதலியவற்றையும் காக்கை, பருந்து ஆகிய பறவைகள் பலியுணவு உண்ணுதலையும், நாரைகள் உயரப்பறத் தலையும் நிமித்தங்களாகக் கருதினர் என்பது புலனுகும்.

**ஒப்புமை**

''மிகப்பழங் காலத்துமனிதன் பறவைகளைப்பார்த்து நிமித்தம் கண்டான் என்று மன்பதை ஆராய்ச்சியாளர் கூறுவர். இலத்தீன் மொழியில் நல்ல நிமித்தத்தைக் குறிக்கும் சொல் (auspicious) பறவைகளைக் காணல் என்ற பொருளில் வந்திருப்பதைக் கவனிக்க வேண்டும். பறவைகள் பறக்கும் திசையைக் கண்டும், வெளியிடும் குரலைக் கேட்டும் பறவைகளின் குடல் முதலிய உள்ளுறுப்புக்களை ஆராய்ந்தும் பழங்கால மனிதன், பின்னல் நிகழப் போவதை முன்னல் கூறினன். சங்ககாலத்திலும் பறவைகளின் குரலைக்கேட்டு நன்னிமித்தம் காணும் வழக்கம் இருந்ததென்பது தெரிகின்றது.

29. பதிற்., 22: 36, 38
30. அகம்., 19:2-5

இதன் காரணமாகப் 'புள்' என்றசொல்லிற்கு நன்னிமித்தம் என்ற பொருளும் சங்க காலத்திலேயே தோன்றியது.''[31]

**முடிவுரை**

தமிழ் மக்கள் இயற்கையோடியைந்த வாழ்க்கையை மேற்கொண்டிருந்த காரணத்தினால் புட்குரலையும், புட்செலவையும் நன்னிமித்தமாகவும் எச்சரிக்கையாகவும் நம்பினர் என்னும் உண்மை இவற்றால் பெறப்படும்.

31. பி.எல். சாமி, சங்க இலக்கியத்தில் புள்ளின விளக்கம் ப.2.

# 4

# ஏனைய நிமித்தங்கள்

**முன்னுரை**

புள் பற்றிய நிமித்தங்களைப் போன்றே பல்லி, ஓந்தி, ஆமா, யானை, குதிரை, பன்றி, நரி, வண்டு பற்றிய பிற நிமித்தங்களும் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. அவற்றுள்ளும் பல்லி பற்றிய நிமித்தங்களே மிகுதியும் காணப்படுகின்றன.

**பல்லி நிமித்தம்**

அகநானூற்றில், மாண்புற உயர்ந்த நல்ல மனையில் ஓரிடத்தே நின்று நற்பக்கத்தே பல்லி ஒலிக்குந்தோறும் அதனைப் போற்றுகின்ற தலைவியைக் காண்கிறோம்.

"ஓங்கிய நல்லில் ஒருசிறை நிலேஇப்
பாங்கர்ப் பல்லி படுதொறும் பரவிக்
கன்று புகு மாலே நின்ருேள்............"[1]

இவ்விடத்து நற்பக்கத்திலிருந்து பல்லி ஒலிப்பது தலேவன் வரவை அறிவிக்கும் நன்னிமித்தமாகக் கருதப்பட்டது. இந்நிமித்தம் தலேவியை மையப்படுத்தி அமைந்துள்ளது.

பிளந்த வாயினே உடைய பல்லி நற்பக்கத்தே செய்தஒலியாகிய நிமித்தம் உணர்ந்து பன்றி கொல்லேயில் விளேந்திருக்கும் நல்ல செந்தினேயின் கதிரை உண்ணவரும். கானவன் பன்றி வருதலே அறிந்து தீப்பந்தம் கொளுத்துவான். கானவன் ஏற்றிய நெடுஞ் சுடரைப் பார்த்துவிட்டு வந்து தலேவன், தலேவியினுடைய நடுக்கத்தைத் தரும் துன்பத்தினேத் திர்த்து வைப்பான். இச்செய்தியை.

"முதைச்சுவல் கலித்த மூரிச் செந்தினே
ஓங்குவணர்ப் பெருங்குரல் உணீஇய பாங்கர்ப்
பகுவாய்ப் பல்லிப் பாடோர்த்துக் குறுகும்
புருவைப் பன்றி வருதிறம் நோக்கிக்
கடுங்கைக் கானவன் கழுதுமிசைக் கொளீஇய
நெடுஞ்சுடர் விளக்கம் நோக்கி வந்துநம்
நடுங்குதுயர் களேந்த நன்னராளன்"[2]

என்னும் பாடற் பகுதியால் அறியலாம். இப்பாட்டில் கானவனுக்கும், பன்றிக்கும் பல்லியின் ஒலி நிமித்தமாய் அமைகின்றது.

பாலே நிலத்தில் பல்லிகள் தங்கியிருக்கும் இடத்தையும் அவற்றின் ஒலியாகிய நிமித்தத்தையும் காவன் முல்லேப்பூதனுர் அழகுபடச் சித்திரித்துள்ளார்:

"பதுக்கைத் தாய செதுக்கை நீழற்
கள்ளி முள்ளரைப் பொருந்திச் செல்லுநர்க்கு
உறுவது கூறுஞ் சிறுசெந் நாவின்
மணியோர்த் தன்ன தெண்குரல்
கணிவாய்ப் பல்லிய காடிறந் தோரே"[3]

1. அகம்., 9: 18-20
2. அகம்., 88: 1-7
3. அகம்., 151: 11-15.

குறைந்த நிழலையுடைய முட்கள் பொருந்திய கள்ளியின் அடியில், தங்கி வழிச் செல்லுவார்க்கு உண்டாகும் நன்மை தீமைகளை மச.. திடம் கூறும் வாயையுடைய பல்லிகள் மணியொலி போன்று ஒலித்துக் காட்டும். பல்லி, நன்னிமித்தத்தையும் தீநிமித்தத்தையும் ஒலித்து உணர்த்துவதால் அதனைக் 'கணிவாய்ப்பல்லி' என்று சுட்டுதல் ஈண்டுக் கருதத்தக்கது. பல்லியின் ஒலி, மணி ஒலி போன்று இருந்தது என்பதை 'மணியோர்த் தன்ன தெண்குரல் கணிவாய்ப் பல்லி' என்பதனுல் அறியலாம். பல்லியின் ஒலி இத்தன்மைத்து என்று கூறுதல் இப்பாடலின் மற்ருெரு சிறப்பாகும். இப்பாட்டில் பல்லி நிமித்தம் தலைவனை மையப்படுத்திக் கூறப்பட்டுள்ளது.

பிரிவுத் துன்பத்தால் வருந்தும் தலைவி நினைக்குந்தோறும் ஒலிக்கின்ற பல்லியானது நன்னிமித்தத்தை வேண்டியிருக்கும் தலைவியின் காதில் தலைவனுடைய வரவை அறிவுறுத்தும். இதனைப் பொருந்தில் இளங்கீரனுர்,

''வருந்துதோட் பூசல்களையு மருந்தென
உள்ளுதொறு படூஉம் பல்லி
புள்ளுத்தொழு துறைவி செவிமுத லானே''[4]

என்று கூறுகின்ருர். இப்பாட்டில் பல்லி நிமித்தம் தலைவியை மையப்படுத்திக் கூறப்பட்டுள்ளது.

பாலைவழியினைப் பாடும் மருதனிள நாகனுர் அங்குப் பல்லி ஒலித்தலையும் அதனைத் தீநிமித்தமாகக் கருதி யானை மீதிருந்து அமர்ந்து செல்லும் வேந்தனும் அவ்விடத்தினின்றும் மேற்செல்ல மாட்டான் எனும் செய்தியைக் குறிப்பிடுகின்ருர். இக்கருத்தமைந்த் பாடற்பகுதி வருமாறு:

''வில்லீண் டருஞ்சமந் ததைய நூறி
நல்லிசை நிறுத்த நானுடை மறவர்
நிரைநிலை நடுகற் பொருந்தி இமையாது
இரைநசைஇக் கிடந்த முதுவாய்ப் பல்லி
சிறிய தெற்றுவ தாயிற் பெரிய

4. அகம்., 351:15-17

ஓடை யானை உயர்ந்தோ ராயினும்
நின்றாங்குப் பெயருங் கானஞ்
சென்றோர் மன்னென இருக்கிற் போர்க்கே''[5]

போரில் இறந்து புகழ் நாட்டிய வீரருக்கு அமைக்கப்பட்ட நடுகல்லைப்பொருந்தி இருக்கின்ற, கண் இமையாது உணவினை வேட்டையாடுகின்ற பெரிய வாயினை உடைய பல்லியின் ஒலி கேட்டுப் பட்டத்துயானை மீது அமர்ந்து செல்லும் வேந்தனும் அவ்விடத்தினின்றும் மேற்செல்லாது திரும்பும்படியான கானகம்' என்பது இதன் பொருள். இதனால் தீநிமித்தமாகப் பல்லி ஒலிக்குமிடத்து மன்னருங்கூடத் தாம் மேற்கொண்ட முயற்சியினைக் கைவிடுவர் என்னும் உண்மை பெறப்படும். பல்லி ஒலித்தலாகிய நிமித்தம் மிகவும் ஆற்றலுடையதாகக் கருதப்பட்டது என்பதற்கு இப்பாடல் சான்றாகும்,

பிளந்த வாயினையுடைய பல்லி ஒலிக்குந் தோறும் தெய்வத்தைத் தொழுது 'நல்ல மொழியினைக் கூறுவாயாக' என அதனை வேண்டி மனம் நடுங்கி மாலைக் காலத்தில் தன்னுடைய தலைவி மாறுபடுவாளோ எனத் தலைவன் தன் நெஞ்சுக்குக் கூறியதாக அகநானூற்றில் ஒரு குறிப்புக் காணப்படுகின்றது.

''மையல் கொண்ட மதனழி யிருக்கையள்
பகுவாய்ப் பல்லி படுதொறும் பரவி
நல்ல கூறென நடுங்கிப்
புல்லென் மாலையொடு பொருங்கொல் தானே''[6]

என்பது அப்பாடற்பகுதி.

நன்னிமித்தமாகக் கரையும் காக்கையை வேண்டுதலைப் போலவே, நன்னிமித்தமாக ஒலிக்கும்படி பல்லியை வேண்டுகின்ற வழக்கமும் இருந்திருக்கிறது என்பதை இப்பாடற் பகுதியால் அறியலாம்.

முள்போன்ற மயிரை உடைய பிடரையும் சிறிய கண்ணையும் உடைய பன்றி உயர்ந்த மலைப்பக்கத்தில் தினைக் கொல்லையில் மேயச் செல்லும் பொழுது ஊறு நிகழும் என்பதைப் பல்லி ஒலித்து அறிவிக்கும். அத் தீநிமித்தத்தை அறிந்த பன்றி தம் முழையிலேயே வந்து தங்கிவிடும். இச்செய்தியை,

5. அகம்., 387: 13-20
6. அகம்., 289: 14-17

''எய்ம்முள் அன்ன பரூஉமயிர் எருத்தின்
செய்ம்ம் மேவல் சிறுகட் பன்றி
ஓங்குமலை வியன்புனம் படீஇயர் வீங்குபொறி
நூழை நுழையும் பொழுதில் தாழாது
பாங்கர்ப் பக்கத்துப் பல்லி பட்டென
மெல்ல மெல்லப் பிறக்கே பெயர்ந்துதன்
கல்லளைப் பள்ளி வதியும்......''[7]

என வரும் பாட்டால் அறியலாம். பல்லி மனிதருக்கே அன்றிப் பிற விலங்கினத்திற்கும் நிமித்தமாய் ஒலிக்கின்ற புதுமையை இப் பாட்டில் காண்கிறோம்.

தலைமகன் பிரிதலால் மேனி வேறுபட்டு மெலிந்த தலைமகளை நோக்கி இனிய சகுனங்களைச் சொல்லி ஆற்றுவிக்கும் தோழி நெடுஞ்சுவரில் இருந்து பல்லி ஒலிக்கின்ற நன்னிமித்தத்தை முதற் கண் குறிப்பிடுகின்றாள்.

''இடூஉ ஊங்கண் இனிய படூஉம்
நெடுஞ்சுவர்ப் பல்லியும் பாங்கின் தேற்றும்''[8]

என்பது அப்பாடற் பகுதி.

கலித்தொகையில் பொருள்வயின் பிரிந்த தலைவனை நினைந்து வருந்தும் தலைவிக்கு நிகழ்ந்த நன்னிமித்தங்களைக் கூறிவருகின்ற தோழி அவர்களுடைய மனையின் கண் இருந்து பல்லி ஒலித்ததையும் குறிப்பிடுகின்றாள். இச்செய்தியை,

''இனைநல முடைய கானஞ் சென்றோர்
புனைநலம் வாட்டுந ரல்லர் மனைவயிற்
பல்லியும் பாங்கொத் திசைத்தன''[9]

எனவரும் பாடற் பகுதியால் அறியலாம்.

இதுகாறும் கூறியவற்றான் பல்லிபற்றி வந்த நிமித்தம் அகப் பாடல்களில் மட்டுமே பயின்று வந்திருக்கிறது என்னும் உண்மை

---

7. நற்., 98: 1-7
8. நற்., 246: 1-2
9. கலித்., பாலைக்கலி, 11.19-21

விளங்கும். அகப்பாடல்களிலும் பாலைத்திணையில் அமைந்தபாடல் களில் இக்குறிப்பு மிகுதியும் காணப்படுகின்றது. எடுத்துக்காட்டிய பல்லிபற்றிய நிமித்தங்களுள் எல்லாம் உக்கிரப்பெருவழுதி பாடிய நற்றிணைப் பாடலும் ஈழத்துப்பூதன் தேவனார்பாடிய அகநானூற் றுப் பாடலும் ஆகிய இரண்டு மட்டுமே குறிஞ்சித் திணையில் அமைந்திருக்கின்றன. தலைவனை மையப்படுத்தியும் தலைமகளை மையப்படுத்தியும் பல்லி பற்றிய நிமித்தம் உரைக்கப்பட்டிருக் கின்றது. மனைக்கண் சுவரில் இருந்தும், காட்டில் நடுகல், கள்ளியின் நிழல் ஆகிய இடங்களிலிருந்தும், பல்லி ஒலிப்பதாகக் கூறப்பட் டுள்ளது. புலவர்கள் பல்லி ஒலிப்பதை மட்டும் பாலை வழியில் நிமித்தமாகக் காட்டுகின்றனர். வீட்டில் நற்பக்கத்தில் இருந்து ஒலிப்பதை நன்னிமித்தமாகக் காட்டியுள்ளனர். பல்லி ஒலித்தலை மட்டுமன்றி அதுஇருந்து ஒலிக்கின்ற இடத்தையும் வைத்து நிமித் தத்தைக் கணித்தனர் என அறியலாம்.

**ஓந்தி**

காட்டு வழியாகச் செல்கின்றவர்கள் ஆண் ஓந்தியைக் காணு தல் நன்னிமித்தமாகக் கொள்ளப்பட்டது என்பதை அள்ளூர் நன்முல்லையார் பாடிய குறுந்தொகைப் பாட்டால் அறியலாம்.

> ''வேதின வெரிநி னோதி முதுபோத்து
> ஆறுசென் மாக்கள் புட்கொளப் பொருந்தும்''[10]

**ஆமா**

வீட்டினிடத்தில் கன்றை ஈன்ற ஆமாவினது கூட்டம் நல்ல புல்லை மேய்தலை நன்னிமித்தமாகக் கொள்வர் என்பதை பி.எல்.சாமி எடுத்துக் காட்டுகின்றார்.[11] ஆமா புல் மேய்வது நாட்டில் அமைதி நிலவும் என்பதன் அறிகுறியாக அவர் குறிப் பிடுகின்றார். இதற்கு அரணுக் கபிலர் பாடிய பாடலொன்றை எடுத்துக் காட்டுகின்றார்.

> ''மைம்மீன் புகையினுந் தூமந் தோன்றினும்
> தெனறிசை மருங்கின் வெள்ளி யோடினும்
> வயலக நிறையப் புதற்பூ மலர

10. குறுந்., 140: 1-2

11. பி.எல். சாமி, சங்க இலக்கியத்தில் விலங்கின விளக்கம், ப.80

மனைத்தலை மகவை யீன்ற வமர்க்கண்
ஆமா நெடுநிரை நன்பு லாரக்
கோஒல் செம்மையிற் சான்றோர் பல்கிப்
பெயல்பிழைப் பறியாப் புன்புலத் ததுவே
பிள்ளை வெருகின் முள்ளெயிறு புரையப்
பாசிலை முல்லை முகைக்கும்
ஆய்தொடி யரிவையர் தந்தை நாடே''[12]

என்பது அப்பாட்டாகும்.

**யானை**

குதிரை, யானை பற்றிய நிமித்தங்களும் புறநானூற்றில் காணப்படுகின்றன. யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும் பொறை இறத்தற்கு ஏழு நாட்களுக்கு முன் அவனுடைய நாட்டில் பல தீய நிமித்தங்கள் தோன்றின. அவற்றைக் கண்டு மனங் கலங்கிய கூடலூர் கிழார் பாடிய பாட்டில், வலிமையுடைய யானை கையை நிலைத்தே வைத்துத் துஞ்சியதும், காற்றுப் போலும் செல்லுகின்ற குதிரைகள் கதியின்றிக் கிடந்ததும் தீநிமித்தங் களாகச் சுட்டப்பட்டுள்ளன. இச்செய்தியை, 'மைந்துடை யானை கைவைத் துறங்கவும்', 'காலியற் கலிமாக் கதியில வைகவும்'[13] எனும் பாடற் பகுதிகளின் மூலம் அறியலாம்.

**பன்றி**

பன்றி ஏற்றின் மீது ஏறுதலும் தீநிமித்தங்களில் ஒன்றாகக் கொள்ளப்பட்டது என்பதைச் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனைக் கோவூர் கிழார் பாடிய பாட்டின் மூலம் அறிய லாம். 'களிறுமேல் கொள்ளவும்'[14] எனுந் தொடருக்குப் 'பன்றி ஏற்றை ஏறவும்'[15] எனப் பொருள் கூறி அக்காட்சியைக் கனவிலோ நனவிலோ காணுதல் தீநிமித்தமாகும் என்பதை விளக்கியுள்ளனர்.

---

12. புறம்., 117
13. புறம்., 229: 18,21
14. புறம்., 41:9
15. (அ) உ.வே.சா. (பதி.ஆ.) புறநானூறு மூலமும் உரையும் பக்.106, 107.
   (ஆ) ஔவை சு. துரைசாமிப்பிள்ளை (உ.ஆ.), புறநானூறு பக் 112, 113

**நரி**

நண்பகற் பொழுதில் பசியால் வருந்தித் தனித்திருக்கின்ற குறுநரி ஊளையிடுதல் நாட்டிற்குத் தீமை வருவதை உணர்த்தும் நிமித்தமாகும். இதனை,

> ''ஞாயிறு கோடா நண்பக லமயத்துக்
> கவலை வெண்ணரி கூஉமுறை பயிற்றிக்
> ..............................................
> ..............................................
> பெரும்பா ழாகுமன் அளிய தாமே''[16]

என வரும் பதிற்றுப்பத்துப் பாடலால் அறியலாம்.

பிறவற்றுக்கண் தோன்றிய நிமித்தங்களை எடுத்துக்காட்டு கின்றபோது நச்சினார்க்கினியர், 'ஓரிக்குரலை'யும் குறிப்பிடுகின்றார் என்பது ஈண்டு மனங் கொள்ளத்தக்கது.[17]

**வண்டு**

போர்க்களம் சென்று வந்த வீரனொருவன் மார்பில் புண்பட்டு மயங்கிக் கிடக்கின்றான். அவன் உடம்பில் ஏராளமான விழுப்புண்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவனுக்கு இறப்பு நெருங்கிக் கொண்டிருக்கிறது அந்நிலையில் அவனைக் காணப் பாணனும் விறலியும் துடிகொட்டுவோனும் அவன் வீட்டின் புறத்தே காத்திருக்கின்றனர். இந்நிலையில் அவனுடைய மனைவி சில தீநிமித்தங்களைக் கண்டு புலம்புகிறாள். அவை:

> ''நண்பகற்போதில் தும்பிகள் முரலுதல், நெடிய மனையின்கண்ணே ஏற்றிவைத்த விளக்குகள் அணைந்து விடுதல், உறங்குதலை ஒழித்த தலைவியின் கண்களும் உறக்கத்தை நாடுதல், அச்சந் தரும்படியாகக் கூகையும் அலறுதல், நெல்லும் நீரும் தூவி விரிச்சி கேட்கும்போது நற்சொல் கிடைக்காமை''

ஆகியனவாகும்.

---

16. பதிற்றுப்., 22: 34-35, 38
17. தொல். பொருள். நச்., ப. 293.

"என்னை மார்பிற் புண்ணும் வெய்ய
நடுநாள் வந்து தும்பியும் துவைக்கும்
நெடுநகர் வரைப்பின் விளக்கும் நில்லா
துஞ்சாக் கண்ணே துயிலும் வேட்கும்
அஞ்சுவரு குராஅற் குரலுந் தூற்றும்
நெல்நீர் எறிந்து விரிச்சி ஓர்க்கும்
செம்முது பெண்டின் சொல்லும் நிரம்பா
துடிய பாண பாடுவல் விறலி
என்னு குவிர்கொல் அளியிர் நுமக்கும்
இவணுறை வாழ்க்கையோ அரிதே..."[18]

இப்பாட்டில் கூறப்பட்டுள்ள தீநிமித்தங்களுள் எல்லாம் நண்பகல் வேளையில் தும்பி ஒலித்தல் முதன்மையாகக் கூறப்பட்டிருத்தல் கருதத்தக்கது. இங்ஙனம் பகற்பொழுதில் வண்டு முரலுதலைத் தீநிமித்தமாகக் காட்டுகின்ற மரபு வேறுஇடங்களில் காணப்பெற வில்லை.

**மரமும் மலரும்**

மரத்தை அடிப்படையாகக் கொண்டு எழுந்த நிமித்தங்களை யும் தொல்காப்பியம், பதிற்றுப்பத்து, புறநானூறு, குறுந் தொகை, அகநானூறு, நற்றிணை, கலித்தொகை முதலியவற்றில் காண்கிறோம். பொதுவாக மரங்களின் தோற்றத்தை நிமித்த மாகக் கூறுதலும் குறிப்பிட்ட ஒரு மரத்தினை நிமித்தமாகக் கூறுதலும் ஆகிய இருவகை நிலைகளைக் காண்கிறோம். பூக்கள் மலர்வதை நன்னிமித்தமாகக் காட்டுகின்ற மரபும் காணப் படுகின்றது.

நாடாளும் மன்னனுக்கும் நாட்டுக்கும் வர இருக்கின்ற தீமை யை அறிந்த கோவூர்கிழார், 'பெருமரத்து இலையில் நெடுங்கோடு வற்றல் பற்றவும்'[19] என்னும் செய்தியைத் தீநிமித்தங்களுள் ஒன்றாகக் குறிப்பிடுகின்றார். பெரிய மரத்தினுடைய கொம் புகள் இலை உதிர்ந்து வற்றிப் போயிருந்த காட்சி இங்கு மரம் பற்றி வந்த நிமித்தமாகக் காட்டப்படுகின்றது. கே. கே. பிள்ளை,

18. புறம்., 280: 1-10.
19. புறம்., 41:5.

பெரிய மரம் இலை உதிர்ந்து அதன் நெடுங்கோடு தீப்பற்றி எரிவது அந் நாட்டுக்கு வரவிருக்கும் தீமையைக் காட்டு வதாகும்[20] என்று இதனையே குறிப்பிடு கின்றார்.

உன்னமரம், போர் செய்வதற்குச் செல்வோர் நிமித்தம் பார்த்தற் குரிய ஒருவகை மரமாகக்[21] கருதப் பட்டது என்னும் செய்தியைத் தொல் காப்பியம், பதிற்றுப் பத்து ஆகிய நூல்களில் காண்கிறோம்.

உன்னம் என்பது ஒரு வகை மரம். இம்மரம் தளிர்த்துத் தழைத்திருப்பின் அரசனுக்கு நன்மையாம்; கரிந்துகாட்டின் தீமை யாம். படையெடுத்துச் செல்லும் வேந்தனும் படை வீரர்களும் இந்நிமித்தம் பார்த்துப் புறப்படுவர். இதனைத் தொல்காப் பியர் 'உடல் வேந்தடுக்கிய உன்னநிலை''[22] என்று கூறுவர். 'பிறக்கடி யிடா உடன்ற வேந்தனை உன்னமரத்துடன் அடுக்கிக் கூறப்பட்ட உன்னநிலையும்' எனப் பொருள் கூறிய நச்சினார்க்கினியர். வேந் தன் கருத்தானன்றி அவன் மறவன் வேந்தற்கு நீ வென்றி கொடுத் தால் யான் நினக்கு இன்னது செய்வலெனப்பரவுதலும், எம் வேந் தற்கு ஆக்கம் உளதெனின் அக்கோடு பொதுளுக வெனவும் பகைவேந்தற்குக் கேடு உளதெனில் அக்கோடு படுவதாகவெனவும் நிமித்தம் கோடல் என இருவகைத் தெய்வத் தன்மை; அஃதுடை மையான் அடுக்கிய உன்னநிலையு மென்றார்[23] என விளக்கமும் எழுதுகின்றார். அவரே வேந்தனைப் பரவுக்கடனுகஅடுக்கிய உன்ன நிலைக்குத்,

''துயிலின் கூந்தற் றேளிணைப் பேதை
வெயினிழ லொழிய வெஞ்சுரம் படர்ந்து
செய்பொருட் டிறவீ ராகிய நும்வயி
னெனக் கொன்று மொழியின ளாகத் தனக்கே
யருநகை தோன்றிய வழுரற் கிளவியன்
கலுழ்கண் கரந்தன டானே யினியே
மன்னற் பராஅய் முன்னியது முடித்தோ
ருன்னஞ் சிறக்கு மொள்வினை நினைஇத்

20. கே. கே. பிள்ளை,
தமிழக வரலாறு—மக்களும் பண்பாடும். ப. 173
21. உ, வே. சா. (பதி. ஆ.),
புறநானூறு மூலமும் உரையும், ப: 11.
22. தொல், பொருள்., நச்., 60:8
23. தொல். பொருள். நச்., ப. 145

தலைசாய்த் திருந்த சிலைவலம் போற்றி
வேந்து வழக்கறுத்த கான
நீத்த லொல்லுமோ பூந்தொடி யொழிந்தே''[24]

என்ற பழம் பாடலை எடுத்துக்காட்டுகின்றார்.

சேரமன்னன் நார்முடிச் சேரலை வெற்றிகொள்ள விரும்பிய பகைவர்கள் உன்ன மரத்தினை நிமித்தம் வேண்டினராம். விரிந்து தழைக்க வேண்டிய உன்னம் கரிந்து உதிர்ந்து காட்டி அவர்கள் அடையப்போகின்ற தோல்வியினை முன்னரே காட்டியதாம். இச் செய்தியைப் பின்வரும் பாடற் பகுதியால் அறியலாம்.

''தார்மிகு மைந்தி னார்முடிச் சேரல்
புன்கா லுன்னஞ் சாய்த்து.........''[25]

செல்வக் கடுங்கோ வாழியாதனைக் கபிலர், 'பொன்னைப் போன்ற நிறத்தை உடைய பூவினையும் சிறிய இலைகளையும் பொலிவற்ற அடிமரத்தையும் உடைய உன்ன மரத்துக்குப் பகைவனாகிய என்னுடைய அரசன்' என்று பாராட்டுகின்றார். இதனைப்,

''பொன்னி என்ன பூவிற் சிறியிலை
புன்கா லுன்னத்துப் பகைவன் என்கோ''[26]

என்பதனால் அறியலாம்.

**வேங்கை**

வேங்கை மரம் பூத்தல் மணநாளை அறிவிக்கின்ற நன்னிமித்தமாகக் கொள்ளப்பட்டது. பூத்த வேங்கையினுடைய மலர்கள் வீழ்ந்து வெறியயர் களம் போலத் தோன்றும் காட்சி மணநாளை அறிவிக்கும் என்பதைச்,

''செம்பரல் முரம்பில் சிதர்ந்த பூழி
நல்நாள் வேங்கைவீ நன்களம் வரிப்ப''[27]

எனவரும் அகப்பாட்டால் அறியலாம்.

24. மேலது., ப.156.
25. பதிற்றுப்., 40:16-17.
26. மேலது., 61:5-6.
27. அகம்., 133:3.4.

மணநாளை உணர்த்துவதாக வேங்கை பூத்தலைக்,

"குன்ற வேலிச் சிறுகுடி யாங்கண்
மன்ற வேங்கை மணநாள் பூத்த
மணியேர் அரும்பின் பொன்வீ தாஅய்"[28]

என்றும்,

"நன்னாட் பூத்த நாகிள வேங்கை"[29]

என்றும் வரும் பாடற்பகுதிகளால் அறியலாம்.

வேங்கை அரும்புங் காலத்துத் தினைக் கதிர்கள் முற்றிவிடும்; வேங்கை அரும்பியதை அறிந்த கானவர், தினை அறுப்பதற்காகக் கூடுவர். வேங்கை, கானவர் விதைத்த தினை விளைந்திருக்கும் என்பதைச் சோதிட வல்லார் போல அறிவிக்கின்ற தன்மையாத லின் 'கணிவாய் வேங்கை' என்பார் கபிலர். இதனை,

"முன்றில் பலவின் படுசுளை மரீஇப்
புன்தலை மந்தி தூர்ப்பத் தந்தை
மைபடு மால்வரை பாடினள் கொடிச்சி
ஐவன வெண்நெல் குறூஉம் நாடனொடு
குருடைச் சிலம்பின் அருவி ஆடிக்
காரரும்பு அவிழ்ந்த கணிவாய் வேங்கைப்
பாவமை இதணம் ஏறிப் பாசினம்
வணர்குரல் சிறுதினை கடியப்
புணர்வது கொல்லோ நாளையும் நமக்கே"[30]

எனவரும் நற்றிணைப் பாட்டால் அறியலாம்.

வேங்கை மலரும் காலத்தில் கானவர் திருமணம் செய்தல் வழக்கம். இச்செய்தியை,

"நின்னுறு விழுமங் கூறக் கேட்டு
வருமே தோழி நன்மலை நாடன்

28. மேலது, 232:6-8,
29. மேலது., 85:10.
30. நற்.. 373.

வேங்கை விரிவிட நோக்கி
வீங்கிறைப் பணைத்தோள் வரைந்தனன் கொளற்கே''[31]

எனவரும் கலித்தொகைப் பாடற் பகுதியால் அறியலாம்.

ஈண்டு வேங்கை மலருதல் நன்னிமித்தமாகும் என்னும் குறிப்புப் பெறப்படுகிறது.

தலைவனது பிரிவால் வருந்தும் தலைவியை நோக்கி, 'நன்னிமித்தங்கள் உண்டாகின்ற ஆதலின் தலைவர் வந்து விடுவார் என்று தோழி ஆற்றுவிக்கின்றாள். அவள் நன்னிமித்தங்களுள் ஒன்றாகப் புதலில் உள்ள போதுகளும் வரிவண்டு ஊதுவதனால் மலர்ந்ததைக் குறிப்பிடுகின்றாள். இதனைப்,

''.............புதலும்
வரிவண் டூத வாய்நெகிழ்ந் தனவே''[32]

எனவரும் குறுந்தொகைப் பாடற் பகுதியால் அறியலாம்.

இவ்வாறு மரத்தையும் மலர்களையும் நிமித்தப் பொருள்களாகக் கொள்ளுகின்ற வழக்கம் தமிழ் நாட்டவரிடமே அன்றி மிசௌரி பள்ளத்தாக்கில் வாழ்ந்த சிவப்பிந்தியர்களிடமும் மேற்கு ஆப்பிரிக்காவில் வாழ்ந்த மக்களிடமும் இருந்ததுஎன்பதை இ.சுந்தரமூர்த்தி தம் ஆய்வு நூலில் எடுத்துக் காட்டுகின்றார்.[33]

'பிறவற்று நிமித்தம்' என்பதற்குப் 'பிறவற்றினித்தம்' எனப் பொருளுரைத்து, 'ஓர்த்து நின்றுழிக் கேட்ட வாய்ப்புள்ளும் ஓரிக்குர லுள்ளிட்டனவுங் கழுதுடன் குழீஇய குரல் பற்றலும், வெஞ்சுடர் மண்டிலத்துக் கவந்தம் வீழ்தலும் அதன்கண் துளை தோன்றுதலுந் தண் சுடர் மண்டிலம் பகல்நில வெறித்தலும் போல்வன'[34] என நச்சினார்க்கினியர் விளக்கம் எழுதுகின்றார்.

'பிறவற்று நிமித்தம்' என்பதற்குப் 'பிற நிமித்தமாவன, அலகு முதலாயின' என்று பொருளுரைத்து, ''காலனும் காலம் பார்க்கும்'' என்பதை மட்டும் இளம்பூரணர் எடுத்துக் காட்டுகின்றார்.[35] இளம்பூரணர், நச்சினார்க்கினியர் ஆகிய இரு உரையா

31. கலித்., 38:23-26.
32. குறுந்., 260:1-2.
33. இ. சுந்தரமூர்த்தி, இலக்கியச் சுடர், ப.13.
34. தொல். பொருள். நச்., ப. 263.
35. தொல். பொருள். இளம்., பக். 153-154.

சிரியர்களும் பிறவற்றுக் கண் தோன்றிய நிமித்தத்திற்குச் சில எடுத்துக்காட்டுகளை மட்டுமே தந்து, 'முதலியன' 'போல்வன' என்று கூறி விடுத்தனர். ஆதலால் அவர்கள் எடுத்துக்காட்டாதன வாகிய முரசு, வெண்குடை, யாழ் பற்றி வந்த நிமித்தங்களை இங்கு பேசுதல் பொருந்தும்.

முன்னர் எடுத்துக்காட்டிய கூடலூர் கிழார் பாட்டில் (புறம், 229) திண்ணிய வாரால் கட்டப்பட்ட முரசும் கண் கிழிந்து உருளுவதும் உலகிற்குக் காவலாகிய வெண்கொற்றக்குடை காலொடிந்து உலருவதும் தீநிமித்தங்களாகச் சொல்லப்படுகின் றன. இதனை அப்புலவர்;

> ''திண்பிணி முரசங் கண்கிழிந் துருளவும்
> காவல் வெண்குடை கால்பரிந் துலறவும்''[36]

என்னும் அடிகளால் புலப்படுத்துகின்றார்.

ஒருகால் பகைவர் தன்னூர் ஆனிரைகளைக் கவர்ந்தேகியது அறிந்து அப்பகைவரை வென்று ஆநிரைகளை மீட்டு வந்தான் ஒரு தலைமகன். அவன் நிரை மீட்குங்கால் செய்த போரில் பகைவரெய் திய அம்புகளால் விழுப்புண் பல பெற்றான். ஊரருகே வந்ததும் அவனுடைய உயிர் உடம்பை விட்டு நீங்கியது. ஊர்மக்கள் அவனுக்கு நடுகல் நாட்டி அவனுடைய பீடும் பெருமையும் பொறித்தனர். அவன் உயிர் வாழ்ந்த காலத்தில், பாணருக்கும் புலவருக்கும் நிலமும் பொருளும் வழங்கிப் புகழ் பெற்றவன். அத்தலைமகன் மாண்டு போனதை அறியாத பாணன் ஒருவன் பொருள் பெறும் பொருட்டு அவன்பால் வருகிறான். அப்பாண னுக்கு வழியில் பல தீய நிமித்தங்கள் உண்டாயின. தன்னிட மிருக்கின்ற யாழினை அவன் இன்னோசை வேண்டுமென்று மீட்டும் பொழுது ஓசை திரிந்து இரங்கற் பண்ணாகிய விளரியே தோன்றியது. அத்தலைமகனைக் காண்டல் இயலாது போலும் எனும் கவலையால் அப்பாணன் வாடினான். இச்செய்தியை,

> ''வளரத் தொடினும் வௌவுபு திரிந்து
> விளரி யுறுதருந் தீந்தொடை நினையாத்
> தளருநெஞ்சத் தலைஇ........''[37]

36. புறம்., 229:19-20.
37. புறம்., 260: 1:3.

எனவரும் புறநானூற்றுப் பாடற் பகுதியால் அறியலாம்.

முல்லைக்கலியில், ஆயர் ஊதுகின்ற குழலிலிருந்து வரும் ஓசையும் நிமித்தமாகக் கொள்ளப்பட்ட செய்தியைக் காண்கிறோம். குழலும் மங்கலமான பண்ணைத் தருதலின் தலைவி விரைவில் மணம் பெறுவாள். இது அவளுக்கு வாய்த்த நன்னிமித்தமாகும் என்பதைத் தோழி சுட்டிக்காட்டுகின்றாள். இதனை,

> "அணிமாலைக் கேள்வன் தரூஉமார் ஆயர்
> மணிமாலை யூதுங் குழல்"[38]

எனவரும் பாடற் பகுதியால் உணரலாம்.

38. கலித்; 101;34-35.

# 5

## மாந்தர் தொடர்பான நிமித்தங்கள்

நாள், புள், விலங்கு, மரம் முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டு நன்னிமித்தங்களும் தீநிமித்தங்களும் கணிக்கப்பட்டன போலவே மாந்தரைக் கொண்டும் நிமித்தங்கள் அறியப்பட்டன. மாந்தர் பேசும் இயற்கையான பேச்சு நன்னிமித்தமாகக் கொள்ளப்பட்டது. இதனை நற்சொல் கேட்டல் என்றும், விரிச்சி கேட்டல் என்றும் கூறுவர். மாந்தர் எதிர்ப்படுதலையும் அவர்தம் செலவையும் வைத்து நிமித்தங்களை அறிந்தனர் என்பதற்குச் சான்றுகள் உள்ளன. கண் முதலியன துடித்தலும் உடம்பில் தோன்றுகின்ற மாற்றங்களும் நிமித்தங்

களாகக் கருதப்பட்டன. மாந்தர் காணுகின்ற கனவு வரவிருக்கின்ற நன்மை தீமைகளை உணர்த்தும் நிமித்தமாகவே கொள்ளப்பட்டு வந்திருக்கிறது.

**விரிச்சி**

தொல்காப்பியப் புறத்திணையியலில், வெட்சித்திணைக்கண் போர் நிகழ்ச்சிக்குரிய துறைகளில் ஒன்ருகப் 'பாக்கத்து விரிச்சி'[1] சுட்டப்படுகின்றது. போர் புரிய விரும்பிய வேந்தன் முதலில் பகைவரின் ஆனிரைகளைக் கவர்ந்து செல்லுவது வழக்கம். அவ்வாறு நிரை கவர்தலுக்குப் போகுமுன் வெற்றி கிடைக்குமா என்பதனை அறிய விரும்பும் படைவீரர்கள், மக்கள் பேசிக்கொண்டிருக்கும் போது அவர்களை அறியாமல் வந்த வாய்ச்சொற்களை நிமித்தமாகக் கொள்ளுவர். அதுவே 'பாக்கத்து விரிச்சி'யாகும். ''நிரைகோடற்கு எழுந்தோர் போந்துவிட்ட பாக்கத்துக் கங்குலின் நல்வாய்ப்புட் கேட்டலும், நிரை மீட்டதற்கு எழுந்தோர் இடைப்புலத்துப் புறம் போந்தோர் கூறியவறுறை வாய்ப்புள்ளாகக் கேட்டலும்''[2] என நச்சிஞர்க்கினியர் குறிப்பிடுகின்ருர்.

'குறித்த பொருளின் பயன் அறிதற்குப் பாக்கத்துக்கண் நற்சொல் ஆய்தல்,[3] என இளம்பூரணரும் இதனைக் குறிப்பிடுகின்ருர். விரிச்சியினை இக்காலத்தும் 'அசரீரி வாக்கு' என்று வழங்குவர். நச்சிஞர்க்கினியரும், இளம் பூரணரும் வாய்ச்சொல் கேட்டலை 'விரிச்சி' எனக்கொண்டனர் என்பது அவர் கூற்ருல் விளங்கும். ஆயின் நற்றிணையில்' திருந்திழை மகளிர் விரிச்சி நிற்ப'[4] என்பதற்குத 'திருந்திய கலன் அணிந்த மகளிர் இப்பொழுது நன்னிமித்தபாக நிற்பர்'[5] என்று விளக்கம் கூறப்பட்டுள்ளது. இதனுல் 'விரிச்சி' என்பது 'நிமித்தம்' என்ற பொதுப்பொருளில் ஆளப்பட்டிருத்தலைக் காணலாம்.

விரிச்சி என்பது ''விரி என்னும் சொல்லுடன் தொடர்புடையதாக இருக்கலாம். எனவே, 'வருங்காரியத்தை விரிவாய் முன்னே தெரிவிப்பது' என்று இச்சொல்லிற்குப் பொருள் கொள்ளலாம்.

1. தொல். பொருள். நச்., 58:1
2. மேலது.' ப.132
3. தொல்.பொருள்: இளம்., ப.76
4. நற்., 40:4
5. அ. நாராயணசாமி ஐயர் (உ-ஆ). நற்றிணை நானூறு பக்.71

ஒரு செயலை மேற்கொள்ளுங்கால் அம்முயற்சி இன்னது ஞான்று கைகூடும் என்பதனை அறிதற்கே இவ்வாறு செய்வர்''[6] என்பது சு. வித்தியானந்தன் கருத்தாகும்,

விரிச்சி கேட்க விரும்புவோர் ஊர்ப்புறத்தே சென்று நெல்லும் மலரும் தூவித் தெய்வம் பரவி, பக்கத்திலே உண்டாகும் மக்கள் சொல்லை எதிர்பார்த்து நிற்பர். அங்ஙனம் நிற்கின்ற பொழுது அவர்கள் கேட்கின்ற சொல் தம் கருத்திற்கு இயைபுடையதாயின் நன்று எனவும், மாறுபடுமாயின் தீது எனவும் கொள்வர் இதனை,

''அருங்கடி மூதூர் மருங்கிற் போகி
யாழிசை இனவண்டு ஆர்ப்ப நெல்லோடு
நாழி கொண்ட நறுவீ முல்லை
அரும்பவிழ் அலரி தூஉய்க் கைதொழுது
பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்பச்
சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்
உறுதுயர் அலமரல் நோக்கி ஆய்மகள்
நடுங்குசுவ லசைத்த கையள் கைய
கொடுங்கோற் கோவலர் பின்னின்று உய்த்தர
இன்னே வருகுவர் தாயர் என்போள்
நன்னர் நன்மொழி கேட்டனம் அதனால்
நல்ல நல்லோர் வாய்ப்புள்.........''[7]

எனவரும் முல்லைப்பாட்டுப் பகுதியால் உணரலாம்.

காவலை உடைய பழைய ஊரின் பக்கத்து நற்சொல் கேட்டற் குரியோர் சென்றனர். வண்டுகள் மொய்க்கும்படியான முல்லை மலர்களை நெல்லுடன் தூவினர். தெய்வத்தை வணங்கி நற்சொல் வேண்டினர். அப்பொழுது, சிறிய தாம்பினைக் காலில் கட்டிய கன்றினுடைய வருத்தத்தைக் கண்ட ஆயமகள் 'வளைந்த கோலை உடைய இடையர் தாய்ப்பசுக்களைஇப்பொழுதேஓட்டிக்கொண்டு வருவர்' என்று கூறினள். இது நன்மை பயக்கின்ற விரிச்சியாகும்,

மார்பில் விழுப்புண் பட்டுக்கிடக்கின்றவீரன் இறந்துபடுவான் என்பதை உணர்த்தும் தீநிமித்தங்கள் பல தோன்றுகின்றன.

6. சு. வித்தியானந்தன், தமிழர் சால்பு,பக். 195-196.
7. முல்லைப்பாட்டு, 7-18.

நெல்லும் நீரும் சொரிந்து விரிச்சி கேட்கும்போது முதிய பெண் சொல்லிய சொற்களும் குறையுடையனவாய்த் தோன்றின. இதனால் அவ்வீரன் இறந்துபடுவது உறுதியாயிற்று.

''நென்னீ ரெறிந்து விரிச்சி யோர்க்கும்
செம்முது பெண்டின் சொல்லு நிரம்பா
துடிய பாண பாடுவல் விறலி
என்னா குவிர்கொ லளியிர் நுமக்கும்
இவணுறை வாழ்க்கையோ வரிதே யானும்
மண்ணுறு மழித்தலைத் தெண்ணீர் வாரத்
தொன்றுதா முடுத்த வம்பகைத் தெரியற்
சிறுவெள் ளாம்ப லல்லி யுண்ணும்
கழிகல மகளிர் போல
வழிநினைந் திருத்த லதனினு மரிதே''[8]

இது தீமை பயக்கின்ற விரிச்சியாகும்.

ஆடவர் பொருள் தேடுவதற்காகவும் போரினை மேற்கொண்ட காலத்தும், மற்றும் தூது, கல்வி போன்ற இன்ன பிற காரணங்களால் தம் இல்லத்தை விட்டுச் செல்வர். போகுமுன் தாங்கள் வரும் பருவத்தினைக் கூறிச் செல்வர். தலைவன் வரும்வரை ஆற்றியிருக்கும் தலைவி, அவன் வருகையை ஆவலுடன் எதிர்நோக்கியிருப்பாள்; தலைவன் நலத்துடன் திரும்பி வரும்வரை அவள் மேற்கொள்ளும் செயல்களுள் விரிச்சி கேட்டலும் ஒன்று.

''விடர்முகை யடுக்கத்து விறல்கெழு சூலிக்குக்
கடனும் பூணாங் கைந்நூல் யாவாம்
புள்ளு மோராம் விரிச்சியு நில்லாம்
உள்ளலு முள்ளா மன்றே தோழி
உயிர்க்குயி ரன்ன ராகவிற் றம்மின்
றிமைப்புவரை யமையா நம்வயின்
மறந்தாண் டமைதல் வல்லியோர் மாட்டே''[9]

என்னும் குறுந்தொகைப்பாட்டில் விரிச்சி கேட்டல் பற்றிய குறிப்பைக் காண்கின்றோம். தலைவன் கூறிச்சென்ற பருவம் வந்துவிட்டதை அறிந்து தலைவி மனம் வருந்தித், தான் மேற்கொள்ளும்

8. புறம்., 280:6-15.
9. குறுந்., 218:1-7.

செயல்களைத் தவிர்க்க விழைகின்றாள். அவன் சென்றவிடத்தில் தன்னை மறந்து தங்கிவிட்டானோ என ஐயப்படுகின்றாள். ஈண்டு, விரிச்சி கேட்கும் சமுதாய வழக்கத்தைக் கொற்றனார் எதிர்மறைப் பொருளில் குறிப்பிடுகின்றார்.

ஆகத், தலைவன் வரவு நோக்கித் தலைவி விரிச்சி கேட்கும் வழக்கம் இருந்தது என்பது இதனால் பெறப்படும்.

'விரிச்சி பெற்றுப் புகன்ற தோழி, தலைமகட்குச் சொல்லிய துறையிலமைந்த நற்றிணைப் பாடல் ஒன்றுண்டு. தான் கவலை யுற்று இருக்கையில், பக்கத்து வீட்டில் ஒரு பெண் வேறொருத்தி யிடம் உரையாடும் பொழுது 'அவன் இப்பொழுதே வருகுவன்' என்று கூறினாள். அவ்வாய்ச் சொல்லை நன்னிமித்தமாகத் தோழி தலைவியிடம் கூறுகின்றாள்.

> ''அமுதம் உண்கநம் அயலில் ஆட்டி
> கிடங்கில் அன்ன விட்டுக்கரைக் கான்யாற்றுக்
> கலங்கும் பாசி நீரலைக் கலாவ
> ஒளிறுவெள் அருவி யொண்டுறை மடுத்துப்
> புலியொடு பொருத புண்கூர் யானை
> நற்கோடு நயந்த அன்பில் கானவர்
> விற்சுழிப் பட்ட நாமப் பூசல்
> உருமிடைக் கடியிடி கரையும்
> பெருமலை நாடனை வருஉம்என் றோளே''[10]

என்பது அப்பாடல்.

**மாந்தர் எதிர்ப்படுதல்**

''சங்க இலக்கியங்களில் மாந்தர் எதிர்ப்படலை அவர் தம் வரவையும் செலவையும் வைத்து நிமித்தம் காணும் மரபு காணப் படவில்லை. மாந்தர் பேசும் இயற்கையான பேச்சினையே நன்னி மித்தமாகக் கொண்டனர்''[11] என்று இ. சுந்தரமூர்த்தி குறிப்பிடு கின்றார்.

---

10. நற்., 65:1-9.
11. இ. சுந்தரமூர்த்தி, இலக்கியச்சுடர், ப.25.

ஆயின், மலைபடுகாடம் (61), புறநானூறு (260)ஆகியவற்றில் மாந்தர் எதிர்ப்படுதலும் நிமித்தமாகக் குறிக்கப்பட்டுள்ளது. நன்னன் சேய் நன்னனிடம் பரிசில் பெற்று வந்த கூத்தன் பரிசில் பெறச் செல்லும் மற்றொரு கூத்தனைப் பார்க்கின்றான். தன்னைச் சந்தித்ததே அவனுக்குக் கிடைத்த நன்னிமித்தம் என்று அவனிடம் கூறுகின்றான். 'என்னை எதிர்ப்படுகையினாலே நீயிர் புறப்படுகின்ற பொழுது நுமக்கு வரும் ஆக்கத்தை எதிர்கொண்டு நின்ற நன் முகூர்த்தத்தோடே நன்னிமித்தத்தையும் உடையிராயிருந்தீர்' எனப் பாராட்டுகின்றான்.

''நன்னன்சேய் நன்னற்படர்ந்த கொள்கையொடு
உள்ளினிர் சேறிர் ஆயின் பொழுது எதிர்ந்த
புள்ளினர் மன்ற வெற்றாக் குறுதலின்......''[12]

இதில், 'பொழுது எதிர்ந்த புள்ளினர் மன்ற' என்றமையால் மாந்தரைக் காண்டலும் நிமித்தமாகக் கொள்ளப்பட்டது என்னும் உண்மை விளங்கும்.

'வழிச்செல்வோர் எதிரே விரித்த தலைமயிருடன் ஒரு மனைவி முற்பட வரின், அதனை தீநிமித்தமாகக் கருதுவது இயல்பு'[13]. இதனை மோதங்கிழார்,

''.................................மனையோள்
உளருங் கூந்த னோக்கி களர''[14]

எனக் குறிப்பிடுகின்றார்.

இவண் எடுத்துக்காட்டிய இரு சான்றுகளிலும் மக்களினத்தில் ஆண், பெண் ஆகியோர் எதிர்ப்படுதலும் அவர் தம் செலவும் நிமித்தமாகக் கருதப்பட்டது என்னும் உண்மை தெளிவாகும்.

மாந்தர் வாய்ச்சொல், எதிர்ப்படுதல், செலவு ஆகியவற்றைப் போலவே கண்துடித்தலும், கனவு காண்டலும், உடம்பில் தோன்றுகின்ற சில வகை மாற்றங்களும் நிமித்தங்களாகக் கருதப் பட்டன.

---

12. மலைபடு., 64-66.
13. ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை (உ.ஆ.), புறநானூறு -இரண்டாம் பகுதி, பக்.125-126.
14. புறம், 260:3-4

**கண் துடித்தல்**

தலைவனைப் பிரிந்து வருந்தும் தலைவியை ஆற்றுவிக்கின்ற தோழி தான் அறிந்த நற்குறிகளைக் கூறுகின்றாள். 'நுண்ணிய அழகுடைய புருவத்தை உடைய என் இடக்கண்ணும் துடிக்கின்றது. மயிர் ஒழுகிய என் முன் கையிடத்து வளையல்கள் தாம் விம்மா நின்றன. ஆகையால் தலைவர் இடையூறுகளைக் கடந்து நம் சுற்றத்தாரையும் உடன்படுத்திக் கொண்டு வந்து விடுவான்' என்கின்றாள்.

> 'நுண்ணேர் புருவத்த கண்ணு மாடும்
> மயிர்வார் முன்கை வளையுஞ் செறூஉம்
> ...........................................
> ...........................................
> பெருங்கன் ஞடன் வருங்கோ லன்ஞய்''[15]

இதனால் பெண்களுக்கு இடக்கண் துடித்தல் நன்னிமித்த மாகக் கருதப்பட்டது என அறியலாம். பாட்டில் 'கண்ணும் ஆடும்' என்று பொதுவாகக் கூறப்பட்டுள்ளதேயன்றி இன்ன கண் துடித்தது என்று கூறப்பெறவில்லை. உரைகாரர்களே இடக்கண் துடித்தது என்று குறிப்பிடுகின்றனர் என்பதும் ஈண்டுக் குறிப் பிடத்தக்கது.

பாலைக்கலியில் பொருள்வயின் பிரிந்து சென்ற தலைவன் வரவைக் கூறுகின்ற தோழி தான் அறிந்த இரண்டு நன்னிமித்தங் களில் ஒன்றாகக் கண்துடித்தலைக் குறிப்பிடுகின்றாள். இதனை,

> 'நல்லெழி லுண்கணு மாடுமா லிடனே'[16]

என்பதால் அறியலாம். ஈண்டு 'நல்ல அழகையுடைய மையுண்ட கண்ணும் இடந்துடியா நிற்கும்' என உரையாசிரியர் பொருளெழுதுகின்றார்.

காளையை அடக்குகின்ற தலைவனைக் கண்டு தலைவியின் கண்கள் துடித்தன. ஆகையால் அவன் அவளுக்குக் கணவனாக வாய்ப்பான் என்று தலைவி நம்புகின்றாள். இதனை நல்லுருத்திரனார் நன்னிமித்த

15. ஐங்குறு., 218:-2,5.
16. கலி., 11;23.

மாகக் காட்டுகின்றார். இச்செய்தியைத் தரும் பாடற்பகுதி வருமாறு:

"கோளாள ரென்னொப்பா ரில்லென நம்மானுள்
தாளாண்மை கூறும் பொதுவன் நமக்கொருநாள்
கேளாள னாகாமை யில்லை அவற்கண்டு
வேளாண்மை செய்தன கண்"[17]

**வளை செறிதல்**

குறுந்தொகையில், சுழித்த சங்காற் செய்த வளையினால் விளங்கிய தோள்களும் நெகிழ்ச்சி நீங்கி வளையொடு செறிந்தமையால் தலைவன் உறுதியாக வந்துவிடுவான் எனத் தோழி கூறுகின்றாள். இதனைச்,

"சுரிவளைப் பொலிந்த தோளுஞ் செற்றும்
வருவர்................................"[18]

என்பதனால் அறியலாம்.

ஆக, பெண்டிர்க்குத் தோள்வளை செறிதல் நன்னிமித்தமாகும் என்பது இதனாற் பெறப்படும்.

**கண் கலங்குதல்**

தலைவனை வழியனுப்பும் காலத்துத் தலைவி கண் கலங்குதல் தீநிமித்தமாகும் என்னும் குறிப்பு நற்றிணையில் காணப்படுகிறது. பொருளார்வத்தின் மிகுதியினால் தலைவியைப் பிரிந்து வேற்று நாட்டினை நோக்கிச் செல்லுகின்ற தலைவனின் உள்ளம் தலைவியை நாடிச் செல்லுகின்றது. அவ்வேளை அவன் தனக்குள் சில செய்திகளைப் பேசிக்கொள்கின்றான்.

'மடந்தையே! செயற்கரிய செயலை என்பாற் செய்கின்ற பொருளார்வமாகிய பணியினை எண்ணினமாய், யாம் அதனை நாடிச் செல்வதற்கும் கருதுகின்றோம்' என்றோம். என்றதும் தன்னுடைய நெய்தல் மலர் மையுண்டாற் போலும் இருட்சி கொண்ட கண்கள் வருத்தத்தை அடைய, பின்னப்பட்டுத் தாழ்ந்திருக்கும் கரிய கூந்தலுக்குள்ளாகத் தன் முகத்தை அவள் மறைத்துக்கொண்

17. கலி., 101:43-46
18. குறுந்., 260:3-4.

டனள். பெரிதும் நெஞ்சழிந்த நிலையினளும் ஆயினள். உதியனுன வன் சினந்து சென்ற அடர்ந்த பேரொலி கொண்டபோர்க்களத்தி னது தலைப் பகுதியிடத்தே, இம்மென்னும் ஒலியோடே பெருங் களத்துக் குழலூதுவோர் ஊதுகின்ற அழகான ஆம்பற்குழலினது இசையினைப் போல ஏங்குவாளும் ஆயினள். கலங்கித் துன்பத்தை அடைவோளாய அவளது தனிமை வருத்தத்தை மேற்கொண்ட் தான பார்வைகள் தாம் மறக்கற்பாலன அன்று.

''உழையணந்து உண்ட இறைவாங்கு உயர்சினைப்
புல்லரை இரத்திப் பொதிப்புறப் பசுங்காய்
கல்சேர் சிறுநெறி மல்கத் தாஅம்
பெருங்காடு இறந்தும் எய்தவந் தனவால்
அருஞ்செயல் பொருட்பிணி முன்னி யாமே
சேறு மடந்தை யென்றலின் தான்தன்
நெய்தல் உண்கண் பைதல் கூரப்
பின்னிருங் கூந்தலின் மறையினள் பெரிதழிந்து
உதியன் மண்டிய ஒலிதலை ஞாட்பின்
இம்மென் பெருங்களத்து இயவர் ஊதும்
ஆம்பலங் குழலின் ஏங்கிக்
கலங்கஞர் உறுவோள் புலம்புகொள் நோக்கே''[19]

இதில், 'பின்னிருங் கூந்தல் மறையினள்' எனவரும் தொடருக்கு 'நன்னிமித்த மின்மையின் அழுகையைப் புலப்படுத்தாது கூந்தலான் முகத்தை மறைத்தனள்'[20] என விளக்கம் கூறப் பட்டுள்ளது.

''மாந்தரின் உடலில் ஏற்படும் குறிகள் கண்டும் பழந்தமிழர் நிமித்தங்களைக் கணித்தனர். தலைவன் தலைவியினைப் பிரிந்தான்; காலமும் நீண்டது. அவன் குறித்த பருவ வரவின் கண்ணும் வராமையினை எண்ணி, அவன் அன்புருவை நினைந்து வருந்து கின்றாள் தலைவி. அவள் மேனியியல்பை அறிந்த தோழி அவளை ஆற்றுவிக்கின்றாள். 'வேந்துவிடு தொழிலின் கண் சென்ற தலைவன் வெற்றியுடன் முடித்துவிரைந்து வருவதை நின் பெண்ணியல்பால் கண்டனன், கவலற்க' என நிமித்தக் குறிகள் கூறி ஆற்றுவிக் கின்றாள். பெண்ணியல், கண்ணிடல், தோள் இடம் துடித்தல், நுதலொளி சிறத்தல் முதலிய பெண்பாற்கு உரிய குறிகள். 'பல்லாருவன' என்பதற்குத் தலைமகளோடு உடன் சென்று

19. நற் , 113:1-12.
20. அ. நாராயணசாது ஐயர்(உ.ஆ),நற்றிணை நானூறு, ப.195.

மீண்டோர் கூறுவனவும், நன்னிமித்தமும், பிறவும் என்பர். 'காதற் கொழுநற்குளவாகும் நன்மை தீமைகள் மகளிர் மேனிக்கண் தோன்றும் சில குறிகளால் உணரப்படும் என்பது பற்றி, பெண்ணியல் 'காமரு சுடர் நுதல் விளங்கும் என்றாள்' என்பர் ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை. இதனை,

"வேந்துவிடு விழுத்தொழி லெய்தி யேந்து கோட்
டண்ணல் யானை யரசுவிடுத் தினியே
எண்ணிய நாளகம் வருதல் பெண்ணியல்
காமரு சுடர் நுதல் விளங்கும்
தேமொழி யரிவை தெளிந்திசின் யானே"[21]

என்னும் ஐங்குறுநூற்றுப் பாடல் அழகுற விளக்கும்.

**கனவு**

பழந்தமிழர் கனவால் எதிர்காலத்தில் விளையும் நன்மை தீமைகளைக் கணித்தறிந்தனர். கனவின் பயனைக் கூறும் கனுநூல் ஒன்று அக்காலத்தே இருந்ததாக அடியார்க்கு நல்லார் குறிப்பிடு கின்றார்.

"வினவுவார்க்கு ஏதில சொல்லிக் கனவுபோல்
தெருளும் மருளும் மயங்கி வருபவள்"[22]

கனவு, பொய்ம்மை அல்லது மருள் என்ற கருத்தைத் தருவதோடு, வாய்மை அல்லது தெளிவும் இடைஇடையே தோன்றவரும் என்பதும் பெறப்படும்.

தொல்காப்பியத்தில் கனவு பற்றிய குறிப்புக்களை ஐந்து இடங்களில் காண்கிறோம். தலைவியின் காதல் காத்தற்கு அரிதாய்க் கனன்று எழுங்கால் கனவு கண்டு அரற்றுவாள். இதனைக்,

"காதல் கைம்மிகக் கனவின் அரற்றலும்"[23]

எனத் தொல்காப்பியர் குறிப்பர். காமம் இடையீடு பட்டுழித் தலைவனுக்கும் தலைவிக்கும் கனவு தோன்றும். இதனைக்,

21. ஐங்குறு., 466 விளக்கவுரை ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை உரை.
22. கலி., 144:6-7.
23. தொல். பொருள். நச்., 115.

'கனவும் உரித்தால் அவ்விடத் தான'[24]

என்பர் தொல்காப்பியர். உடன்போக்கு நிகழ்ந்த வழி நற்றாய்க்கும் உரித்து என்பதைத்,

'தாய்க்கும் உரித்தாற் போக்குளன் கிளப்பின்'[25]

எனவரும் நூற்பாவால் அறியலாம். எண்வகை மெய்ப்பாடுகளில் ஒன்றாகக் கனவு சுட்டப்படுகின்றது.[26] பெருந்திணைக்குரிய மெய்ப்பாடுகளில் ஒன்றாகத் தலைவி 'கனவொடு மயங்க'லையும் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். சுரந்து மிகும் காதலை ஈண்டு கனவின் நிலைக்களனாகக் காட்டப்படுகின்றது.[27]

"சங்க இலக்கியத்தில் ஏறத்தாழ நாற்பத்து நான்கு கனவுக் குறிப்புக்கள் காணப்படுகின்றன. சில தலைவன், தலைவியர் கண்டனவாகவும், சில பறவை, விலங்குகள் கண்டனவாகவும் அமைகின்றன. முன்னர்ச் சுட்டப்பட்ட கனவுக் கொள்கைகளில் சில, இக்குறிப்புகளால் வலியுறுத்தப்படுகின்றன. உவமை, உள்ளுறை நிலையில் உணர்வு வெளியீட்டிற்காக இவை பயன்படுத்தப் படுகின்றன.

சங்கக் கனவுகளைத் திணைவாரியாகப் பிரித்துக் காணுங்கால் பெறும் தெளிவுகள் பல. முல்லைத்திணைத் தலைவி ஆற்றியிருப்பவள்; உளத்திண்மையால் நெஞ்சத்து நினைவலைகளுக்கு எல்லை வகுத்து நிற்பவள். அவள் உணர்ச்சிப் பெருக்கில் சிக்கிக் கனவுச் சூழலில் அமிழ இயலாது எனக் கருதியே சங்கப்புலவர் முல்லைத் தலைவி கனவு காண்பதாகக் காட்டவில்லை"[28] என்பது ச.வே. சுப்பிரமணியனின் முடிவாகும்.

சங்க இலக்கியத்தில் தாய், தலைவி, தலைவன் முதலாயினோர் கனவு கண்டலைப் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. வாவல், யானை, கவரிமான், காக்கை, வண்டு ஆகியனவும் கனவு காணுகின்ற செய்திகள் உள்ளன.

---

24. தொல். பொருள். நச்., 197
25. மேலது., 198,
26. தொல். பொருள். பேரா., 260:5.
27. மேலது., 270:5.
28. ச.வே. சுப்பிரமணியம், இலக்கியக்கனவு, ப.12.

நற்றிணையில், மகளுக்கு உற்ற நோயினை அறியாத தாய் கனவு கண்டது பற்றிய குறிப்பு உள்ளது. அதனைப் பின்வரும் பாடற் பகுதியால் அறியலாம்.

''வெறியென உணர்ந்த அரிய அன்னையைக்
கண்ணினும் கனவினும் காட்டி இந்நோய்
என்னினும் வாராது மணியின் தோன்றும்
அம்மலை கிழவோன் செய்தனன் இது......''[29]

குறுந்தொகை, கலித்தொகை ஆகியவற்றில் தலைவி கனவு காண்பது பற்றிய செய்திகள் வருகின்றன.

தான் ஆற்றியிருக்கின்ற காலத்தில் கனவு வந்து தன்னை எவ்வாறு துன்புறுத்தியது என்பதைத் தலைவி தோழியிடம் கூறுகின்றாள். இராக் காலத்தில் பொய்கூறுவதில் வன்மையுடைய தலைவன் என் உடம்புடன் அணைதலைப் பொய்யாகிய கனவில் கண்டதாயும், துயில் கலைந்து எழுந்து அவன் அங்கு இல்லாமையால் மேலும் அவள் நலிந்ததாயும் ஒரு செய்தியைக் குறுந்தொகையில் காண்கிறோம்.

''கேட்டிசின் வாழி தோழி அல்கல்
பொய்வ லாளன் மெய்யுற மரீஇய
வாய்த்தகைப் பொய்க்கனா மருட்ட வேற்றெழுந்
தமளி தைவந் தனனே குவளை
வண்டுபடு மலரிற் சாஅய்த்
தமியேன் மன்ற வளியேன் யானே''[30]

என்பது அக்கருத்தமைந்த பாடல்.

கலித்தொகையில் தலைமகள் கனவு காண்பது பற்றிய செய்திகள் ஆறுபாடங்களில் (கலித். 126, 128, 142, 144, 145, 147) உள்ளன. சான்றாக, வரைவிடை ஆற்றாளாய் இருக்கின்ற ஒரு தலைவியினுடைய மாறுபட்ட தோற்றத்தைக் கண்டு வினவிய தோழிக்கு அவள் தான் கண்ட கனவு நிலையினைக் கூறுகின்றாள். தலைவனைக் கனவில் கண்டுதான் செய்த காரியங்களை ஒவ்வொன்

29. நற்., 173:4-7.
30. குறுந்., 30:1-6.

றாகக் கூறுகின்றாள். கனவில் வந்த தலைவன் நனவில் வந்து தன்னோடு கூடுதலும் உண்டென்று கூறுகின்றாள். இப்பொருளின் அமைந்த பாடற்பகுதி வருமாறு:

''நனவின் வாரா நயனி லாளனைக்
கனவிற் கண்டியான் செய்தது கேளினி;
அலந்தாங் கமையலென் என்றானைப் பற்றியென்
நலந்தாரா யோவெனத் தொடுப்பேன் போலவுங்
கலந்தாங் கேயென் கவின்பெற முயங்கிப்
புலம்ப லோம்பென அளிப்பான் போலவும்;
முலையிடைத் துயிலும் மறந்தீத் தோயென
நிலையழி நெஞ்சத்தேன் அழிவேன் போலவும்
வலையுறு மயிலின் வருந்தினை பெரிதெனத்
தலையுற முன்னடிப் பணிவான் போலவும்;
கோதை கோலா இறைஞ்சி நின்ற
ஊதையஞ் சேர்ப்பனை அலைப்பேன் போலவும்
யாதென் பிழைப்பென நடுங்கி யாங்கே
பேதையை பெரிதெனத் தெளிப்பான் போலவும்:
ஆங்கு,
கனவினாற் கண்டேன் தோழி காண்தகக்
கனவின் வந்த கானலஞ் சேர்ப்பன்
நனவின் வருதலு முண்டெனா
அனைவரை நின்றதென் அரும்பெற லுயிரே''[31]

தலைவன் கனவு கண்ட செய்திகளைக் குறுந்தொகை (147), அகநானூறு (39) ஆகியவற்றில் காண்கிறோம். தலைவியைப்பிரிந்து சென்ற தலைவன் தான் சென்றவிடத்தில் துயிலுங்கால் தலைவியைக் கனவில் கண்டு விழித்து ஆற்றாமையாலே பேசுகின்றான். 'கனவே! உன்னை உலகத்துக் காதலர் இகழமாட்டாரோ? நீ மடந்தையைத் தந்தாய் போல இனிய தூக்கத்திலிருந்தும் எழுப்பி ஏமாற்றுகின்றாயே' என்பது அவன் கூற்று. இதனை,

''வேனிற் பாதிரிக் கூன்மல ரன்ன
மயிரேர் பொழுகிய வங்கலுழ் மாமை
நுண்பூண் மடந்தையைத் தந்தோய் போல

31. கலித்., 128:8-26.

இன்றுயி ரெடுப்புதி கனவே
எள்ளா ரம்ம துணைப்பிரிந் தோரே''[32]

என்னும் குறுந்தொகைப் பாடலால் அறியலாம்.

பொருள் வயின் பிரிந்துசென்ற தன்வன் ஆவன் செல்லுகின்ற வழியில் கண்ட பாயற் கண்ணே உறங்குகின்றான். அவன் தலைவியை எந்நேரமும் நினைத்துக் கொண்டிருப்பவன். ஆதலால் தலைவி அவனுடைய கனவில் தோன்றினாள். அவள் கழன்று விழுகின்ற வளைகளை மேலே ஏற்றிவிட்டுக் கொண்டு நிலத்தைக் கால்லால் கீறிக் கொண்டு வருத்தமுடன் நிற்கிறாள். தலைவன் அவளுடைய மணம் பொருந்திய கூந்தலைக் கோதிவிட்டுத் தன்னுடன் ஊடல்கொண்ட காரணம் யாது என வினவுகிறான். இப்பொய்க்கனவைக் காணும் சமயத்தில் திடீரென்று விழித்துக் கொள்ளுகின்றான். பின்னர் வருந்துகிறான். இக்கருத்தமைந்த அகநானூற்றுப் பாடற்பகுதி வருமாறு:

''............................நிற்படர்ந் துள்ளி
அருஞ்செல வாற்றா ஆரிடை ஞெரேரெனப்
பரந்துபடு பாயல் நவ்வி பட்டென
இலங்குவளை செறியா இகுத்த நோக்கமொடு
நிலங்கிளை நினைவினை நின்ற நிற்கண்
டின்னகை யினைய மாகவும் எம்வயின்
ஊடல் யாங்குவந் தன்றென யாழநின்
கோடேந்து புருவமொடு குவவுநுதல் நீவி
நறுங்கதுப் புளரிய நன்ன ரமையத்து
வறுங்கை காட்டிய வாயல் கனவின்
ஏற்றேக் கற்ற உலமரல்
போற்றா யாகலின் புலத்தியால் எம்மே''[33]

தலைவனொருவனுக்குப் பொருள் ஈட்ட வேண்டும் என்னும் எண்ணம் வளர்ந்து வலுப்பெறுகிறது; பொருள் வயின் பிரிந்து செல்ல முடிவு செய்கிறான். அவனுடைய முயற்சியைத் தலைவியினுடைய மெல்லியல்புதடைப்படுத்துகிறது. அறிவு ஒரு புறமும், உணர்வு ஒரு புறமும் அவனை அலைக்கழிக்கின்றன. அமைதியின்றி

32. குறுந்., 147:1-5.,
33 அகம் 39:14-25.

உறங்குகின்ற அவனுக்குக் கனவு தோன்றுகிறது. கனவிலே அவன் அரற்றுகின்றான்.

'குத்தும் கொம்புகளை உடைய யானை, தண்ணீர் வேட்கையைத் தணித்துக் கொள்ள முடியாமல் வருந்தி, கடைசியில் கானல்நீரை நீர் என்று கருதி அதன்பின் ஓடி ஏமாறும் கொடுமைமிக்க, காட்டு வழியைக் கடந்து போய், வேற்றுநாட்டில் தங்கிப் பொருள் சேர்த்து வரும்வரை, அழகிய தொடிகள் நிறைந்த முன் கையை உடைய இவள் கவலை கொண்டுகலங்காமல் இல்லறக்கடமைகளைக் கருத்தாய்ச் செய்வாளோ?' என்று வாய் பிதற்றினான். இச் செய்தியைப்,

> ''பாயல் கொண்டு என்தோள் கனவுவார்; ஆய்கோல்,
> தொடிநிரை முன்கையாள் கையாறு கொள்ளாள்
> கடிமனை காத்தோம்ப வல்லுவள் கொல்லோ?
> இடுமருப்பு யானை, இலங்குதேர்க்கு ஓடும்
> நெடுமலை வெஞ்சுரம் போகி, நடுநின்று
> செய்பொருள் முற்றும் அளவு என்றார்''[34]

எனவரும் பாடற் பகுதியால் அறியலாம்.

இதுகாறும் ஈண்டு அகப்பாடல்களில் எடுத்துக் காட்டிய கனவுக் குறிப்புக்கள் பொதுவாக நற்கனவுகளாயும் அதனைக் காண்போருக்கு இன்பம் தருவனவாயும் அமைந்துள்ளன. அவற்றை வருவதை உணர்த்தும் நிமித்தம் என்று முற்றுமாகக் கூறமுடியாதுதான். எனினும் கனவுகளையும், நிமித்தங்களைப் போலவே மக்கள் நம்பினர் என்பதையும் அவை நிமித்தங்களோடு தொடர்புடையன என்பதையும் மறுத்தற்கில்லை.

சோழன் குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவனைப் புகழ்ந்து பாடும் கோவூர்கிழார், வளவனுடைய பகைவர்கள் தீக்கனவைக் கண்டு அவனால் தமக்கு வரும் தீமை நோக்கிக் கலங்கியிருந்த செய்தியைப் புறநானூற்றுப்பாடல் ஒன்றில் கூறுவர்.

> ''எயிறுநிலத்து வீழவு மெண்ணெ யாடவும்
> களிறுமேல் கொள்ளவுங் காழகநீப்பவும்

34. கலித்., 24:7-12.

வெள்ளி நோன்படை கட்டிலொடு கவிழவும்
கனவி னரியன காணு நனவிற்
செருச்செய் முன்பநின் வருதிற னோக்கி
மைபல் கொண்ட வேமமி லிருக்கையர்
புதல்வர் பூங்கண் முத்தி மனையோட்
கெவ்வங் கரக்கும் பைதன் மாக்களொடு
பெயங்கலக் குற்றன்று தோனே காற்றோ
டெரிநிகழ்ந் தன்ன செலவிற்
செருமிகு வளவநிற் சினைஇயோர் நாடே''[35]

இதில், பல் நிலத்தின் கண்ணே வீழ்தலும், மயிரில் எண்ணெய் வார்த்தலும், பன்றி ஏற்றின் மீது ஏறலும், ஆடைநீங்குதலும் கனவின்கண் தோன்றிய தீநிமித்தங்களாகச் சுட்டப்படுகின்றன. இக்கனவுகளைக் கிள்ளிவளவனுடைய பகைவேந்தருடைய நாட்டு மக்கள் காண்பர் என்று கோவூர்கிழார் பாடியுள்ளார். கனவுகள் வரவிருக்கின்ற நன்மை தீமைகளை உணர்த்தும் நிமித்தங்கள் என்பது இதனால் பெறப்படும்.

பல புறப்பாடல்களில் கனவு பற்றிய குறிப்புக்கள் இடம் பெறுதலுக்குப் பின்வரும் பாடற் பகுதிகள் சான்றுகளாகும்.

''தண்புனற் பூச லல்லது நொந்து
களைக வாழி வளவ என்றுநின்
முனைதரு பூசல் கனவினும் அறியாது''[36]

''திண்டே ரண்ணல் நிற்பா ராட்டிக்
காதல் பெருமையிற் கனவிலும் அரற்றுமென்
காமர் நெஞ்சம் ஏமாந் துவப்ப
ஆலமர் கடவு ளன்னநின் செல்வம்
வேல்கெழு குரிசில் கண்டேன்''[37]

''கனவிற் கண்டாங்கு வருந்தாது நிற்ப
நனவின் நல்கியோன் நசைசால் தோன்றல்''[38]

35. புறம்., 41:8-18.
36. புறம்., 42:7-9.
37. புறம்., 198:6-10.
38. புறம்., 377:19-20.

''ஆங்கவை, கனவென மருள வல்லே நனவின்
நல்கி யோனே நசைகால் தோன்றல்''[39]

''ஆர்வலர் குறுகி னல்லது காவலர்
கனவினுங் குறுகாக் கடியுடை வியனகர்''[40]

''கண்டோர் மருளும் வண்டுசூழ் நிலையும்
கனவென மருண்டவென் நெஞ்சு ஏமாப்ப''[41]

கனவுகள் வியப்பிற்குரியனவாக அமைகின்றன. நனவில் நிகழாதவையும் கனவில் நிகழலாம். இக்காரணம் பற்றியே மன்னரின் வாய்மையையும், தூய்மையையும், வீரச்செறிவையும், சுட்டும் இடங்களில்—'பொய்ப்ப யறியலனே, கனவினும்,'[42] என்றும் 'கனவினும் களைகென அறியாக் கசடில் நெஞ்சம்'[43] என்றும் பதிற்றுப் பத்துக் கூறுகின்றது. அகத்தலைவனின் பிரியாச் சிறப்பினை வலியுறுத்த 'கனவினும் பிரிவு அறியலனே'[44] என அகநானூறு கூறுகின்றது.

நனவில் வாய்மையுடையோனும் பொய்யுரைப்பதாகக் கனவு காணலாம். ஆயின் 'கனவினும் பொய்மை அறியா'என உரைக்குங்கால் சிந்தையினும் பொய்மையைத் தீண்டாத் தூய்மைச்சிறப்புச் சுட்டப்படுகின்றது. நனவின் வாய்மைக்கும் தெளிவுக்கும் எதிராகக் கனவின் பொய்ம்மையும் மருட்சியும் கூறப்படுகின்றன.

காப்பியக் கனவுகளை எடுத்து ஆய்ந்து, ''நிமித்தங்களும், நிகழ்வுகளும், உரைகளும், குறியீடுகளும் கனவின் ஆக்கக்கூறுகளாக அமைகின்றன. காப்பியத்தில் இந்நால்வகைக் கனவுகளும் பல நிலைகளில் ஆளப்படுகின்றன.

1. பெரும்பாலான பின் வரக்கூடிய நிகழ்வுகளை முன் கூட்டியே உணர்த்தப் பயன்படுகின்றன.

2. சில கதைத்தொடக்கத்திற்கே காரணமாக அமைந்து காப்பியச் செய்தியைத் தருகின்றன.

39. புறம்., 387:26-27.
40. புறம்.,390:5-6
41. பொருந., 97-98.
42. பதிற்., 20:9-10
43. பதிற்., 44:6-7.
44. அகம், 178:20.

3. வேறு சில ஊழை வலியுறுத்த வருகின்றன.

4. இன்னும் சில பாத்திரங்களைத் தூண்டிச் செயற்படுத்துகின்றன.

5. சில பாத்திரப்பண்பை உணர்த்தத்துணைபுரிகின்றன. காப்பியத்தின் ஓட்டத்திற்கு வாய்ப்பாக, தேவையான இடங்களில் கனவு பொருந்துகின்றன''[45] என்பர் ச.வே.சுப்பிரமணியன்.

''கனு உடல், உள்ளத்தைச் சார்ந்து எழவல்லது என்னும் கருத்தும், காமவேட்கை வழியிலும் வேறுவகை விருப்பத்து அடிப்படையிலும் கனு முளைக்கும் என்னும் கருத்தும் இங்கு நோக்கத் தக்கவை. அக்கொள்கைகள், பழந்தமிழ் நூல்களில் உளவியல் கருத்தைச் சேர்ந்த உயர்வில் மதிக்கப்பெற்றிருத்தலை அறிந்து மகிழ்தலும் இயலும். அடுத்து. இருபிரிவுகளாக உள்ளமும் உடலும் விளங்குதலால், ஒரு பிரிவின் தூண்டுதல் மற்றொரு பிரிவில் மாறுதலைத் தோன்றச்செய்தல் இயல்வதே என்று தெளியச் செய்வர் உளவியலறிஞர்''[46]

பேய் பிசாசும் கனவினை உண்டாக்கும் என்னும் கருத்தினர் பண்டைய பாபிலோனியர். இக்கருத்தினைச் சிறிது மாற்றிக் கடவுளாலும், கடவுள் வல்லமை வாய்ந்தோராலும் படைக்கப் பெறுவது கனவு என்னும் கருத்தினர் பண்டைய எகிப்தியர்.[47] ஆனால் பண்டைத் தமிழ் நூல்கள் பேயும், பிசாசும், கடவுளும், கடவுள் வல்லமையுடையோரும் கனவுக்குக் காரணமாக யாண்டும் காட்டப்பெறவில்லை.

அகம் *(132:12-13; 170:9-12)*, நற்றிணை *(37:1-4)*, குறுந்தொகை *(30:2)*, ஐங்குறுநூறு *(234:3-4)*, கலித்தொகை *(128:9,12)* நூற்களில் காணப்படும் கனுப்பாடல்கள் தரும் செய்திகள்,

அ. உடல் உள்ளத்தைக் கூடிக்கனுக்காட்சி உண்டாகும்.

---

45. ச.வே. சுப்பிரமணியன், காப்பியப்புனைதிறன், பக். 125-126.
46. இரா. குழந்தைவேலு, பழந்தமிழ் காட்டும் கனுத்திறன், நான்காவது கருத்தரங்கு மலர், இ.ப.த.ம்., ப.35.
47. மேலது., ப.34.

ஆ. காமவேட்கையும் முன்னைய விருப்பமும் கனவில் பொங்கி வழிதல் உண்டு.

இ. கனவில் சுவை உணரப்பெறுதலும், திறம் விளங்கப் பெறுதலும் உண்டு[48]

என இரா. குழந்தைவேல் வகைப்படுத்திக் காண்பர்.

இவ்வாறு சங்க இலக்கியப் பரப்பில் காணப்படும் கனவுகளைப் பகுத்தறிந்து காட்டும் அவர் கனவுகளைக் கடவுளோடும் நிமித்தங்களோடும் தொடர்புபடுத்திக் காட்டவில்லை. 'பழந்தமிழ் நூல்கள் எடுத்துக்காட்டிச் செல்லும் கனுத்திறக் குறிப்புக்கள், உளவியல் கூறுகள் பொதிந்த நுட்பம் வாய்ந்தவை' என்றே நிறுவுகின்றார்.

48. மேலது., ப.36.

# 6

# தெய்வம் தொடர்பான நிமித்தங்கள்

தலைவியுந் தலைவனும் உடன்போய காலத்துஅம்மகட் பயந்த நற்றாய் 'தன்னையுந் தலைவனையுந் தன் மகளையுங் குறித்துக்காலம் மூன்றுடன் நிலைபெற்று வரும் நல்வினை தீவினைக்குரிய காரியங்களைத் தன் நெஞ்சிற்கு விளக்கி வருந்திக் கூறுதலும்; அச்சஞ்சார்தல் என்று கூறப்பட்டவற்றையும் அவை போல்வன பிறவற்றையும் பல்லி முதலிய சொல் நற்சொல் தெய்வங்கட்டினுங் கழங்கினும் இட்டு உரைக்கும் அத்தெய்வப் பகுதி யென்றவற்றோடு கூட்டி வருந்திக் கூறுதலும்' உண்டு. இதனைத்,

"தன்னும் அவனும் அவளுஞ் சுட்டி
மன்னு நிமித்தம் மொழிப்பொருள் தெய்வம்
நன்மை தீமை யச்சஞ் சார்தல்என்று
அன்ன பிறவும் அவற்றொடு தொகைஇ
முன்னிய காலம் மூன்றுடன் விளக்கி"[1]

என்பர் தொல்காப்பியர். இதனால் கட்டுப்பார்த்தலும் கழங்கு பார்த்தலும் தெய்வம் பற்றிய நிமித்த வகைகளாகும் என்பது போதரும். இதற்கு அரணாக,

"அஞ்சுரம் இறந்தவென் பெருந்தோட் குறுமகள்
திருந்துவேல் விடலையொடு வருமெனத் தாயே
புனைமாண் இஞ்சி பூவல் ஊட்டி
மனைமணல் அடுத்து மாலை நாற்றி
உவந்தினி தயரு மென்ப யானு
மான்பிணை நோக்கின் மடநல் லாளை
யீன்ற நட்பிற் கருளான் ஆயினும்
இன்னகை முறுவல் ஏழையைப் பன்னாட்
கூந்தல் வாரி நுசுப்பிவர்ந் தோம்பிய
நலம்புனை யுதவியும் உடையன் மன்னே
அஃதறி கிற்பினோ நன்றுமற் றில்ல
அறுவை தோயும் ஒருபெருங் குடுமிச்
சிறுபை நாற்றிய பஃறலைக் கொடுங்கோல்
ஆகுவ தறியும் முதுவாய் வேல
கூறுக மாதோநின் கழங்கின் றிட்பம்
மாறுது வருபனி கலுழுங் கங்குலின்
ஆனாது துயருமென் கண்ணினது படீஇயர்
எம்மனை முந்துறத் தருமோ
தன்மனை உய்க்குமோ யாதவன் குறிப்பே"[2]

என்னும் அப்பாட்டினை நச்சினார்க்கினியரும் எடுத்துக் காட்டு கின்றார். எனவே, தெய்வம் பற்றிய நிமித்தங்கள் எனும் தலைப் பில் கட்டுப்பார்த்தல், கழங்குபார்த்தல் ஆகிய செய்திகள் பேசப் படுகின்றன.

அறத்தொடு நிற்கும் முறையில் தோழி கூற்றாகவும், செவிலி கூற்றாகவும் வரும் கிளவிகள் பலவாகும். அவற்றுள் தலைவியின்

1. தொல்.பொருள். நச்., 36: 1-5
2. அகம்., 195.

வேறுபாடு நோக்கி, இஃது எதனால் ஆயிற்று என்று தெரிதற்குச் செவிலி கட்டுவிச்சியை அழைத்துக் குறி கேட்டலும், வேலனை அழைத்து வெறியாடச் செய்து கழங்கு பார்த்தலும் உண்டு. இதனைத் தொல்காப்பியர்,

> ''கட்டினும் கழங்கினும் வெறியென இருவரும்
> ஒட்டிய திறத்தாற் செய்திக் கண்ணும்''[3]

என்பர். 'கட்டினும் கழங்கினும்' என்பதற்குக் 'கட்டுவிச்சியும் வேலனுந் தாம் பார்த்த கட்டினாலும் கழங்கினாலும்'[4] என்று பொருள் கூறப்படுதலால் கட்டுவிச்சிக்குக் கட்டு எடுத்தலும், வேலற்குக் கழங்கு பார்த்தலும் உரியவாதல் விளங்கும்.

**கட்டுப்பார்த்தல்**

கட்டெடுத்தலாவது, கட்டுவித்தியால் நெற்குறியறிந்து சொல்லப்படுவதென்பதும், அந்நெல்லாற் பிறரெண்ணிய எண்ணம் ஒரு வடிவு கொண்டு தோன்றி, அவட்குரைப்ப அவள் அதனை வெளியிடுவாள் என்பதும்,

> ''............................ விறற்சேய்கடவும்
> மயிலிதன் றேகொடி வாரணங் காண்கவற் சூர்தடிந்த
> ஆயிலிதன்றேயிதன் றேநெல்லிற் றோன்றுமவன்வடிவே''[5]

எனத் திருக்கோவையாருள் வரும் அடிகளாற் புலனாகின்றது. திருமால்பாற் காதல் கொண்டு மயங்கிய பெண்ணொருத்தியின் பொருட்டு அவள் சுற்றத்தார் கட்டுவித்தியிடங் குறிகேட்டதாகத் திருமங்கை மன்னன் அருளிச் செய்யுமிடத்தில்,

> ''..............அது கண்டு மற்றுங்கே
> ஆரானு மூதறியும் அம்மனைமார் சொல்லுவார்
> பாரோர் சொலப்படும் கட்டுப் படுத்திரேல

3. தொல். பொருள். நச்., 115:34
4. மேலது., ப. 139
5. திருக்கோவையார், 285: 2-4

ஆரானும் மொய்ப்படுவ னென்றுரது கேட்டுக்
காரார் குழற்கொண்டைக் கட்டுவிச்சி கட்டேறிச்
சீரார் சுளகிற் சிலநெல் பிடித்தெறியா
வேரா வி திர்விதிரா மெய்சிலிராக் கைம்மோவாப்
பேரா யிரமுடையா னென்றுள் பெயர்த்தேயுங்
காரார் திருமேனி காட்டினுள்''[6]

எனக் கட்டுவித்தி கூறும் முறையைச் சிறிய திருமடலில் அழகு படப் பாடுதல் அறியத்தக்கது.

மலைநாட்டாராகிய குறக்குடி மகளிரே கட்டுவித்தியாய்த் தோன்றிக் குறிசொல்லுதல் பண்டை வழக்காம். குறிகூறுவதால் குறமகள் குறிஎயினி என்ற ஒரு பெண்பாற் புலவர் அழைக்கப்படு கின்றுர். அவர் பாடிய இருபாடல்களில் ஒன்று நற்றிணையிலும் ஒன்று புறநானூற்றிலும் உள்ளன.[7] குறிகூறும் பெண்டிர் பெரும் பான்மை குறத்தியாவர் என்பதைக் குறம் என்ற பிரபந்தத் தாலும் இன்றுமுள்ள வழக்காலும் பலரும் அறிந்ததாகும். முற் காலத்துக் குறக்குடிச் சிறுவர்களும் குறியிறுக்க வல்லராயிருந்த ரென்பது- ''குறமகளீன்ற குறியின்றப் புதல்வரொடு''[8] என்னும் குறுந்தொகைப் பாடற்பகுதியால் விளங்கும்.

'சேரியின் முதுபெண்டிரான குறிசொல்லு மாதரை மனையகத்துக் கொணர்ந்துவைத்து முறத்திலே பிடி நெல்லையிட்டு எதிரே தலைமகளை நிறுத்தித் தெய்வத்துக்குப் பிரப்பிட்டு வழிபாடு செய்துஅந்நெல்லை நந்நான்காக எண்ணி எஞ்சியவை ஒன்றிரண்டு மூன்றளவும், முருகணங்கெனவும், நான்காயின் பிறிதொரு நோயெனவுங் கூறப்படுவது. முருகணங்கென்று கூறின் உடனே வேலனை (முருகனுக்குப் பூசை நடத்தும் பூசாரியை) அழைத்து வெறிக்களத்திருத்தி முருகவேளுக்குச் சிறப்பெடுத்து ஆண்டுக் கழங்குக் குறி பார்ப்பது.[9]

தலைவியின் உடலில் பரந்துபட்டிருக்கின்ற பசலையைக் கண்டு தாய், சேரியில்உள்ள செம்மையாகிய முதுமை உடைய கட்டுவிச்சி

6. நாலாயிர திவ்விய பிரபந்தம், சிறியதிருமடல் ; 36—44
7. நற்., 357, புறம், 157.
8. குறுந்., 394; 2—3.
9, அ. நாராயணசாமி ஐயர் (உ.ஆ), நற்றிணை நனூறு, ப.492.

முதலாயினோருடனே இல்லகம் புகுந்து முறத்தில் நெல்லைப் பரப்பிக் கட்டுவைத்துக் கேட்பள் என்பதைச்

'செம்முது பெண்டிரொடு நெல்முன் நிறீஇக்
கட்டிற்கேட்கும்................''[10]

எனவரும் நற்றிணைப் பாட்டால் உணரலாம்.

**வெறியும் குறியும்**

வெறியாடலைப் பொருளாகக் கொண்டு சிறப்பாகப் பாடிய புலவர் வெறிபாடியகாமக் கண்ணியார் என்று பாராட்டப்படுகின்றார். அவர் பாடிய ஐந்து பாடல்களுள் மூன்று குறிஞ்சித்திணை பற்றியன. அம்மூன்றிலும் வெறியாடல் பற்றிய குறிப்புக்கள் மட்டுமன்றிக் குறி பார்த்தல் பற்றிய குறிப்புக்களும் காணப்படுகின்றன.

''ஏதில் வேலற்கு உலந்தமை கண்டே''[11]

''முதுவாய்ப் பெண்டிர் அதுவாய் கூற''[12]

என்றும்,

''வெறியயர் வியன்களன் பொற்ப வல்லோன்''[13]

''பொய்வல் பெண்டிர் பிரப்புளர்பு இரீஇ''[14]

என்றும்,

''மெய்ம்மலி கழங்கின் வேலற் றந்தே''[15]

என்றும் வருகின்ற அவருடைய பாடல்களில் வெறியாடல் பற்றிய குறிப்பும், குறிபார்த்தல் பற்றிய குறிப்பும் உள்ளன.

---

10. நற்., 288: 6—7.
11. அகம்., 22:21.
12. அகம்., 22: 7.
13. அகம்., 98:19
14. அகம்., 98:9.
15. நற்.,268:9.

வெறிபாடிச் சிறந்த புலவரைப் போலவே குறிபாடிச் சிறந்த புலவர்களும் உண்டு. குறிபாடிச் சிறந்த ஒரு புலவர் பெயர் குறியிறையார். அவர் பாடிய குறுந்தொகைப் பாடல் வருமாறு:

''முழந்தா ளிரும்பிடிக் கயந்தலைக் குழவி
நறவுமலி பாக்கத்துக் குறமக ளீன்ற
குறியிறைப் புதல்வரொடு மறுவந் தோடி
முன்று ளினிய தாகிப் பின்றுள்
அவர் திணை மேய்தந் தாங்குப்
பகையா கின்றவர் நகைவிளை யாட்டே''[16]

குறிபாடிச் சிறந்த மற்றொரு புலவரும் இருந்தார். பெண் பாற்புலவரான அவருடைய பெயர் குறியெயினி. அவர்பாடிய பாடல் வருமாறு:

''நிற்குறிப்பு எவனே தோழி என் குறிப்பு
என்னொடு நிலையா தாயினும் என்றும்
நெஞ்சுவடுப் படுத்துக் கெடஅறி யாதே
சேணுறத் தோன்றுங் குன்றத்துக் கவாஅன்
பெயலுழந்து உலறிய மணிப்பொறிக் குடுமிப்
பீலி மஞ்ஞை ஆலுஞ் சோலை
அங்கண் அறைய அகல்வாய்ப் பைஞ்சுனை
உண் கண் ஒப்பின் நீலம் அடைச்சி
நீரலைக் கலைஇய கண்ணிச்
சாரல் நாடனொடு ஆடிய நாளே''[17]

குறி கூறும் துறையில் குறுந்தொகையில் சில பாடல்கள் அமைந்துள்ளன. கொல்லன் அழிசி பாடிய 26-ஆம் பாடலுக்குப் பின்வருமாறு துறை வகுக்கப்பட்டிருக்கின்றது. 'நற்றாயுஞ் செவி லித்தாயும் தலைமகளது வேறுபாடு கண்டு இஃது எற்றினானாயிற் றென்று கட்டுவிச்சியை வினவிக் கட்டுக்காண்கின்ற காலத்துத் தலைமகளது வேறுபாட்டிற்குக்காரணம் பிறிதோர் தெய்வமென்று கூறக்கேட்டுத் தோழி அறத்தோடு நின்றது.'

இதனால் கட்டுவிச்சி என்னும் பெண்ணிடம் குறி கேட்கின்றதும் ஒரு துறையாகும் என்பது பெறப்படும். குறுந்தொகையில் ஔவையார் பாடிய பாட்டொன்றும், 'கட்டுக் காணிய நின்ற

16. குறுந்., 394: 1—6.
17. நற், 357: 1—6.

விடத்துத் தோழி அறந்தொடு நின்றது' எனக் குறிகூறும் துறையில் அமைந்துள்ளது. அவ்விரு பாடல்களும் வருமாறு :

"அரும்பற மலர்ந்த கருங்கால் வேங்கை
மேக்கெழு பெருஞ்சினை யிருந்த தோகை
பூக்கொய் மகளிரிற் றோன்று நாடன்
தகாஅன் போலத் தான்தீது மொழியினும்
தன்கண் கண்டது பொய்க்குவ தன்றே
தேக்கொக் கருந்து முள்ளெயிற்றுத் துவர்வாய்
வரையாடு வன்பறழ்த் தந்தைக்
கடுவனு மறியுமக் கொடியோ னையே"[18]

"அகவன் மகளே யகவன் மகளே
மனவுக்கோப் பன்ன நன்னெடுங் கூந்தல்
அகவன் மகளே பாடுக பாட்டே
இன்னும் பாடுக பாட்டே, அவர்
நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டே"[19]

**வெறியாடல்**

ஐங்குறுநூற்றில் குறிஞ்சித் திணையில் கபிலர் பாடிய வெறிப் பத்து எனும் உட்பிரிவு வெறியாடலின் வளர்ச்சியைக் காட்டுகின்றது. வெறிப்பொருளாக வருகின்ற பத்துப்பாடல்களைக் கொண்ட பகுதி வெறிப்பத்து என்று சுட்டப்பட்டுள்ளது. வெறி என்பது மணம் என்ற பொருளுடைய தமிழ்ச்சொல் என்பர்.

முருகனை வழிபடும் இடத்தில் நறுமணம் மிக்க பூவும், தளிரும் புகையும் மிக்கு எங்கும் இனிய மணம் வீசும். அவ்விடத்தைவெறிக் களம் என்று முன்னோர் வழங்கினர். அவ்விடத்தில் நிகழும் விழா வெறியயர்தல் எனும் பெயர் பெறுவதாயிற்று. வெறிக்களத்தை வெறிமனை என்றும் கூறுவர் என்பதை 'வேலன்வேண்ட வெறிமனை வந்தோய'[20] என்பதால் அறியலாம். 'வேலன் ஏத்தும் வெறியும் உளவே'[21] என்று கூறுவதனால், வெறி முருகவேள்வழிபாட்டுக்குப் பெயராகும் என்பது விளங்கும்.

18. குறுந்.,26: 1—8.
19. மேலது., 23: 1—5
20. நற் , 34:9.
21. பரி., 5: 14—15

முருகனை எண்ணி வெறியயர்கின்ற இடத்தில் மக்கள் யாவரும் ஒன்று சேர்ந்து வழிபாடு நடத்துவர். அவ்வழிபாடு ஒழுங்காக நிகழ்வதற்கு ஒருவன் முன்னணியில் நிற்பான். அவன் முருகப் பெருமானுக்குரிய வேற்படையைக் கையிலேந்தி இருப்பான். அதனால் அவனுக்கு வேலன் என்று பெயர் வந்தது என்பதை 'வெறியறி சிறப்பின் செவ்வாய் வேலன்'[22] எனத்தொல்காப்பியர் கூறுவதனால் அறியலாம்.

இவ்விழாவினை எடுக்க நினைப்போர் முதற்கண்டவேலனுக்குத் தம் கருத்தைத் தெரிவிப்பர். அவன் தக்க இடத்தைத் தேர்ந் தெடுத்து அதனை வெறிக்களமாக அமைப்பான். அக்களத்தின் கண் 'வேலை நடுவில் கொண்ட வெறிமனையில் புதுமணல் பரப்பி செந் நெல்லின் வெண்பொரியும்''[23] பல வகையான பூக்களையும் பரப்பி அழகுபடுத்துவான். பசுந்தழையும் கடம்பின் மலரும் கொண்டு பந்தல்அமைப்பான்.[24]

வேறு பல நறுமணம் கமழும் பூக்களையும் தூவுவான். பின்னர் மறியை அறுத்து அதன் குருதி கலந்த செந்தினையை அவ்விடத்தில் தூவிப் பலவகையான வாத்தியங்கள் முழங்க மணியொலி எழுப்பி நறும்புகை ஏற்றிப் பூப்பலி இடுவான். பெண்களும் அவ்விடத்துச் கூடி நின்று குறிஞ்சிப் பண்ணில் பாடல்கள் பாடுவர்.

வெறியயர்வது பெரும்பாலும் வேலனாலேயே நிகழ்வதாகும். இளமையும் வனப்புமுடைய மகளிர் உடல் நலம் கெடுவராயின் அது நீங்குதல் பொருட்டு அவர்களுடைய செவிலித் தாயும் நற்று யும் வேலனைக் கொண்டு வெறியயர்வது வழக்கம். மருந்தினால் நீங்காத நோய் இவ்வெறியயர்தல் மூலம் நீங்கும் என்பது அவர் களுடைய நம்பிக்கை.

தலைவியொருத்திக்கு உடல் நலம் குறைந்தது. அவளுடைய தாயர் கட்டும் கழங்கும் பார்த்து அவள் நோயை அறிய விரும்பு கின்றனர். வேலன் மூலமாக வெறியயர்தல் நிகழ்த்தி அந்நோ யினைத் தீர்க்க முயற்சிக்கின்றனர். அவர்களுடைய ஏற்பாட்டின் படி வெறியயர் களத்தில் வேலன், முருகன் பெயரை வாழ்த்தித் தன்மேல் முருகன் வந்துற்றதாக ஆடுகின்றான். அவ்வேலை குறிஞ்சி

22. தொல். பொருள். நச்., 60: 1—2,
23. குறுந்., -3: 3—4.
24. அகம்., 98,

நிலத்தில் உள்ள ஆடவரும் பெண்டிரும் முருகன் புகழைப் பாடி, குரவைக் கூத்து ஆடுகின்றனர். வெறியாடும் வேலன் அத்தலைவிக்கு உண்டாகிய நோய் முருகனால் உண்டாயிற்று என்று சொல்லி அந் நோய் தீர்க்க முருகனுக்குரிய பூக்களைக் கொடுத்து அத்தலைவியின் கூந்தலிலே முடிக்கச் செய்கின்றான். இதனை,

> ''மின்னுநிமிர்ந் தன்ன வேலன் வந்தெனப்
> பின்னுவிடு முச்சி அளிப்பா னாதே''[25]

என்ற நற்றிணைப் பாடற் பகுதியால் அறியலாம்.

இத்தகைய வெறியாடலைத் தலைவியின் காதலை வெளிப்படுத்து கின்ற ஓர் உத்தியாகக் கையாண்டனரோ என்று எண்ணத் தோன்றுகிறது. ஐங்குறுநூற்றின் வெறிப்பத்து இத்தகைய எண்ணத்தைத் தோற்றுவிக்கின்றது. தலைமகளுக்கு ஏற்பட்ட நோயினைக் கண்டு இது எதனால் ஏற்பட்டது என்பதை அறிந்து கொள்ளச் செவிலி வேலனைக் கேட்கத் துணிகின்றாள். அச்செவிலி யின் காதில் விழும்படியாக தோழி தலைமகளுக்குச் சில செய்தி களைக் கூறுகின்றாள். 'நாம் எய்தியுள்ள துயரத்தை நம் அன்னை அறியமாட்டாள். வெறி அயர்தற்கு வேலனைத் தருவித்துள்ளாள். ஆயினும், அவ்வேலன், மணம் கமழுகின்ற மலைநாடனுக்கும் நமக் கும் உள்ள நட்பினை அறிவானோ, அறியமாட்டான்'[26]

செவிலி, வெறியயர்ந்தபின்னரும் உண்மை தெரியாமல் வருந் தினாள்- ஆகையினால் தோழி அவளிடம் தலைவியின் காதலை அறி வித்தல் வேண்டும் எனக் கூறுகின்றாள். இதனை,

> ''அறியா மையின் வெறியென மயங்கி
> அன்னையு மருந்துய ருழந்தன ளதனால்
> எய்யாது விடுதலோ கொடிதே நிரையிதழ்
> ஆய்மல ருண்கண் பசப்பச்
> சேய்மலை நாடன் செய்த நோயே''[27]

---

25. நற்., 51: 6—7.
26. ''நம்முறு துயரம் நோக்கி யன்னை
 வேலற் றந்தன ளாயினவ் வேலன்
 வெறிகமழ் நாடன் கேண்மை
 அறியுமோ தில்ல செறியெயிற் றோயே''—ஐங். 241.
27. ஐங்., 242.

பின்னர் அச்செவிலித்தாயிடம், 'அன்னாய்! இவளுடைய புது மலர் போலும் குளிர்ந்த கண்கள் தனிமையுற்றுக் கலுழ்தற்கேது வாகிய நோய்க்குக் காரணம், மிளகு வளரும் மலையின் கண் உறையும் கடவுளைப் பரவி வெறியயர்தலல்லது பிறிதியாதும் அறியாத வேலனைக் கேட்டு, அவன் வெறியென்று கூறும் இயல்பினனாகலின்' வெறியெடுத்தல் வேண்டும் என்றாகை, நீ அவன் சொல்வதையே மனத்திற் கொள்ளா நின்றாய்; இவள் உள்ள நோய்க்கு மருந்து வெறியன்று எனத் தெளிவாயாக'[28] என எடுத்துக் கூறி வெறி விலக்குகின்றாள்.

தலைவனுடைய குன்றத்தை வேலன் பாடவில்லை என்றால் அவனால் பயன் ஏதும் இல்லை என்பதைச் செவிலியின் காதில் விழுமாறு தோழி பேசுகின்றாள். இதனைக்,

"குன்றம் பாடா னாயின்
என்பயஞ் செய்யுமோ வேலற்கவ் வெறியே"[29]

என வரும் பாடற் பகுதியால் அறியலாம்.

'பொய்த்தல் இல்லாத மரபினையும் உணர்க்கண் வாழும் முதுமையுடைய வேலன், கழங்கு நிறுத்தி, அதன் கண் தான் வழிபடுதெய்வம் வரப் பண்ணிப், பின்னர் அதற்குக் கண்ணத்தை அணிந்து, வெறியாடி, இவளை அணங்கியோன் முருகனாவான் என்று மொழிவானாயின், இவளை உண்மையில் களவொழுக்கத்தால் மெலியச் செய்த தலைமகற்கு அவ்வெறியாட்டு உரித்தாங் கொல்லோ? கூறுக'[30] எனத்தோழி, செவிலித் தாய் வெறியாடலுக்கு ஏற்பாடு செய்வதைத் தலைவனுக்கு அறிவுறுத்துகின்றாள்.

---

28. "கறிவளர் சிலம்பிற் கடவுட் பேணி
அறியா வேலன் வெறியெனக் கூறும்
அதுமனங் கொள்குவை யன்னையிவள்
புதுமலர் மழைக்கண் புலம்பிய நோய்க்கே" — ஐங்., 243.

29. ஐங்., 244 : 3—4.

30. "பொய்யா மரபி னூர்முது வேலன்
கழங்குமெய்ப் படுத்துக் கண்ணந் தூக்கி
முருகென மொழியு மாயின்
கெழுதகை கொல்லிவ ளணங்கி யோற்கே"
—ஐங்., 245.

தோழியே, 'வெறிசெறித் தனனே வேலன்'[31] என்பதைத் தலைமக்களுக்கும் தெரியப்படுத்துகின்றாள். 'கன்னத்தை அணிந்து வெறியாடும் வேலன், தலைவியை அணங்கியோன் முருகன் என்று கூறுவானாயின் அம்முருகு மலைநாடனுடைய பெயராகுமோ!'[32] எனக்கேட்டு வேலனால் உண்மையை உரைக்க இயலாது என்பதைத் தெளிவுபடுத்தி விடுகின்றாள்.

இவ்வாறு வேலனுடைய முயற்சியினால் தலைவிக்கு உற்ற நோயை அறிய முடியாது என்பதைத் தோழி நகை படக் கூறும் பாடல் வருமாறு:

"பெய்ம்மணல் முற்றங் கவின்பெற வியற்றி
மலைவான் கொண்ட சினைஇய வேலன்
கழங்கினா னறிகுவ தென்றால்
நன்றாலம்ம நின்றவிவ ளலனே,"[33]

'தலைவிக்கு உண்டான நோயின் காரணம் முருகன்' என வேலன் சொன்னதை அன்னை உண்மையென்று நம்பிவிடுகிறாள். அன்னையின் அறியாமையும், வேலனது பொய்மையும், தோழிக்கு நகைப்பூட்டுகின்றன.[34]

நோய் முருகனால் வந்தது என்று கழங்கு கூறியதாக வேலன் கூறினமையால் அக்கழங்கினைப் பார்த்து,

"பொய்படு பறியாக் கழங்கே மெய்யே
மணிவரைக் கட்சி மடமயி லாலுநம்
மலர்ந்த வள்ளியங் கானங் கிழவோன்

31. ஐங்., 245 : 1.
32. "அன்னை தந்த தாகுவ தறிவென்
பொன்னகர் வரைப்பிற் கன்னந் தூக்கி
முருகென மொழியு மாயின்
அருவரை நாடன் பெயர்கொலோ வதுவே"
— ஐங்., 247.

33. ஐங்., 248.
34. "பெய்ம்மணல் வரைப்பிற் கழங்குபடுத் தன்னைக்கு
முருகென மொழியும் வேலன் மற்றவன்
வாழிய விலங்கு மருவிச்
சூர்மலை நாடனை யறியா தோனே" — ஐங்., 249

ஆண்டகை விறல்வே லல்லனிவள்
பூண்டாங் கிளமுலே யணங்கி யோனே''[35]

எனக் கூறுகின்ருள்.

இவ்வாறு ஐங்குறு நூற்றின் வெறிப்பத்து வெறியாடலின் படிநிலே வளர்ச்சிகளே ஒவ்வொன்ருகக் கூறுகிறது. வெறியாடலின் நோக்கம்; அது நிகழ்ந்த பின்னும் உண்மை தெளியாமை; இறுதியில் தோழியே தலேவியின் காதலேக் கூறிவிடுதல் ஆகிய செய்திகளேக் கொண்டு நோக்குமிடத்து இவ்வெறியாட்டு தலேவியின் காதலே அறிந்து கொள்ள அமைக்கப்பட்ட ஓர் உத்தி என்பது புலனுகும்.

வெறியாடல் மிகுதியும் பரவியிருந்தது என்பதனே அகத் துறைப்பகுதியில் சுட்டியதோடன்றிப் புறத்திணே இயலிலும் தனித்தொரு துறையாகத் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். இதனே,

'வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்
வெறியாட் டயர்ந்த காந்தளும்''[36]

என்பதனுல் அறியலாம்.

''வெறியாடுபவனே வேலன் எனவும் படிமத்தான் எனவும் கூறி, அவனே 'முருகன்' எனவே கருதிப் போற்றுவது மக்கள் வழக்காறு. இன்று ஐயப்பன் நோன்பு இருப்பவர்களேயும் 'ஐயப்பன்' என்றே கருதிப் போற்றுகிருேம் அல்லவா? இது போன்ற தொன்மைமிக்க வழக்காறு அது. எனவே ''முருகனே அவனது பக்தனுகிய முருகனிடம் வேலன் ஆற்றுப்படுக்கும்' சடங்கே 'வெறியாட்டு' என்பது பெறப்படும். பிறகு ஆற்றுப் படுத்தப்பட்ட அம் முருகன் அடியாரின் நோய் தணிவிக்க வழி வகுப்பான் என்பது மக்களின் நம்பிக்கை. இச்சமுதாய வழக் காற்றில் 'முருகாற்றுப்படுத்தல்' நாடு முழுவதும் இருந்ததே, நக்கீரர் 'முருகாற்றுப்படை' எனத் தலேப்பிடக் காரணமாயிற்று. சங்க இலக்கியத்தில் வெறியாட்டு பற்றி வருமிடங்களில் எல்லாம் இம் 'முருகாற்றுப்படை' பற்றி அறியலாம். எனவே, ஏனைய ஆற்றுப்படைகளினினும் மேலாக, 'முருகாற்றுப் படை' என்ற

35. ஐங்., 250
36. தொல். பொருள். நச்., 60:1—3.

தொடரே சங்க காலத்ததாகப் படுகிறது. நடுநிலை நோக்கும் தற்சிந்தனையும் உடைய அறிஞர்கள் மேலும் இதுபற்றி ஆராய்தல் தகும். முருகனை அன்பரிடம் ஆற்றுப்படுப்பதைப்போல, அன்பரை முருகனிடம் ஆற்றுப்படுப்பதையும் 'முருகாற்றுப்படை என்ற நாடறிந்த தொடரால் சுட்டினார் நக்கீரர் எனலாம்.'[37]

இதனால் திருமுருகாற்றுப்படையில் சுட்டப்படுகிற வெறியாட்டு அகத்திணையிலும் புறத்திணையிலும் சுட்டப்படுகின்ற வெறியாடல்களினின்றும் வேறானது என்பது போதரும்.

'வேலன் என்னும் பெயருடைய பூசாரி சாமி ஏறப்பெற்று வெறியாடல் புரிந்து நடக்கப் போகின்ற நிகழ்ச்சிகளையே கூறுகின்றான். அவன் பேச்சினை நம்பியே திருமண நிகழ்ச்சிகளும் நல்ல நேரமும் உறுதிசெய்யப்படும்[38] என்பர் கே.ஏ.நீலகண்டசாஸ்த்திரி. எனவே வேலன் வெறியாட்டைத் தெய்வம் பற்றி வந்த நிமித்தமாகக் கொள்வதில் தவறில்லை.

இவ்வேலன் வெறியாட்டு தமிழ்நாட்டில் மிகப்பழங்காலத்தில் வழங்கிய தெய்வவழிபாடாகும் என்பதற்குத் தொன்மையான இலக்கண நூலான தொல்காப்பியத்துள்ளும் சங்க இலக்கியங்களிலும் வரும் குறிப்புக்களைப் பார்த்தோம். இந்த வேலன் வெறியாட்டுப் பற்றிய செய்திகள் பிற்காலத் தமிழ் நூல்களிலும் காணப்படுகின்றன. எனினும் உண்மையில் இந்த ஆட்டம் பிற்காலத்தில் தமிழ்நாட்டில் நிகழ்ந்ததாகத் தெரியவில்லை. ஆனால் மலையாள நாட்டில் வேலன் வெறியாட்டம் தொடர்ந்து நிகழ்ந்து வருவதாகப் பி. எல். சாமி குறிப்பிடுகின்றார்[39]

"தற்காலம் மலையாள நாட்டில் வேலன்மார் என்ற இனத்தினர் செய்யும் தெய்வ ஆட்டங்களிலும் தெய்வத்தைச் சாந்தி செய்யும் சடங்குகளிலும் சங்க காலத் தமிழகத்தில் நடந்த வேலன் வெறியாட்டத்தின் வழிபாட்டு முறைகள், மரபுகள் காணப்படு

37. தமிழண்ணல், பத்துப்பாட்டுத்திறன், பத்துப்பாட்டு, பக்க எண்.இல்லை.

38. K. A. Nilakanta Sastry, The Sangam age, p 64.

39. பி. எல். சாமி, மலையாள நாட்டில் வேலன் ஆட்டம்', வ. சுப்பையாபிள்ளை பவள விழா மலர், பக். 153-164.

கின்றன வேலன் வெறியாட்டம் தமிழகத்தில் மறைந்து போக மலையாள நாட்டில் எஞ்சியிருப்பது மிகவும் வியப்புக்குரிய தாகும்.''[40]

''தொல்காப்பியப் புறத்திணையியலில் வெட்சித் திணைக்குரிய துறைகளுள் ஒன்றாக வேலன் வெறியாட்டம் கூறப்பட்டுள்ளது கவனிக்கத்தக்கது. 'வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன் வெறியாட்டயர்ந்த காந்தாள்' என்று கூறப்பட்டுள்ளது. வேலன் வெறியாட்டயர்ந்த காந்தளுக்கு மிகவும் பொருத்தமான பாடல்கள் சங்க நூல்களில் காணப்படவில்லை. உரையாசிரியர் களும் காட்டவில்லை. ஆதலின், புறத்திணையில் வரும் வேலன் வெறியாட்டு தொல்காப்பியருக்குப்பின் வழக்கு அருகிவிட்ட தெனக் கருதலாம். வெறிக்கூத்திற்கும் இடையே புறத்துறைகளைக் கூறிய நச்சினார்க்கினியர் வேலன் வெறியாட்டு வள்ளிக்கூத்திற்கும் அகத்திணைக்கே சிறப்பானதாக இருப்பினும் புறத்திணையிலும் சிறுபான்மை வரும் என்று கூறுவதைக் காணலாம்.''[41]

'வேலன்'ஆட்டம் வேத்தியல் கூத்து அன்றென்றும் கருங்கூத்து என்றும் கூறியுள்ளார்.வேத்தியலின் வழுவித் தன்னுறுதொழிலாய் வருதலின் வழுவாயின என்று கூறியுள்ளார். நச்சினார்க்கினியர் கூறும் கருத்தை ஆராய்ந்தால் வேலன் வெறியாட்டு, பொது மக்களுக்குரிய கூத்தாக இருந்தது என்று கருதவேண்டும். போருக் குப் புறப்படுமுன் அரசன் கொற்றவையை வழிபடுவது போலப் பொதுமக்கள் வேலன் வெறியாட்டை வெற்றி தருவதற்காக நடத்தினரென்று தெரிகின்றது. போருக்குச் செல்லும் முன்னர் விரிச்சி பார்க்க வேலன் செங்கால் வெட்சிப் பூவையும் தினையை யும் தூவி மறியின் குருதியைத் தெளிக்கக் குறிகண்டதைத் தகடூர் யாத்திரை கூறியுள்ளது. வேலன் வெறியாட்டிற்குக் காந்தட்பூச்சூடி ஆடினதால் காந்தள் எனப்பட்டதாகக் கருதப் படுகின்றது. காந்தள் செடியின் வேர் இன்றும் மலையாளத்தில் மந்திர தந்திரத்திற்குப் பயன்படுத்துவது கவனிக்கத்தக்கது முருகனைப் போர்த் தெய்வமாகச் சங்க நூல்கள் குறிப்பிடுவதால் கொற்றவையை வழிபட்டது போல் வெற்றிக்காக முருகனை வேலன் வழியாக வழிபட்டனர் என்றே கொள்ள வேண்டும்.''[42]

40. மேலது., ப. 153.
41. மேலது.,
42. மேலது , பக், 153-154.

''சங்க காலத்தில் வேலன் இழைத்த களத்தை இன்று தமிழகத்தில் காணமுடியாது. ஆனால், மலையாள நாட்டில் (North Malabar) இன்றும் வேலன் அமைக்கும் களத்தைக் காணலாம், மற்றும் மலையாளத்து வேலன் தெய்வ சாந்திக்காகச் செய்யும் பல வழிபாட்டு முறைகள். சடங்குகள் சங்க காலத்தில் வேலன் வெறியாட்டில் நடந்த செய்திகளோடு ஒத்திருப்பது கவனிக்கத் தக்கதாகும். மலையாள நாட்டில் வேலன் செய்யும் களவழிபாட்டையும் ஆடும் தெய்வ ஆட்டங்களையும் இரண்டு ஆண்டுகள் ஆராய்ந்துள்ளேன்; நிழற்படமெடுத்துள்ளேன். வேலன்சொல்லும் மந்திரங்களை ஒலிப்பதிவு செய்துள்ளேன். மலையாள நாட்டில் வேலன்மார் செய்யும் தெய்வசாந்தி வழிபாடுகள் சங்க காலத்து வேலன் வெறியாட்டின் எஞ்சிய கூறுகளே என்பது நன்கு தெளிவாகின்றது. இந்தத் தெய்வ ஆட்டங்களை ஆண்டுதோறும் குறிப்பிட்ட நாட்களில் வேலன்மார் முதலிய திராவிட இனக்குடியினர் ஆடிவருகின்றனர். இவர்கள் பகவதி, பத்ரகாளி விட்ணுமூர்த்தி முதலிய தெய்வங்களின் கோலங் கொண்டும் ஆடுவதுண்டு. தெய்வக் கோலம் பூண்டு ஆடும் ஆட்டத்தை மலையாளத்தில் 'தெய்யாட்டம்' என்று கூறுவர். 'கோலங் கட்டியாடுதல்' என்றும் சொல்வர். கோலங்கட்டி ஆடும் வழக்கமுடைய வடக்கு மலையாள நாட்டுப்பகுதிக்குக் 'கோலத்து நாடு' என்று பெயரும் வழங்கும். கோலம் என்பது ஒப்பனையாகும். பல்வேறு நிறச் சாயங்களை முகத்திலும் உடம்பிலும் அழுத்தமாகப் பூசிக் கொண்டு மூங்கில் பிளாச்சுகளாலும் தென்னை ஓலையாலும் வேய்ந்த தடுக்குகளை அணிந்து கோலஞ்செய்து மலையாளப் பூசாரிகள் பல்வேறு தெய்வ உருவம் கொண்டு ஆடுவர்.''[43]

'வேலன் வழிபட்ட களமே பிற்காலத்தில் பலவகையான எந்திரங்களாக மாற்றப்பட்டுத் தாந்திரீக வழிபாட்டில் சக்தி வாய்ந்தவைகளாகக் கருதப்பட்டு இன்று சங்கராச்சாரியார்களும் வழிபடும் முறையாக உயர்ந்துவிட்டது என்பதை உணர வேண்டும். முருகனை ஆரியர் தங்கள் தெய்வமான கந்தனோடு ஒன்றுபடுத்திய போது வேலன் வழிபாட்டிலிருந்து சிலவற்றை எடுத்துக் கொண்டு கலப்பு வழிபாட்டைப் படைத்தனர் என்பதில் ஐயமில்லை.'[44]

---

43. மேலது., ப. 154.
44. மேலது., ப. 164.

**கூடலிழைத்தல்**

கூடலிழைத்தல் 'நிமித்தம் பார்க்கும் குறி' என்று கூறுவர். 'தலைவனைப் பிரிந்த மகளிர் அவன் வரும் நிமித்தமறியத்தரையில் சுழிக்கும் சுழிக்குறி'[45] எனத் தமிழ்ப் பேரகராதி கூடலிழைத் தற்குப் பொருள் கூறுகின்றது. சங்க இலக்கியங்களில் அக நானூற்றிலும் கலித்தொகையிலும் கூடலிழைத்தல் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன.

தலைவனைப் பிரிந்த தலைவி ஒவ்வொரு நாளும் வட்டங்கீறிப் பார்த்துத் தலைவன் பிரிந்த நாட்களை எண்ணி எண்ணி வருந்து வாள். அங்ஙனம் கீறிய வட்டங்களே தலைவன் பிரிந்த நாள்களின் எண்ணிக்கையை அறிவுறுத்துவனவாக அமையும். அவன் நினை வால் அன்பு மீதூர, அவன் தோற்றுவித்த செய்குறி ஆகிய வட் டத்தைச் சுவரோரத்தில் நின்று எண்ணும் போழ்து அவள் சொரி யும் துன்பக் கண்ணீர் அச்சுவரையும் நனைத்து விடும். இச் செய்தியை,

> ''செய்குறி ஆழ்வைகறேு றெண்ணி
> எழுதுசுவர் நனைந்த அழுதுவார் மழைக்கண்''[46]

என அகநானூறு கூறுகின்றது.

தலைவி தன் வீட்டினுள்ளே கூடலிழைத்துத் தலைவனைக் கூட முடியுமா? என ஆராய்கின்றாள். அக்கூடலில் ஒரு பாகத்தை இழைத்த அளவிலே அவ்வாராய்ச்சிக்குப் பிறிதோன்றாகிய வளர்வு தன்னிடத்தின் முழுதுங் கூடாத இளம்பிறையைக் காண்கின்றாள், கண்டு அஃது அவ்விசும்பிடத்தே பின்பு நிறைமதியாகி வருந்து மெனக் கூறுகின்றாள். இதனைக்

> ''கோவொய் கூடாப் பிறையைப் பிறிதொன்று
> நாடுவேன் கண்டனென் சிற்றிலும் கண்டாங்கே''[47]

என வரும் கலித்தொகை வரிகளில் கண்டு உணரமுடிகிறது.

---

45. தமிழ்ப்பேரகராதி, தொகுதி 1, ப: 1068.

46. அகம்., 351: 10-11.

47. கலித்., 142: 24-25.

இங்ஙனம் தலைவனைப் பிரிந்த தலைவி அவர் தம் வருகையினை அறியப் பார்க்கும் நிமித்தக் குறி பற்றிய செய்திகளைச் சங்க காலத்திற்குப் பின் வந்த ஐந்திணை ஐம்பது,[48] அப்பர் தேவாரம்,[49] திருக்கோவையார்,[50] சீவகசிந்தாமணி,[51] முத்தொள்ளாயிரம்,[52] நாச்சியார் திருமொழி,[53] தஞ்சைவாணன் கோவை[54], கம்பராமாயணம்,[55] அம்பிகாபதிக்கோவை[56] ஆகிய இலக்கியங்களில் விளக்கமாகக் காண்கின்றோம்.

---

48. "ஆழியாற் காணேமே யாம்"
ஐந்திணைஐம்பது, 43.
49. "மாடநீண் மருகற் பெருமான் வரிற்
கூடுநீ யென்று கூடலிழைக்குமே"
——அப்பர் தேவாரம், 5: 5-202-8.
(திருமுறை, பதிகம், பாட்டு எண்)
50. "ஆழி திருத்தச் சுழிக்கணக்கு ஓதி"
—திருக்கோவையார், 186.
51. "முத்தவார் மணன்மேல் அன்றுங்கணி யிழையாள் ஆழியிழைத்தாளே"
—சிந்தாமணி, 103.
52 "கூடப்பெறுவனேற் கூடென்று கூடலிழைப்பாள்"
—முத்தொள்ளாயிரம் 82
53. "வசுதேவர் தங்கோமான் வரின்கூடிடு கூடலே"
—— நாச்சியார் திருமொழி; 3.
54. "வரற்கால மென்றென் றெணப்பல கூடல் வளைந்து"
—— தஞ்சைவாணன் கோவை, 413.
55. "குழைத்த பூங்கொம் பனையொருத்திகூடலையிழைத்தனள்"
——கம்பராமாயணம், உண்டாட்டுப்படலம்,33
56. "வளைத்துக் கிடந்தவரி மணற்கூடலும் வண்ணமெல்லாம்"
——அம்பிகாபதிக்கோவை, 322.

# முடிவுரை

1) 'நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தமும்' என்னும் வைப்பு முறையினைக் கொண்டு மூவகை நிமித்தவகைகளுள்ளும் நாள் நிமித்தமே முதன்மையானது என்பது போதரும். நாள் நிமித்தம் என்பது நாள்மீன் கோள்மீன் ஆகியவற்றின் நிலைகளை மையமாக வைத்துக் கணிக்கப் படுகின்றது. இலக்கிய வழக்கினைக் கொண்டு வெள்ளி மீனை மழைக்கோள் என்று சொல்லுதல் பொருந்தும்.

2) புள் நிமித்தம் போலத் தனிமனிதர்க்கே அன்றி எரிகொள்ளி வீழ்தலும், சனிமீன் புகைதலும் வெள்ளி தென்புலம் படரு

தலும் ஒரு நாட்டுக்கே வரவிருக்கும் தீமையை உணர்த்தும் நிமித்தங்களாகும்.

3) நாள்மீனையும் கோள்மீனையும் கொண்டு ஒருவருடைய வாழ்நாளையே கணிக்கின்ற அளவுக்குப் பண்டைத் தமிழர்கள் வானியல் அறிவுபெற்ற சோதிட நூல் வல்லாராய் விளங்கினர்

4) மக்களுடைய வாழ்வில் மிகவும் சிறப்புக்குரிய மணவிழா வெள்ளி திங்களோடு உரோகிணி கூடிய நன்னாளில் நடத்தப் பெற்றது.

5) கரிகாற் பெருவளத்தான் தான் பிறக்கின்ற காலத்துப் பிறவாது நல்லமுகூர்த்தம் வருமளவும் தாயுடைய வயிற்றிலே இருந்து பிறந்தான் என முடத்தாமக்கண்ணியார் பாடுவதிலிருந்து நல்லநாள் பார்த்தலில் நம் முன்னோருக்கு இருந்த நம்பிக்கை தெற்றெனப் புலப்படும்.

6) கடல் மீது மீன்பிடிக்கச் செல்லும் பரதவர், வள்ளலிடம் பரிசில் பெறச் செல்லும் பாணர் ஆகியோரும் நன்னாள் பார்த்து தம் முயற்சியை மேற்கொண்டனர் என்பது நாள் நிமித்தம் பற்றிய ஆய்வின் மூலம் கிடைக்கின்ற பேருண்மையாகும்.

7) சங்க இலக்கியத்தில் 'புள்' என்பது மூவகைப் பொருள் நிலைகளில் ஆளப்பட்டிருக்கின்றது. அவை : (அ) பறவைகளைக் குறித்தல் (ஆ) பொதுவாக நிமித்தங்களைக்குறித்தல்; (இ) பறவைகள் பற்றிய நிமித்தங்களைக் குறித்தல் என்பன.

8) முதலில் பறவைகளால் நிமித்தம் பார்க்கும் வழக்கம் உண்டானமையின் அப்பறவைகளைக் குறிக்கும் 'புள்' என்னும் பெயரால் அது வழங்கப் பெற்று அப்பால் வேறுபல வகை நிமித்தங்களுக்கும் அதுவே பெயராக வழங்கலாயிற்று.

9) சங்க இலக்கியத்தில், காக்கை கரைதல், காக்கை பலியுணவு உண்ணுதல், குயில் பயிற்றல், நாரை உயரப் பறத்தல் ஆகியன நன்னிமித்தங்களாகவும், ஆந்தைஅலறுதல் தீ நிமித்தமாகவும் காட்டப்பட்டுள்ளன.

10) நற்பக்கமிருந்து பல்லி ஒலித்தல், ஒந்தியைக் காணுதல், ஆமா புல் மேய்தல் ஆகியன விலங்குகள் பற்றி வந்த நன்னிமித்தங் களாகும். நண்பகற் போதில் வண்டு முரலுதல், யானை துதிக் கையைத் தரையில் வைத்து உறங்குதல், குதிரை கதியின்றிக் கிடத்தல், நரி ஊளையிடுதல் ஆகியன தீநிமித்தங்களாகும். விலங்குகள் பற்றிய நிமித்தங்களில் பல்லி பற்றிய நிமித்தங் களே மிகுதியும் சுட்டப்படுகின்றன. சூழ்நிலைக்கு ஏற்பப் பல்லி சொல் நல்நிமித்தமாகவும் தீநிமித்தமாகவும் கொள்ளப் படுகிறது. பல்லி சொல் மனிதர்க்கேயன்றிப் பன்றி போன்ற அஃறிணை உயிர்களுக்கும் நிமித்தமாய் அமைவதைக் காண முடிகின்றது.

11) உன்னம் தழைத்திருத்தல், வேங்கை பூத்து நிற்றல், மலர்கள் மலர்தல் ஆகிய நன்னிமித்தங்களாகவும், உன்னம் கரிந்து காட்டுதல், மரங்கள் வற்றித்தீப்பிடித்தல்ஆகியன தீநிமித்தங் களாகவும் கொள்ளப்பட்டன.

12) 'விரிச்சி' என்பதற்கு 'நிமித்தம்', 'நற்சொல் கேட்டல்' என இருவகைப்பொருளுண்டு. வருங்காரியத்தை முன்னரே தெரிந்து கொள்ள விரிச்சி கேட்கின்ற வழக்கம் பழந்தமிழரி டம் இருந்தது.

13) மாந்தர் எதிர்ப்படுதல், கண் துடித்தல், கனவு காண்டல், பெண்டிர்க்கு வளைசெறிதல் ஆகியனவும், நிமித்தங்களாக நம்பப்பட்டன.

14) கட்டுப்பார்த்தலும் கழங்கு பார்த்தலும் நிமித்தங்களோடு தொடர்புடையனவே. தெய்வம் பற்றிய நிமித்தங்களுள் ஒன்றாக வேலன் வெறியாட்டினைக் கொள்ளுதல் ஏற்புடையதே யாகும்.

# துணை நூற்பட்டியல்

**தமிழ் நூல்கள்:**


1. அகத்தியலிங்கம், ச., (பதி.) ஆ.) — தமிழக பழங்குடி மக்கள்
மொழியல் துறை ஆராய்ச்சி
மாணவர் வெளியீடு-
சிவகாமி அச்சகம்,
அண்ணாமலைநகர்,
1972.

2. அகத்தியர்., — பஞ்ச பட்ச சாஸ்திரம்
இரத்தின நாயகர் & சன்ஸ்,
பி., (பதி. ஆ.),
சென்னை,
1973.

3. .................. — அகநானூற்றுச் சொற்
பொழிவுகள்
கழக வெளியீடு,
சென்னை,
1969,

4. .................. — அம்பிகாவதிக் கோவை
கழக வெளியீடு,
சென்னை,
1962.

5. ஆசிரியக் குழுவினர், — பாட்டும் தொகையும்
எஸ். ராஜம் வெளியீடு,
சென்னை,
1958.

6. இராகவையங்கார், மு., — தொல்காப்பியப் பொருளதிகார
ஆராய்ச்சி
மு.ரா. நாராயணஐயங்கார்,
(பதி. ஆ.).,
மானாமதுரை,
1960.

7. இராகவையங்கார், ரா, — பெரும்பாணாற்றுப்படை ஆராய்ச்சியும் உரையும்
அண்ணாமலை பல்கலைக்கழக வெளியீடு, அண்ணாமலைநகர்,
சென்னை, 1958,

8. இராசமாணிக்கனார், மா, — தொல்காப்பியர் கால ஆராய்ச்சி,
பாரி நிலையம், (வி.உ.),
சென்னை,
1973.

9. இராமகிருஷ்ணன், எஸ், — இந்தியப் பண்பாடும் தமிழரும்,
மீனாட்சி புத்தக நிலையம்,
மதுரை,
1971.

10. இன்னாசி, சூ , — பத்துக் கட்டுரை,
தமிழரசன் பதிப்பகம்,
பாளையங்கோட்டை,
1977.

11. ......................., — ஐங்குறு நூறு,
பொ.வே. சோமசுந்தரனார் உரை
கழக வெளியீடு,
சென்னை,
966.

12. ......................., — ஐங்குறு நூற்றுச் சொற்பொழிவுகள்,
கழக வெளியீடு,
திருநெல்வேலி,
1965.

13. — ஐந்திணை ஐம்பது,
கழக வெளியீடு.
சென்னை,
1971.

14. ஐயனாரிதனார், — புறப்பொருள் வெண்பாமாலை,
கழக வெளியீடு,
சென்னை,
1969

14. கந்தகிரிதாசன். சகுனங்களும் பலன்களும், ஸ்ரீ இந்து பப்ளிகேஷன், சென்னை, 1979.

15. கனகசபை, வி, ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகம், அப்பாதுரை, கா., (மொ.பெ.ஆ.) கழக வெளியீடு, சென்னை, 1956.

16. கந்தசாமி, (சோ.ந.) தமிழும் தத்துவமும், மணிவாசகர் நூலகம், சிதம்பரம், 1976

17. கந்தையாபிள்ளை, ந.ச, தமிழர் சமயம் எது? முத்தமிழ் நிலையம், சென்னை, 1947.

18. கம்பர், கம்பராமாயணம்—பாலகாண்டம் வை.மு.கோ.பதிப்பு, சென்னை, 1973.

19. கலித்தொகை, நச்சினார்க்கினியருரையும், பொ.வே. சோமசுந்தரனார் எழுதிய விளக்கமும், கழக வெளியீடு, சென்னை, 1969

20. கிருஷ்ணமாச்சாரிய சுவாமிகள் (பதி.ஆ.), நாலாயிர திவ்வியப்பிரபந்தம் இரத்தின நாயகம் அண்ட் ஸன்ஸ், வெளியீடு சென்னை, ஆண்டு இல்லை.

21. குஞ்ஞுன் பிள்ளை, இளங்குளம், பண்டைய கேரளம், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1970.

22. ............................ குறுந்தொகைச் சொற்பொழிவுகள், கழக வெளியீடு, திருநெல்வேலி, 1957.

23. கைலாசபதி, க, பண்டைத்தமிழர் வாழ்வும் வழிபாடும், மக்கள் வெளியீடு, சென்னை, 1978.

24. கோதண்டபாணி பிள்ளை, கு, திருமுருகாற்றுப்படைத் திறன், கழக வெளியீடு, சென்னை, 1972.

25. கோபாலகிருஷ்ணக் கோன், இ. மா., (பதி.ஆ) மதுரைத் தமிழ் பேரகராதி—முதல்பாகம் மதுரை, 1956.

26. சஞ்சீவி, ந, சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணைகள், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை 1973.

27. சாமி, பி. எல், சங்க இலக்கியத்தில் புள்ளின விளக்கம், கழக வெளியீடு, சென்னை, 1976.

28. சாமி, பி. எல், சங்க இலக்கியத்தில் விலங்கின விளக்கம், கழக வெளியீடு, சென்னை, 1970.

29. சாமிநாதையர் உ.வே., (பதி.ஆ.), ஐங்குறுநூறு மூலமும் பழைய வுரையும், ஸ்ரீ தியாகராச விலாச வெளியீடு, கபீர் அச்சுக்கூடம், சென்னை, 1957, ஐந்தாம்பதிப்பு.

30. சாமிநாதையர், உ.வே. (பதி. ஆ.), குறுந்தொகை, ஸ்ரீ தியாகராச விலாச வெளியீடு, கபீர் அச்சுக்கூடம், சென்னை, 1962 4—ம் பதிப்பு.

31. சாமிநாதையர், உ.வே, (பதி.ஆ.)., சீவக சிந்தாமணி மூலமும் நச்சினார்க்கினியர் உரையும், சென்னை, 1964.

32. சாமிநாதையர். உ. வே, (பதி.ஆ.), பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினிய உரையும், ஸ்ரீ தியாகராச விலாச வெளியீடு சென்னை, 1961, ஆறும் பதிப்பு,

33. சாமிநாதையர், உ.வே, (பதி.ஆ.)., புறநானூறு மூலமும் உரையும், ஸ்ரீ தியாகராச விலாச வெளியீடு கபீர் அச்சுக்கூடம், சென்னை, 1963, ஆறும் பதிப்பு.

34. சிதம்பரனார். சாமி, எட்டுத்தொகையும் தமிழர் பண்பாடும், ஸ்டார் பிரசுரம், சென்னை, 1959.

35. சிதம்பரனார், சாமி, பழந்தமிழர்களின் வாழ்வும் வளர்ச்சியும், சிவகாமி சிதம்பரனார் (பதி.ஆ.), இலக்கிய நிலையம், சென்னை, 1964.

36. சுந்தரமூர்த்தி, இ, இலக்கியச் சுடர்,
அன்பு நூலகம்,
சென்னை,
1977.

37. சுந்தரமூர்த்தி, கோ.
தாமோதரன், தி. ரா. (மொ.பெ.ஆ.)., பண்டைத் தமிழ் இலக்கியக்
கொள்கைகள்,
சர்வோதய இலக்கியப்
பண்ணை (வி.உ.), மதுரை, 1977

38. சுப்ரமணிய பிள்ளை, கா. பழந்தமிழர் நாகரிகம் அல்லது
தொல்காப்பியப் பொருளதிகாரக்
கருத்து,
கழக வெளியீடு.
சென்னை, 1968. இ.ப.

39. சுப்பிரமணியன், ச. வே. இலக்கியக் கனவுகள்,
தமிழ்ப் பதிப்பகம்,
சென்னை, 1979.

40. சுப்பிரமணியன், ச.வே. காப்பியப் புனை-திறன்,
தமிழ்ப் பதிப்பகம்,
சென்னை, 1979.

41. சுப்பு ரெட்டியார், ந. தொல்காப்பியம் காட்டும்
வாழ்க்கை
பழனியப்பா பிரதர்ஸ்,
சென்னை, 1974

42. ........................ சுப்பையாபிள்ளை பவளவிழா மலர்
தமிழ்ச் சங்க வெளியீடு,
(கழக வெளியீடு),
சென்னை, 1973,

43. செயராமன், நா., சங்க இலக்கியத்தில்பாடாண்திணை,
குமரன் வெளியீடு,
மீனாட்சி புத்தக நிலையம்
மதுரை, 1975.

44. செல்வக்கணபதி, இரா., தமிழகக்கலைகளும் - பண்பாடும்,
ராஜம் கம்பெனி,
சென்னை, 1976.

45 சோமசுந்தரனுர்,பொ. வே. — ஐங்குறுநூறு, கழக வெளியீடு, திருநெல்வேலி, 1966 மதுரை 1977.

46. சோமசுந்தரனுர்,பொ. வே.(உ.ஆ.) — குறுந்தொகை, கழக வெளியீடு, சென்னை, 1965,

47. சோமசுந்தரனுர்,பொ. வே. (உ.ஆ.)., — சிறுபாணுற்றுப்படை, கழக வெளியீடு, சென்னை,1953

48. சோ. சுந்தரனுர்,பொ வே. (உ.ஆ )., — பட்டினப்பாலை, கழக வெளியீடு, சென்னை, 1965.

49. சோமசுந்தரனுர், பொ. வே.(உ.ஆ.)., — பரிபாடல் மூலமும் உரையும், கழக வெளியீடு, சென்னை, 1969

50. சோ. சுந்தர பாரதியார், — தொல்காப்பியம்-பொருட்படலம் அகத்திணை இயல், நாவலர் சோமசுந்தர பாரதியார் அறப்பணிக்குழு வெளியீடு, மீனுட்சி புத்தக நிலையம், (வி.உ ) மதுரை, 1964.

51. சோமுலெ, — தமிழ்நாடு மக்களின் மரபும் பண்பாடும் நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா 1974.

52. ..................... — தஞ்சைவாணன் கோவை, கழக வெளியீடு, சென்னை,196A.

53. தட்சிணுமூர்த்தி,அ., — தமிழர் நாகரீகமும் பண்பாடும், வெற்றிச் செல்வி வெளியீட்டகம், தஞ்சாவூர், 1973.

54. தண்டாயுதம், இரா., சங்கஇலக்கியம்(எட்டுத்தொகை), தமிழ்ப்புத்தகாலயம், சென்னை, 1978.

55. தமிழவன், நாட்டுப்புற நம்பிக்கைகள், சர்வோதய இலக்கியப் பண்ணை (வி.உ.) மதுரை, 1976.

56. தமிழண்ணல், குறிஞ்சிப்பாட்டு, இலக்கியத் திறனாய்வு விளக்கம் மீனாட்சி புத்தக நிலையம் (வி.உ.)., மதுரை. 1978.

57. தமிழண்ணல், சங்க இலக்கிய ஒப்பீடு முதற்பாகம் மீனாட்சி புத்தக நிலையம் (வி.உ.) மதுரை, 1975.

58. ........................ பத்துப்பாட்டு, (தமிழண்ணல் ஆய்வுரை) பெரியநாயகி அச்சகம் மதுரை, 1975

59. தமிழண்ணல், இலக்குமணன், எம்.எஸ், ஆய்வியல் அறிமுகம் சோலை நூலக வெளியீடு, மதுரை 1979,

60. தாயம்மாள் அறவாணன் புதிய கோலங்கள், கழக வெளியீடு சென்னை, 1973

61. திருநாவுக்கரசர் சுந்தரர் தேவாரப் பதிகங்கள், 4,5,6, &7, கழக வெளியீடு, சென்னை 1973.

62. துரை அரங்கசாமி, மொ.அ., அன்பு நெறியே தமிழர் நெறி, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 1972 ஐ.ப.,

63. துரைஅரங்கசாமி, மொ.அ,, தொல்காப்பிய நெறி, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 1963.

64. துரைசாமிபிள்ளை, ஒளவை; சு.,(உ.ஆ.) ஐங்குறு நூறு, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைநகர், 1978.

65. துரைசாமிப்பிள்ளை, ஒளவை. சு. (உ.ஆ,), புறநானூறு, முதற் பகுதி கழக வெளியீடு, திருநெல்வேலி, 1964.

66. துரைசாமிப் பிள்ளை, ஔவை, சு. (உ.ஆ.), புறநானூறு இரண்டாம் பகுதி, கழக வெளியீடு, சென்னை, 1968,

67. துரைசாமிப்பிள்ளை, ஔவை. சு.(உ.ஆ), பதிற்றுப்பத்து மூலமும் விளக்க உரையும், கழக வெளியீடு, சென்னை, 1968,

68. தொல்காப்பியம், பொருளதிகாரம், இளம்பூரண ருரை, கழக வெளியீடு, சென்னை, 1967.

69. தொல்காப்பியம்,பொருளதிகாரம் நச்சினார்க்கினியம், கழக வெளியீடு, திருநெல்வேலி, 1966.

70. தொல்காப்பியம், பொருளதிகாரம், பேராசிரியம் கழக வெளியீடு சென்னை 1969, மு. ப.

71. நற்றிணை, புலியூர்க்கேசிகன் உரை, பாரி நிலையம், சென்னை, 1974 இ. ப.

72. நற்றிணை நானூறு, அ. நாராயணசாமி ஐயர் உரை, கழக வெளியீடு, சென்னை, நா.ப., 1967.

73. நற்றிணைச் சொற்பொழிவுகள், கழக வெளியீடு, சென்னை, 1957.

74. நான்காவது கருத்தரங்கு மலர், இ. ப. த. ம., கேரளப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைச் சார்பு, வெளியீடு, 1972.

75. பத்தாவது கருத்தரங்கு, ஆய்வுக்கோவை, தொகுதி-2, இ. ப. த. ம. வெளியீடு, கோவை, 1978.

76. பாலசுந்தரன், தி. சு., சங்க நூற் கட்டுரைகள் அல்லது பழந்தமிழர் நாகரிகம், கழக வெளியீடு திருநெல்வேலி, 1966.

77. பாலசுந்தரம்பிள்ளை, தி.சு., பண்டைத் தமிழர் இன்பியல் வாழ்க்கை. கழகவெளியீடு, சென்னை, 1960.

78. பிள்ளை, கே.கே. தமிழக வரலாறு, மக்களும் பண்பாடும், தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1975

79. மறைமலையடிகள், முல்லைப்பாட்டு ஆராய்ச்சியுரை, கழக வெளியீடு, சென்னை, 1962.

80. மாணிக்கம், வ. சுப., தமிழ்க் காதல், பாரி நிலையம், சென்னை, 1975.

81. மாணிக்கவாசகச் சுவாமிகள், திருக்கோவையார், விசுவநாத சர்மா(பதி.ஆ) தஞ்சை சரசுவதி மகால், 1951.

82. மீனாட்சிசுந்தரனார், தெ பொ., தமிழும் பிற பண்பாடும்., நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட்லிட், சென்னை. 1973.

83. முத்துச்சண்முகன், வேங்கடராமன் சு., ஆய்வுக் கட்டுரை எழுதும் முறை முத்துப் பதிப்பகம், சர்வோதய இலக்கியப் பண்ணை (வி.உ.), மதுரை, 1976.

84. ...................... முத்தொள்ளாயிரம், கழக வெளியீடு, சென்னை, 1966.

85. மூன்றாவது ஆய்வுக் கோவை, இ.ப த ம., அண்ணாமலைப் பல்கலைக் கழகச் சார்பு வெளியீடு, அண்ணாமலை, 1971.

86. வானமாமலை, நா., தமிழர் பண்பாடும் தத்துவமும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிட்., சென்னை, 1978

87. வித்தியானந்தன், சு, தமிழர் சால்பு (சங்க காலம்), பாரி புத்தகப் பண்ணை, சென்னை, 1971.

88. விசுவநாதன், ஈ.சு, ஆய்வு நெறிமுறைகள், க்ரியா, சென்னை, 1976.

89. வேங்கடசாமி நாட்டார் ந.மு (உ.ஆ), அகநானூறு கழக வெளியீடு, சென்னை, 1970.

90. வேங்கடசாமி நாட்டார் ந.மு. (உ.ஆ.). சிலப்பதிகாரம் கழக வெளியீடு, சென்னை, 1966.

91. வையாபுரிப்பிள்ளை, எஸ்., சங்க இலக்கியம் (பாட்டும் தொகையும்), முதற்பகுதி, பாரி நிலையம், சென்னை, 1967.

92. வையாபுரிப்பிள்ளை, எஸ்., சங்க இலக்கியம் (பாட்டும் தொகையும்) இரண்டாம் பகுதி, பாரி நிலையம், சென்னை, 1967.

93. வையாபுரிப்பிள்ளை, எஸ்., தமிழர் பண்பாடு, தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1968, ஏழாம் பதிப்பு.

## ENGLISH BOOKS

94. Andenson, Jonathan & Durston, Berry H, *Thesis and Assignment writing*, Wiley Eastern, New Delhi, 1971.

95. Chidambaranatha Chettiar, A., *English — Tamil Dictionary Volume—II* University of Madras, 1964.

96. Meenakshi Sundaranar. T.P., *A History Of Tamil LITERATURE*, Annamalai University, Annamalai Nagar, 1965.

97. Nilakanta Sastri, K.A., *Sangam Literature — ITS Cults And Cultures*, Wathi Publications, Madras.

98. Pillay, K.K., *A Social History of the Tamils, Volume I.* University of Madras, Madras, 1975.

99. Ramasamy Sastry, K.S., *The Tamils and Their culture*, Annamalai Nagar, 1967.

100. Subramaniem, S.V. *Grammar of akanaanuru with Index* Department of Tamil, University of Kerala, Trivandrum, 1972.

101. Subramanian, N., *Sangam Polity*, Asia Publishing House, Bombay, 1976.

102. Thamizhannal, *Tradition and Talent in Canlam Poetry*, Madurai Publishing House, Madurai, 1976.

103. Young, Pauline V., *Scientific Social Sreys and Research*, Prentice—Hall of India, Private Limited, New Delhi, 1977 Fourth Edition.



## சுசீலா கோபாலகிருஷ்ணன்

இந்நூலாசிரியர் — மதுரை வடக்கு மாசி வீதி ஆயிரம் வீட்டு யாதவர் குலத்தைச் சேர்ந்தவரும், மதுரை இராமாயணச் சாவடியிலுள்ள கிருஷ்ணன் கோவிலின் முன்னாள் தர்மகர்த்தாவும், பழைய மருத்துவ, சோதிட ஏட்டுச் சுவடிகளைப் பதிப்பித்தவரும், புதுமண்டபத்தில் அச்சுக்கூடம், புத்தகக் கடை ஆகியவற்றின் உரிமையாளருமாய் விளங்கிய பெரியவர் திரு. குருசாமிக்கோனார் அவர்களின் பேத்தியாவார். இவரது பெற்றோர் திரு. வெள்ளைச்சாமிக்கோனார், திருமதி சுந்தரம்மாள் ஆவர்.

இவர் மதுரை டோக் பெருமாட்டி கல்லூரியில் 'பி.எஸ்·சி'. பட்டம் பெற்றார். திருமணத்திற்குப்பின், கணவர் டாக்டர் சொ. கோபாலகிருஷ்ணன் அவர்களின் தூண்டுதலில் மதுரை பாத்திமா கல்லூரியில் சேர்ந்து தமிழில் 'எம்.ஏ.' பட்டம் பெற்றார்.

1971-ஆம் ஆண்டுமுதல், மதுரையாதவர்கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிந்து வருகிறார்.

1979-80ஆம் ஆண்டு மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் 'சங்க இலக்கியத்தில் நிமித்தங்கள்' என்ற தலைப்பில் ஆய்வு செய்து 'எம்.ஃபில்.' பட்டம் பெற்றார். இப்பல்கலைக் கழகத்தின் மாலை நேரக் கல்லூரியில் பயின்று சமஸ்கிருதத்தில் 'டிப்ளமோ' பட்டம் பெற்றார். தொடர்ந்து 'நாட்டுப்புற நம்பிக்கைகள் — மதுரை மாவட்டம்' என்ற தலைப்பில் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் 'பிஎச்.டி.' பட்டத்திற்காக ஆய்வினை மேற்கொண்டுள்ளார்.

இது பாலாஜி பதிப்பக வெளியீடு-1